விலை: 30.00
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 புரட்டாதி 07 செவ்வாய்க்கிழமை (24.09.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 279

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

## நீதிமன்ற தீர்ப்பை மீறி

# நீராவியடி ஆலய வளாகத்தில் பிக்குவின் உடல் எரிப்பு

- பொலிஸாரின் உதவியுடன் பிக்குகள் அடாவடி
- பொதுமக்கள் மீது பொலிஸார் தாக்குதல்

(முல்லைத்தீவு)


***நீதிமன்றின் உத்தரவை மீறி நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளாகத்தில் பௌத்த பிக்குவின் உடல் எரிக்கப்பட்டுள்ளது.***

***பொலிஸாரின் பாதுகாப்புடன் பௌத்த பிக்குகள் மேற்படி அடாவடியில் ஈடுபட்டனர்.***

முல்லைத்தீவு பழைய செம்மலை நீராவியடி பிள்ளையார் ஆலய வளாகத்தினுள் விகாரை அமைத்து தங்கியிருந்த மேதாலங்கார கீர்த்தி தேரர் புற்றுநோய் காரணமாக கொழும்பில் கடந்த சனிக்கிழமை உயிரிழந்தார்.

அவருடைய உடலை முல்லைத்தீவு நீராவியடி பிள்ளையார் ஆலய வளாகத்தில் தகனம் செய்ய ஏற்பாடுகள் நடைபெற்றன.

இதனை அடுத்து பிள்ளையார் ஆலய பகுதி மக்கள் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்திற்கு சென்று, பௌத்த பிக்குவின் உடலை பிள்ளையார் ஆலய வளாகத்தினுள் தகனம் செய்வது இந்து மதத்தையும் பாரம்பரிய கோட்பாடுகளையும் அவமதிக்கும் செயற்பாடு எனவும் அதனால் குறித்த பகுதியில் 23



# பௌத்த பிக்குவின் அட்டகாசத்தைக் கண்டித்து முல்லையில் இன்று பாரிய பேரணி

## அனைவரையும் கலந்து கொள்ள மரபுரிமை பேரவை அழைப்பு

(முல்லைத்தீவு)

நீதிமன்ற கட்டளையை புறந்தள்ளி பிக்குவின் உடலை நீராவியடிப் பிள்ளையார் ஆலய தீர்த்தக் கரையில் தகனம் செய்தமையை கண்டித்தும் சட்டத்தரணியை தாக்கியதை கண்டித்தும் நீதித்துறையின் நம்பிக்கையீனத்தை வெளிப்படுத்தும் வகையில் இன்று முல்லைத்தீவில் பாரிய போராட்டம்முன்னெடுக்கப்படவுள்ளது.

தமிழர் மரபுரிமை பேரவை, நீராவியடி பிள்ளையார் ஆலய நிர்வாகம், வர்த்தகர் சங்கம், சட்டத்தரணிகள் மற்றும் பிரதேச மக்கள் இணைந்து இந்த போராட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

இன்று முற்பகல் 11 மணிக்கு முல்லைத்தீவு பழைய வைத்திய சாலை முன்பாக ஒன்றுகூடி, பேருந்து நிலையம் ஊடாக பேரணியாக முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் வரை சென்று, அங்கு கவனயீர்ப்பு போராட்டம் நடத்தப்படவுள்ளதுடன் ஜனாதிபதிக்கான மகஜர் மாவட்ட செயலரிடமும் ஐநா சபைக்கான மகஜரும் கையளிக்கப்படவுள்ளது.

குறித்த போராட்டத்தில் வட மாகாணம் தழுவிய பணிப்புறக்கணிப்பில் ஈடுபடும் வடக்கு சட்டத்தரணிகள் குறித்த முல்லைத்தீவு போராட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

(ம-3,9,281)

### நீதிமன்றத்தை அவமதித்தவர்களை கைது செய்ய

# வட மாகாண சட்டத்தரணிகள் இன்று பணிப்புறக்கணிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நீதிமன்றில் விடுத்த உத்தரவையும் மீறி செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலய தீர்த்த வளாகத்தில் தேரரின் பூதவுடல் தகனம் செய்யப்பட்டதைக் கண்டித்து இன்று வட மாகாணத்திலுள்ள சட் 23

### சாவகச்சேரியில்

# குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி சரசாலைப் பகுதியில் உள்ள வயல் கிணற்றில் இருந்து நேற்று 23

# சட்டத்தரணி, பூசகர் மீது தாக்குதல் நடத்திய பிக்குகள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில், நீராவியடி பிள்ளையார் ஆலய வளாகத்திற்குள் நீதிமன்ற உத்தரவை மீறி பௌத்த பிக்குவின் உடலைத் தகனம் செய்த சமயத்தில், பௌத்த பிக்குகளால் சட்டத்தரணி சுகாஷ், ஆலய பூசகர் மற்றும் இரு இளைஞர்கள் தாக்கப்பட்டுள்ளனர். 23

# முல்லைத்தீவு நீதிமன்றில் ஞானசார தேரர்

(முல்லைத்தீவு)

புற்றுநோய் காரண 23

# வழமைபோல கூட்டமைப்பை காணவில்லை

(யாழ்பாணம்)

முல்லைத்தீவு செம்மலை நீராவியடிப்பிள்ளையார் ஆலயத்தில் உயிரிழந்த 23

# இலங்கையில் ஆமதுறுவுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும்

### சட்டத்தரணியை அதட்டிய பிக்குகள்

(முல்லைத்தீவு)

இலங்கையில் ஆமதுறுவுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும் என்று உங்களுக்கு தெரியாதா? அதட்டும் தொனியில் சட்டத்தரணியை கேட் 23

# ஆதாரமில்லா குற்றச்சாட்டு முன்வைத்தால் பதில் கூறமாட்டேன்

## இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் முன்னாள் பணிப்பாளருக்கு ரணில் பதிலடி

(கொழும்பு)

இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக் குழுவின் முன்னாள் பணிப்பாளர் தில்ருக்ஷி டயஸ் விக்ரமசிங்க விவகாரத்தில் ஜனாதிபதி என்மீது முன்வைத்த குற்றச்சாட்டுக்கள் முற்றிலும் உண்மைக்கு புறம்பான வையாகும் எனத் தெரிவித்த பிரதமர் ரணில் விக்ரமசிங்க, என் மீது ஆதார மில்லாத குற்றச்சாட்டுக்களை முன் வைத்தால் பதில் கூறிகொண்டிருக்க மாட்டேன் எனவும் குறிப்பிட்டார்.

இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக் குழுவின் முன்னாள் பணிப்பாளர் தில்ருக்ஷி டயஸ் விக்ரமசிங்க விடயத்தில் பிரதமர் மீது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குற்றம் சுமத்தியிருந்த நிலையில் அதற்கு பதில் தெரிவிக்கும் வகையில் அவர் நேற்று விடுத்திருந்த விசேட அறிவித்தலில் இவற்றை பிரதமர் சுட்டிக்காட்டியிருந்தார்.

இலங்கையின் அரசியல் அமைப்பு பிரகாரம் உயர் நீதிமன்ற நீதியரசர் நியமனத்தில் ஜனாதி பதிக்கு பரிந்துரை செய்யும் அதி காரம் பிரதம நீதியரசருக்கும் சட்டமா அதிபருக்கு மட்டுமே உள் ளது. இந்த விடயத்தில் நான் எந்த வொரு சந்தர்ப்பத்திலும் அரசியல் அமைப்பிற்கு அப்பால் சென்று செயற் பட்டதில்லை. அரசியல் அமைப் பிற்கு அப்பால் சென்று செயற்பட்ட வர்கள் குறித்து உயர் நீதிமன்ற தீர்மானங்கள் உள்ளன. அந்த நிலைமைக்கு நான் விழவில்லை. தில்ருக்ஷி விக்ரமசிங்கவிற்கோ அல்லது வேறு எந்தவொரு நப ருக்கோ உயர் நீதிமன்ற நீதியரசர் பதவிக்கு யாரையும் நியமிக்கக் கோரி எந்தவொரு கடிதமும் நான் அனுப்பியதில்லை.

அவ்வாறு இருக்கையில் நான் அவ்வாறு கடி தம் அனுப்பியதாக கூறும் காரணி கள் உண்மைக்கு புறம்பானவை. நான் அவற்றை நிராகரிக்கிறேன் எனவும் அவர் இதில் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

# 35 மாணவர்களுக்கு மேல் வகுப்பில் இணைக்க வேண்டாம்

## வடக்கு ஆளுநர் பணிப்புரை



(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்திலுள்ள பாட சாலை மாணவர்களுக்கான அனு மதியினை கல்வியமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைவாக மேற் கொள்ளவேண்டும் என்றும் ஒவ் வொரு வகுப்பு பிரிவிலும் எக்கார ணம் கொண்டும் 35 மாணவர் களுக்கு மேல் இணைத்துக் கொள் ளக்கூடாது எனவும் ஆளுநர் சுரேன் ராகவன் பணிப்புரை விடுத்துள் ளார். இது தொடர்பில் அவர் வெளி யிட்ட அறிக்கையில்,


2020ஆம் ஆண்டில் மாணவர் களை இணைத்துக்கொள்வதற் கான செயற்பாடுகள் தற்போது பாடசாலைகளினால் முன்னெடுக் கப்பட்டுவரும் நிலையில் கடந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட பாடசாலை அனுமதி தொடர்பான விடயங்கள் கவனத்தில் கொள்ளப் பட்டது. இதன்போது, பாடசாலை களில் மாணவர்களை இணைத் துக்கொள்ளும் போது வகுப்பு பிரிவு களில் அனுமதிக்கப்பட்ட மாண வர் தொகையை விட அதிகமாக காணப்பட்டதுடன், அனுமதியின்றி மேலதிக பிரிவுகளும் இருந்தமை அவதானிக்கப்பட்டுள்ளது.

எனவே பாடசாலைகளில் மாண வர்களுக்கான அனுமதியினை மேற்கொள்ளும் போது மாகாண கல்வி அமைச்சினால் அனுமதிக் கப்பட்ட வகுப்பு பிரிவுகள் மட்டுமே அனுமதிக்கபடவேண்டும் என்றும் ஒவ்வொரு வகுப்பு பிரி விலும் எக்காரணம் கொண்டும் 35 மாணவர்களுக்கு மேல்இணைத் துக் கொள்ளக்கூடாது என்றும் ஆளுநர் பணிப்புரை வழங்கியுள் ளார்.

இவ்விடயம் தொடர்பாக தனிப் பட்ட கவனத்தினை செலுத்தி மாகாண பணிப்பாளர் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஊடாக சகல பாடசாலை அதிபர் களிற்கும் தெரிவித்து இவ்விடயத் தினை 2020ம் ஆண்டில் கண் டிப்பாக நடைமுறைப்படுத்துமாறும் இது தொடர்பான அறிக்கையினை சகல கல்விப் பணிப்பாளர்களிட மிருந்தும் பெற்று சமர்ப்பிக்கு மாறும் ஆளுநர் கேட்டுக்கொண் டுள்ளார். (ஞா)

# தெரிவுக்குழு விசாரணை அறிக்கை விரைவில் பகிரங்கப்படுத்தப்படும்

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவிப்பு



(கொழும்பு)

கடந்த ஏப்ரல் மாதம் இடம் பெற்ற ஈஸ்டர் தாக்குதலை அடுத்து மே மாதம்22 ஆம் திகதி சபாநாயகர் கரு ஜெயசூரிய வினால் நியமிக்கப்பட்ட பாராளு மன்ற தெரிவுக்குழு விசாரணை கள் தொடர்பிலான அறிக்கை கூடிய விரைவில் பகிரங்கப்படுத் தப்படும் என பிரதமர் ரணில் விக் கிரமசிங்க தெரிவித்தார். இந்த தாக்குதல் சம்பவங் களை தொடர்ந்து நாட்டின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ள அதே வேளை சுற்றுலாப் பயணி களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையிலான பல திட்டங்களை யும் முன்னெடுத்துள்ளதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

சுற்றுலாத்துறையின் எதிர் காலம் என்னும் தொனிப்பொரு ளில் நேற்று திங்கட்கிழமை சினமன் கிராண்ட் ஹோட்டலில் இடம் பெற்ற மாநாட்டில் அதிதி யாக கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் சுற்றுலாத் துறை அபிவிருத்தி வனஜீவராசி கள் மற்றும் கிறிஸ்தவ சமய அலு வல்கள் அமைச்சர் ஜோன் அமர துங்க உட்பட சுற்றுலாத்துறையில் முக்கிய பங்காற்றும் சர்வதேச பிரதி நிதிகள் பலரும் கலந்து கொண்ட துடன், நாட்டின் சுற்றுலாத் துறை வளர்ச்சிக்காக முன்னெடுக்க வேண் டிய விடயங்கள் தொடர்பில் பல ஆலோ சனைகளும் முன் வைக் கப்பட்டது. (ஞா)

# ஜனாதிபதித் தேர்தலில் நிச்சயம் மாற்றம் ஏற்படும்

## என்கிறார் ரில்வின் சில்வா



(கொழும்பு)

இம்முறை ஜனாதிபதித் தேர்த லில் நிச்சயம் மாற்றம் ஒன்று ஏற் படும் என்று எதிர்பார்ப்பதாக மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் டில்வின் சில்வா தெரிவித்தார்.

அத்துடன் மக்கள் மத்தியில் எதிர்காலம் பற்றி காணப்படும் பயத்தை கோத்தபாய ராஜபக்ஷ வினாலோ, ஐக்கிய தேசிய கட்சி யினாலோ நீக்க முடியாது. இந்த இரு தரப்புமே பல வருடங்கள் ஆட்சி யிலிருந்து என்ன செய்தார்கள் என் பதை மக்கள் நன்கு அறிவார்கள் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

பொலன்னறுவையில் இடம் பெற்ற கட்சி மாநாட்டில் கலந்து கொண்டுஉரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். (ஞா)

# நீதிமன்ற அவமதிப்பில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட வேண்டும்

## சிரேஷ்ட சட்டத்தரணி ஸ்ரீகாந்தா வலியுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

நேற்றையதினம் முல்லைத் தீவு செம்மலை நீராவியடி பிள்ளை யார் கோவில் முன்பாக நீதிமன்ற கட்டளையை கால்களால் மிதித்து சில பௌத்த பிக்குகளும் அவர் களின் தோழர்களும் நிகழ்த்திய அட்டகாசமான சட்ட மீறல்கள் பொலி ஸாரின் ஒத்துழைப்புடன் வெற்றி கரமாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்சம்பவங்களில் ஈடுபட்ட அனைவரும் கைது செய் யப்பட்டு நீதிமன்றில் நிறுத்தப்பட வேண்டுமென்று நாம் கோரு கிறோம். இல்லையேல் நீதி நிலை நாட்டப்படும் வரை தொடர்ச்சியான போராட்டம் ஒன்றினை இந்த நாடு சந்திக்கும் என தமிழீழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகம் சிரேஷ்ட சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா தெரிவித்துள்ளார். (ஞா)


## வேலை வாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கும் கட்டிட நிர்மாணக் கம்பனிக்கு

- Technical Officer
- Supervisor.

பதவிகளுக்கு ஆட்கள் தேவை. தகுதி உடையவர்கள் சுயவிபரக் கோவையை பின்வரும் மின் அஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும்.

petroengineeringpvtltd@gmail.com



## துயர் பகிர்கின்றோம்

அமரர்

### தம்பிப்பிள்ளை பரராசசிங்கம்



அகில இலங்கை சைவ மகா சபையின் பொதுச் செயலாளரும் காரைநகர், ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரியுமான பரா.நந்தகுமார் அவர் களின் அன்புத் தந்தையின் மறைவு குறித்து ஆழ்ந்த துயரமடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந் தியடையப் பிரார்த்திப்பதுடன் அவரை இழந்து தவிக் கும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங் களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(C-7684) தமிழர் சமஉரிமை இயக்கம்.


### இறுதி அறிக்கையை சமர்ப்பிப்பது குறித்து

# பாராளுமன்ற தெரிவுக்குழு இன்று கூடி ஆராய்கிறது

(கொழும்பு)


கடந்த ஏப்ரல் மாதம் இடம்பெற்ற ஈஸ்டர் தாக்குதலை அடுத்து மே மாதம் 22 ஆம் திகதி சபாநாயகர் கரு ஜெயசூரியவினால் நியமிக்கப் பட்ட விசேட தெரிவுக்குழு தமது விசாரணை களை முடித்துள்ள நிலையில் இன்று தெரிவுக் குழு கூடி அவர்களின் இறுதி அறிக்கையை சமர்ப்பிப்பது குறித்து ஆராயவுள்ளனர்.

தெரிவுக்குழு தலைவர் பிரதி சபாநாயகர் ஆனந்த குமாரசிறி தலைமையில் இன்று பாராளுமன்ற கட்டடத்தொகுதியில் இந்த சந்திப்பு இடம்பெற வுள்ளது.

இதுவரை காலமாக தாம் மேற்கொண்ட விசாரணை நடவடிக்கைகள் மற்றும் பெற்றுக் கொண்ட சாட்சியங்கள் அனைத்தையும் கொண்டு இறுதி அறிக்கையை தயாரிக்கவும் அந்த அறிக் கையை அடுத்த மாதம் (ஒக்டோபர்) முதல் வாரத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவும் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக தெரிவிக்குழு உறுப் பினர் ஆனந்த குமாரசிறி உறுதிப்படுத்தினார். (ஞா)

# காற்றாலைகள் மூலம் வெளியிடப்படும் அக ஒலி அலைகளால் மனிதர்களுக்கு பாதிப்பு

## சர்வதேச ஆய்வில் தகவல்



(யாழ்ப்பாணம்)

காற்றாலைகள் மூலம் வெளியிடப்படும் அக ஒலி அலைகளால் மனித உடலுக்குப் பாதிப்பு ஏற்படுவதாக கனடா ஒன்றாரியோ பல்கலைக்கழகத்தால் நடத்தப்பட்ட ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

காற்றாலைகள் மூலம் மின்சாரம் பெறும் திட்டங்கள் பல்வேறு நாடுகளிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் அந்தந்த நாடுகள் அதற்குரிய பாதுகாப்பானதும் முன்னாயத்த நடவடிக்கைகளைப் பின்பற்றியே ஆரம்பித்துள்ளன.

இவ்வாறான நிலையில் யாழ் மாவட்டத்தில் மறவன்புலவுப் பகுதியில் அமைக்கப்பட்டு வரும் காற்றாலைத் திட்டமானது சர்வதேச காற்றாலை ஆய்வு நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களால் அங்கீகரிக்கப்பட்ட அளவுப் பிரமாணங்களுக்கு ஏற்ப அமைக்கப்படுகிறதா? என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவின் தேசிய சுகாதார மருத்துவ ஆராய்ச்சிச் சபை சுமார் 3 மில்லியன் டொலர்கள் நிதி ஒதுக்கீட்டில் காற்றாலையால் மனிதனுக்கு ஏற்படும் பாதிப்புத் தொடர்பில் ஆராய்ந்தது.

அவ்வாறு ஆய்வு செய்ததன் மூலம் காற்றாலையால் எழுப்பப்படும் அகஒலி அலைகள் மனித உடலுக்கு அதிகம் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியவை என்பது தெரியவந்துள்ளது.

ஒரு காற்றாலை அமைக்கும் போது சர்வதேச ஆய்வுகளின் பிரகாரம் குடியிருப்புக்களுக்கும் காற்றாலைகளுக்குமான இடைவெளி சுமார் 800 மீற்றர் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால் மறவன்புலவில் அமைக்கப்பட்டு வரும் காற்றாலை குறித்த இடைவெளியில் அமைக்கப்படுகிறதா? என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை மறவன்புலவில் அமைக்கப்பட்டுவரும் காற்றாலை தொடர்பில் அப் பிரதேச மக்களால் எழுப்பப்படும் பல்வேறு சந்தேகங்களை தீர்ப்பதற்கு குறித்த பகுதியில் தொழில்நுட்ப ஆய்வு மேற்கொள்ளப்பட்டதா? என்ற கேள்வியும் முன்வைக்கப்படுகிறது.

மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் காற்றாலை அமைத்தால் தூக்கமின்மை. தலையிடி, ஒருவித தோல் நோயும் ஏற்படக்கூடிய ஆபத்துக்கள் இருப்பதாகச் சர்வதேச ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

2013 ஆம் ஆண்டு கனடா நாட்டின் குடும்ப நலச் சங்கத்திற்கு அந்நாட்டின் பல்கலைக்கழகமான ஒன்றாரியோ பல்கலைக்கழகத்தால் சமர்ப்பிக்கப்பட்ட காற்றாலை தொடர்பான ஆய்வறிக்கையில் மக்களின் சிறந்த சுகமான வாழ்வியலை காற்றாலை சீர்குலைப்பதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு உலக நாடுகள் பல காற்றாலை தொடர்பில் இன்றும் பல ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்ற நிலையில் மறவன் புலவுப் பகுதியில் மக்களின் விருப்பங்களை மீறி மக்களுக்கு காற்றாலை மூலம் பல நன்மை கிடைக்கும் எனக் கூறுபவர்கள் முதலில் மக்களின் சந்தேகங்களை விஞ்ஞான ரீதியில் தீர்க்க வேண்டும்.

இதனை விடுத்து மின்சாரம் வழங்குகிறோம், அபிவிருத்தி செய்கிறோம் எனக் கூறி மக்களின் இயல்பு வாழ்க்கையைப் பாதிக்கும் வகையில் உரிய தெளிவுபடுத்தல் இன்றிக் குறித்த பகுதியில் திட்டங்களை மேற்கொள்வது எவ்வகையில் நியாயமாகும் எனவும் மக்கள் வாழும் பகுதியில் காற்றாலைகளை அமைப்பதைக் காலம் தாழ்த்தாது உரிய தரப்பினர் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் பலரும் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-10)

---

### சிலாவத்துறையில் கடற்படையால் கையகப்படுத்தப்பட்டுள்ள

# பொதுமக்களின் காணி விடுவிக்கப்பட மாட்டாது

## தேசிய பாதுகாப்புக்கு அவசியம் என மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் கடற்படை அதிகாரி தெரிவிப்பு



(நெளுக்குளம்)

முசலி பிரதேசசபைக்குட்பட்ட சிலாவத்துறையில் கடற்படையால் கையகப்படுத்தப்பட்டுள்ள 28 ஏக்கர் காணி தேசிய பாதுகாப்பிற்கு அவசியம் என்பதால் அக்காணி விடுவிக்கப்படாது எனவும், அவற்றை சுவீகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் சிலாவத்துறை கடற்படை பொறுப்பதிகாரி வவுனியா மனிதவுரிமை ஆணைக்குழு விசாரணையில் தெரிவித்துள்ளார்.

மன்னார், முசலி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சிலாவத்துறையில் அமைந்துள்ள கடற்படை முகாம் காணியை விடுவிக்குமாறு அப்பகுதி மக்கள் செய்த முறைப்பாடு மீதான விசாரணை நேற்று வவுனியா மனிதவுரிமை ஆணைக்குழுவில இடம்பெற்றது. இதன்போதே கடற்படை பொறுப்பதிகாரி மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் மேலும் தெரியவருகையில்.

மன்னார். முசலி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சிலாவத்துறை பகுதியை சேர்ந்த மக்கள் யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்து புத்தளம், அநுராதபுரம், குருநாகல், கற்பிட்டி போன்ற பிரதேசங்களில் வசித்து வந்தனர். இந்த நிலையில் யுத்தம் நிறைவடைந்த பின்னர் குறித்த மக்கள் சிலாவத்துறை பகுதியில் மீள்குடியேற வந்த நிலையில் அம் மக்களின் நிலங்களை கையகப்படுத்தி கடற்படையினர் பாரிய முகாம் ஒன்றினை அமைத்திருந்தனர்.

தபாலகம், ஆரம்ப சுகாதார நிலையம், பாடசாலை, நூலகம், இந்துக் கோவில், பள்ளிவாசல் உட்பட மக்களின் 28 ஏக்கர் காணிகளை கடற்படை கையகப்படுத்தியிருந்த நிலையில், கடந்த வருடம் தங்கள் பூர்வீக நிலங்களை கடற்படையினர் விடுவித்து அருகில் உள்ள அரச காணிகளில் முகாம் களை அமைக்குமாறு கோரிக்கை விடுத்து சிலாவத்துறை கடற்கரை முகாமுக்கு முன்பாக மக்களால் சாத்வீக போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

அதன் ஒரு பகுதியாக கடந்த பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் உதவியுடன் மன்னார் மனித உரிமை ஆணைக்குழுவின் உப காரியாலயத்தில் தமது காணிகளை கடற்படை விடுவித்து தருவதற்கான ஏற்பாடுகளை செய்து தருமாறு கோரி முறைப்பாட்டு மனு ஒன்று கையளிக்கப்பட்டது.

குறித்த முறைப்பாடு தொடர்பாக கவனம் செலுத்திய மனித உரிமைகள் ஆணைக்குழு குறித்த காணி விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட முசலி பிரதேச செயலாளர், சிலாவத்துறை கடற்படை பொறுப்பதிகாரி மற்றும் வட மேல் கடற்படை கட்டளை தளபதி முள்ளிக்குளம், பாதிக்கப்பட்ட மக்கள் சார்பாக பிரதிநிதிகளையும் அழைத்து வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழு காரியாலயத்தில் விசாரணைகளை முன் னெடுத்திருந்தது.

விசாரணையின் போது குறித்த காணியானது தேசிய பாதுகாப்பிற்கு அவசியமானது என்பதனால் குறித்த காணியை சட்ட ரீதியாக கடற்படைக்கு உரித்தாக்குவதற்கான செயற்பாடுகள் இடம் பெறுவதாகவும், குறித்த கடற்பகுதியூடாக போதைப் பொருட்கள் பாரிய அளவு கடத்தப்படுவதாக தெரிவித்த கடற்படை அதிகாரி தேசிய பாதுகாப்புக்கு இக்காணிகள் அவசியம் என தெரிவித்தார்.

அதேநேரத்தில் பாதிக்கப்பட மக்களுக்கு நட்டஈட்டினை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு தருவதாக பிரதேச செயலகம் சார்பாக தெரிவிக்கப்பட்டது.

இருப்பினும் பாதிக்கப்பட்ட மக்கள் சார்பாகவும், மெசிடோ நிறுவனம் சார்பாகவும் முன்னிலையான சட்டத்தரணி அர்ஜுன், குறித்த காணிகள் மக்கள் பூர்வீகமாக வாழ்ந்தவை என்பதன் அடிப்படையில் விடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுத்ததுடன், வேறு அரச காணிகளை கடற்படை பயன்படுத்துமாறு கோரிக்கை விடுத்த போதிலும் கடற்படையினரால் குறித்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

இருப்பினும் பாதிக்கப்பட்ட மக்கள் சார்பாக ஆஜராகிய பிரதிநிதிகள் எக்காரணத்திற்காகவும் தாங்கள் பூர்வீகமாக வாழ்ந்த காணிகளை கடற்படையினருக்கு வழங்க முடியாது எனவும், காணிகளை பெற்றுக் கொள்ளும் வரை போராடப்போவதாகவும் தெரிவித்துள்ளனர். (9-250-299)

---



# 34 தொழிற்சங்கங்கள் போராட்டம் பத்தரமுல்லையில் பதற்றம்!

(பத்தரமுல்ல)

பத்தரமுல்ல குடிவரவு குடியகல்வு திணைக்களத்திற்கு முன்னால் நேற்றுக்காலை முதல் பதற்றமான சூழ்நிலை நிலவியது. இதன் காரணமாக பத்தரமுல்ல பிரதான வீதியின் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பளம் மற்றும் கொடுப்பனவுப் பிரச்சினைகளை முன்வைத்து இலங்கை அரச அதிகாரிகள், தொழிற்சங்கச் சம்மேளனத்தினர் நேற்றுத் திங்கட்கிழமை சுகவீன விடுமுறை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் காரணமாக குடிவரவு.குடியகல்வு திணைக்களத்தின் செயற்பாடுகளும் மந்த கதியில் இடம்பெற்றதால் அவ்விடத்திற்கு வந்த பொதுமக்கள் எதிர்ப்பில் ஈடுபட்டனர். இதனால் பதற்றமான சூழ்நிலை நிலவியது.

பொது நிர்வாக அமைச்சால் ஒரு தரப்பினருக்கு மாத்திரம் கொடுப்பனவுகளை அதிகரிப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள அமைச்சரவைப் பத்திரத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து 34 தொழிற்சங்கங்கத்தினர் நேற்று சுகவீன விடுமுறைப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த தொழிற்சங்க நடவடிக்கைக்கு கிராம உத்தியோகத்தர்கள் அபிவிருத்தி அதிகாரிகள், அரச முகாமைத்துவ உதவியாளர்கள் உள்ளிட்ட 34 தொழிற்சங்கங்களின் உறுப்பினர்கள் ஆதரவு வழங்கியதாக தொழிற்சங்கங்களின் தேசிய அமைப்பாளர் பீ.ஏ.பி. பஸ்நாயக்க தெரிவித்தார்.

பொது நிர்வாக அமைச்சின் நிர்வாக அதிகாரிகளுக்கு மாத்திரம் அதிகரித்த கொடுப்பனவுகளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளதன் ஊடாக அனைத்து அரச சேவையிலும் கடுமையான சம்பள முரண்பாடு ஏற்படக்கூடும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஹென்ரிக்ஸ் தோள்பட்டையில் வேண்டுமென்றே இடித்த கோலிக்கு

## ஐ.சி.சி கண்டனம்



ஹென்ரிக்ஸ் தோள்பட்டையில் வேண்டுமென்றே இடித்த இந்திய அணி கப்டன் விராட் கோலிக்கு தகுதியிழப்பு புள்ளி ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

இந்தியா - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான 3-வது இருபது-20 கிரிக்கெட் போட்டி பெங்களூரில் நேற்று முன்தினம் நடைபெற்றது. ரோகித் சர்மா ஆட்டமிழந்ததும் விராட் கோலி களம் இறங்கினார். வழக்கத்திற்கு மாறாக விராட் கோலி ஓட்டங்கள் அடிக்க திணறினார்.

அதேசமயத்தில் ரோகித் சர்மாவை வீழ்த்தி இடது கை வேகப்பந்து வீச்சாளரான ஹென்ரிக்ஸ் விராட் கோலிக்கு நெருக்கடி கொடுத்தார். இதனால் கோபம் அடைந்த விராட் கோலி ஒரு ஓட்டத்துக்கு ஓடும்போது பந்து வீசிய பின் ஆடுகளத்தில் நின்றிருந்த ஹென்ரிக்ஸ் மீது வேகமாக ஒரு இடி இடித்தார்.

இதை சற்றும் எதிர்பார்க்காத ஹென்ரிக்ஸ் எளிதாக எடுத்துக் கொண்டு சிரித்துக் கொண்டு சென்றுவிட்டார். அப்போது போட்டியை பார்த்துக் கொண்ட ரசிகர்கள், விராட் கோலிக்கு எப்படியும் அபராதம் விதிக்கப்படும் என்று கூறிக் கொண்டனர்.

அதன்படியே ஐசிசி விராட் கோலியை எச்சரித்ததுடன், தகுதி இழப்பிற்கான ஒரு புள்ளியையும் வழங்கியுள்ளது.

இதுகுறித்து ஐசிசி தனது இணைய தளத்தில் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் "இந்திய அணி கப்டன் விராட் கோலி எச்சரிக்கப்படுகிறார். அதேபோல் வீரர்கள் நன்னடத்தைக்கான விதி முறையில் முதல் லெவல் குற்றத்தை செய்ததற்காக தகுதி இழப்பிற்கான ஒரு புள்ளி வழங்கப்பட்டுள்ளது" என்று தெரிவித்துள்ளது.

விராட் கோலி இதற்கு முன் இதுபோன்று இரண்டு முறை தகுதி நீக்கத்திற்கான புள்ளிகளை பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# பான்பசிபிக் ஓபன் டென்னிஸ் நவோமி ஓசாகா 'சம்பியன்'



பான்பசிபிக் ஓபன் டென்னிஸ் போட்டியில் ஜப்பான் வீராங்கனை நவோமி ஓசாகா சொந்த மண்ணில் முதல்முறையாக பட்டத்தை வென்றுள்ளார்.

பான்பசிபிக் ஓபன் டென்னிஸ் போட்டி ஜப்பானில் உள்ள ஓசாகா நகரில் நடந்தது. இதில் நேற்று நடந்த பெண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப்போட்டியில் உலக தரவரிசையில் 4-வது இடத்தில் இருக்கும் ஜப்பான் வீராங்கனை நவோமி ஓசாகா, 41-ம் நிலை வீராங்கனையான ரஷ்யாவின் அனஸ்டாசியா பாவ்லிசென்கோவாவை சந்தித்தார். 69 நிமிடம் நடந்த இந்த ஆட்டத்தில் நவோமி ஓசாகா 6-2, 6-3 என்ற நேர்செட்டில் பாவ்லிசென்கோவாவை தோற்கடித்து சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார். 2016, 2018-ம் ஆண்டுகளில் இந்த போட்டியில் 2-வது இடம் பிடித்த நவோமி ஓசாகா சொந்த மண்ணில் முதல்முறையாக பட்டத்தை வென்றுள்ளார். இந்த ஆண்டில் நவோமி ஓசாகா வென்ற 2-வது பட்டம் இதுவாகும்.

இந்த ஆண்டு தொடக்கத்தில் நடந்த ஆஸ்திரேலிய ஓபனில் பட்டம் வென்று இருந்தார். 2017-ம் ஆண்டில் ஹாங்காங்கில் நடந்த போட்டியில் பாவ்லிசென்கோவாவிடம் கண்ட தோல்விக்கு பதிலடி கொடுத்த நவோமி ஓசாகா 470 தரவரிசை புள்ளியுடன் ரூ.1 கோடி பரிசு தொகையும் அள்ளினார். 2-வது இடம் பெற்ற பாவ்லிசென்கோவா ரூ.54 லட்சத்தை பரிசாக பெற்றார்.

வெற்றிக்கு பிறகு நவோமி ஓசாகா அளித்த பேட்டியில், 'இந்த போட்டியில் வென்றே ஆக வேண்டும் என்ற வெறியுடன் இருந்தேன். ஒவ்வொரு புள்ளியை பெறுவதிலும் மிகவும் கவனம் செலுத்த வேண்டும் என்பதை இந்த போட்டியில் இருந்து கற்றுக்கொண்டு இருக்கிறேன். இந்த வெற்றி எனது நம்பிக்கையை அதிகரித்து இருக்கிறது' என்று தெரிவித்தார்.

# சீன பகிரங்க பட்மின்ரன் போட்டியில் சம்பியனான கரோலினா மரின்



சீன பகிரங்க பட்மின்ரன் போட்டியில் ஸ்பெயின் வீராங்கனை கரோலினா மரின் சம்பியன் ஆகியுள்ளார்.

சீன பகிரங்க பட்மின்ரன் போட்டி சாங்ஜோவில் நடந்தது. இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று முன்தினம் நடந்த இறுதிப்போட்டியில் ஒலிம்பிக் சாம்பியனான ஸ்பெயின் வீராங்கனை கரோலினா மரின், தரவரிசையில் 4 ஆவது இடத்தில் உள்ள சீன தைபே வீராங்கனை தாய் யிங்கை சந்தித்தார்.

65 நிமிடம் நீடித்த இந்த ஆட்டத்தில் நடப்பு சம்பியன் கரோலினா மரின் 14-21, 21-17, 21-18 என்ற செட் கணக்கில் தாய் யிங்கை வீழ்த்தி சாம்பியன் பட்டத்தை தக்க வைத்தார்.

இதேவேளை ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப்போட்டியில் நம்பர் ஒன் வீரரான ஜப்பானின் கென்டோ மோமோதா 19-21, 21-17, 21-19 என்ற செட் கணக்கில் இந்தோனேஷியா வீரர் அந்தோணி சினிசுகாவை வீழ்த்தி சம்பியன் பட்டத்தை தனதாக்கியமையும் குறிப்பிடத்தக்கது.

## - இங்கிலிஷ் பிரிமியர் லீக் கால்பந்து -

# மான்செஸ்டர் யுனைடெட்டை வீழ்த்தியது வெஸ்ட் ஹாம்



இங்கிலீஷ் பிரிமீயர் லீக் கால்பந்தில் மான்செஸ்டர் யுனைடெட் அணியை 2-0 என வீழ்த்தியது வெஸ்ட் ஹாம்.

இங்கிலீஷ் பிரிமீயர் லீக்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் புகழ்பெற்ற அணியான மான்செஸ்டர் யுனைடெட் வெஸ்ட் ஹாம் அணியை எதிர் கொண்டது.

லண்டனில் வெஸ்ட் ஹாம் யுனைடெட் அணிக்கு சொந்த மான மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் வெஸ்ட் ஹாம் அணி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. ஆட்டத்தின் முதல் பாதி நேரம் முடிவதற்கு முந்தைய நிமிடத்தில் வெஸ்ட் ஹாம் அணியின் அண்ட்ரிய் ஹோர்மோலென்கோ கோல் அடித்தார். இதனால் வெஸ்ட் ஹாம் முதல் பாதி நேர ஆட்டத்தில் 1-0 என முன்னிலைப் பெற்றது.

2-வது பாதி நேர ஆட்டத்திலும் நீண்ட நேரமாக இரு அணி வீரர்களும் கோல் அடிக்க வில்லை. ஆட்டத்தின் 84-வது நிமிடத்தில் வெஸ்ட் ஹாம் அணியின் ஆரோன் கிரேஸ்வெல் ஒரு கோல் அடிக்க வெஸ்ட் ஹாம் 2-0 என மான்செஸ்டர் யுனைடெட் அணியை வீழ்த்தியது.

இந்தத் தோல்வியின் மூலம் மான்செஸ்டர் யுனைடெட் புள்ளிகள் பட்டியலில் தலா இரண்டு வெற்றி, தோல்வி, டிரா மூலம் 8-வது இடத்தில் உள்ளது. வெஸ்ட் ஹாம் அணி 3 வெற்றி, இரண்டு டிரா, ஒரு தோல்வியுடன் 11 புள்ளிகள் பெற்று 5-வது இடத்தில் உள்ளது.

மற்ற ஆட்டங்களில் லிவர்பூல் 2-1 என செல்சியையும், அர்செனல் 3-2 என அஸ்டோன் வில்லாவையும் வீழ்த்தியது. கிரிஸ்டோல் பேலேஸ் - வோல்வ்ஸ் அணிகளுக்கு இடையிலான ஆட்டம் டிராவில் முடிந்தது. (ம)

# இங்கிலாந்து இருபது- 20 கிரிக்கெட் அணியில் ஐந்து புதுமுகங்கள்



நியூசிலாந்து தொடருக்கான இங்கிலாந்து டி20 கிரிக்கெட் அணியில் ஐந்து புதுமுக வீரர்களுக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது.

இங்கிலாந்து அணி நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து ஐந்து போட்டிகள் கொண்ட டி20 கிரிக்கெட் தொடரில் விளையாடுகிறது. இதற்கான இங்கிலாந்து அணி நேற்று அறிவிக்கப்பட்டது. பென் ஸ்டோக்ஸ், ஜாப்ரா, பட்லர், ஜேசன் ராய் போன்ற முன்னணி வீரர்களுக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது.

ஐந்து புதுமுகங்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. தற்போது முடிவடைந்த டி20 பிளாஸ்ட் தொடரில் சிறப்பாக விளையாடி 549 ரன்கள் குவித்த 20 வயதேயான டாம் பான்டோன் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பான்டோனுடன் பேட் பிரவுன், லைவிஸ் கிரேகோரி, மேத்யூ பார்கின்சன், சாகித் மெஹ்மூத் ஆகியோரும் அணியில் இடம் பிடித்துள்ளனர்.

நியூசிலாந்து தொடருக்கான இங்கிலாந்து டி20 அணியில் இடம் பிடித்துள்ள வீரர்கள் விவரம்:-

1. மோர்கன், 2. பேர்ஸ்டோவ், 3. டாம் பான்டோன், 4. சாம் பில்லிங்ஸ், 5. பேட் பிரவுன், 6. சாம் குர்ரன், 7. டாம் குர்ரன், 8. ஜோ டென்லி, 9. லைவிஸ் கிரேகோரி, 10. கிறிஸ் ஜோர்டான், 11. சாகிப் மெஹ்மூத், 12. தாவித் மலன், 13. மேத்யூ பார்கின்சன், 14. அடில் ரஷித், 15. ஜேம்ஸ் வின்ஸ்.

# இந்தியாவிலிருந்து தாயகம் திரும்பியவர் கைது அழைத்துச் செல்ல வந்த மூவரும் அகப்பட்டனர்

(கரணவாய்)

கடல்மார்க்கமாக இந்தியாவிலிருந்து தாயகம் திரும்பிய நபர் ஒருவரும் அவரை அழைத்துச் செல்ல வந்த மூவரும் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலையைச் சேர்ந்த நபரொருவர் இந்தியாவிலிருந்து படகோட்டிகளுக்கு ஒன்றரை இலட்சம் ரூபாய் பணம் செலுத்தி கடல்மார்க்கமாக தாயகம் திரும்பினர்.

அவர் தொண்டைமானாறு கரையை வந்து சேர்ந்ததும் அவரை அழைத்துச் செல்ல திருகோணமலையில் இருந்து ஹயஸ் வானில் மூவர் வந்தனர்.

இந்திய எல்லையிலிருந்து இலங்கைக்குள் சட்டவிரோதமாக படகு ஒன்று செல்வதாக கடற்படையினரால் வல்வெட்டித்துறை பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து பொலிஸார் தொண்டைமானாறு பகுதியில் நின்ற வாகனம் ஒன்றைச் சோதனையிட்டனர்.

இதன்போது இந்தியாவிலிருந்து படகு மூலம் தாயகம் திரும்பியவரை அழைத்துச்செல்ல அவர்கள் வந்திருந்தமை தெரியவந்தது.

இதனையடுத்து இந்தியாவிலிருந்து தாயகம் திரும்பியவரும் அவரை அழைத்துச் செல்ல வந்த மூவரையும் வல்வெட்டித்துறை பொலிஸார் கைது செய்தனர். (இ-5-60)

# 'புதிய மழை' புத்தகக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

"புதிய மழை" புத்தகக் கண்காட்சியும் விற்பனையும் சங்கானையிலுள்ள கலாசார மத்திய நிலையத்தில் எதிர்வரும் 26,27 ஆம் திகதிகளில் இடம் பெறவுள்ளதாக யாழ்.மாவட்ட கலாசார அதிகார சபையின் மாவட்ட உத்தியோகத்தர் எஸ்.கிருஷ்ணகுமார் தெரிவித்தார்.

இலங்கையின் பல பாகங்களில் இடம் பெற்று வரும் புத்தகக் கண்காட்சியின் ஓர் அங்கமாக யாழ்.மாவட்டத்திலுள்ள எழுத்தாளர்கள், கலைஞர்களின் பதிப்புக்களைக் காட்சிப்படுத்தவும் விற்பனை செய்யவும் இக் கண்காட்சி இடம்பெறவுள்ளது.

எனவே இக் கண்காட்சியை அனைவரும் பார்வையிட்டுப் பயனடையுமாறு அவர் மேலும் கேட்டுக் கொண்டார். (இ-10)


## சிவபூமி அரும்பொருட் காட்சியகம்
## நாவற்குழி, யாழ்ப்பாணம்.
## அறிவித்தல்

சிவபூமி அறக்கட்டளையால் மூன்று மாடிகளை தளமாகக் கொண்டு நாவற்குழி ஏ9 வீதியில் உருவாக்கப்பட்டு வரும் சிவபூமி அரும் பொருட்காட்சியகம் எம் மக்களின் பாரம்பரியங்களையும், எம் மண்ணில் பணி செய்த சகல துறைசார்ந்த அறிஞர்களின் புகைப்படங்கள் மற்றும் எம் முன்னோர் பயன்படுத்தி இன்று அரிதாகிவரும் பொருட்களையும் உள்ளடக்கிய காட்சியகமாக உருவாகி வருகிறது. விரைவில் காட்சியகம் மக்கள் பாவனைக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

காட்சியகத்தில் காட்சிப்படுத்துவதற்குரிய பொருட்களை வழங்கி உதவுமாறு பணிவன்புடன் வேண்டுகிறோம்.

1. சகலதுறை கலைஞர்கள், படைப்பாளிகளின் புகைப்படங்கள்
2. பழைய வீட்டுத் தளபாடங்கள், பொருட்கள்
3. அரிதான எம் சார்ந்த புகைப்படங்கள்.
4. எம்முன்னோர்கள் பயன்படுத்திய வாகனங்கள்.
5. கோவில்களில் பயன்படுத்த முடியாத பழைய பொருட்கள்.
6. பாடசாலைகளைத் தோற்றுவித்த ஸ்தாபகர்களின் புகைப்படங்கள், விபரங்கள்.
7. விளையாட்டுத்துறையில் சாதனை நிலைநாட்டியவர்கள் படங்கள், விபரங்கள், மேலும் பாதுகாக்க வேண்டிய அரியவை.

நிர்வாக சபை, சிவபூமி அறக்கட்டளை,
தலைமை அலுவலகம், கோண்டாவில்.
தொலைபேசி: 021 222 7938

(396)


# 1 முதல் 9 வரை பிறந்தவர்களின் பொதுக்குணங்கள்

### 1.ஆதிக்கம் பெற்றவர்கள்

சிங்கம் போன்றவர்கள், பிறரை தங்கள் பக்கம் ஈர்த்து விடுவர். சுயநலவாதிகள் எனலாம். புலன் இச்சை ஆர்வமும் அதை அடக்கும் திறமையும் பெற்றவர்.

### 2.ஆதிக்கம் பெற்றவர்கள்

அன்பானவர். கோழை மனம் கொண்டவர். பெரிய கலைஞர்கள். சிந்தனை வயப்பட்டவர்கள். சுயநலவாதிகள். சதா ஏதேனும் சிந்தனை உண்டாகும். கடவுள் நம்பிக்கை உடையோர். மென்மையானவாதிகள். அமைதியானவர். கூச்சமுடையவர்.

### 3.ஆதிக்கம் பெற்றவர்கள்

ஆசான் யாருக்கேனும் அறிவுரை சொல்ல வேண்டும். இல்லை எனில் தலை வெடித்து விடும். பேராசிரியர்கள் மத ஈடுபாடு, பக்தி, தர்மசிந்தனை உடையவர்.

### 4.ஆதிக்கம் பெற்றவர்கள்

செல்வந்தர், புதுக்கருத்துக்கள் ஒருவர் ஒரு கருத்துச் சொன்னால் அதை மறுத்து இவர் வேறொரு கருத்துச் சொல்வார். பிடிவாதம் பெரிய ராஜ்ஜியத்தையும் இவர்கள் நிர்வகிக்க இயலும். அறிவு ஆற்றல் உடையவர்.

### 5.ஆதிக்கம் பெற்றவர்கள்

கலகலப்பானவர். சாதுர்ய பேச்சு, நிறைய நண்பர்கள் உடையவர், கவர்ச்சியானவர், சகலகலா வல்லவர். கணித மேதை, பெரும் தொழிலதிபர், நல்ல வியாபாரி.

### 6.ஆதிக்கம் பெற்றவர்கள்

சுகம், சுகம் ஆடம்பரம் உயிர் மூச்சு, கலைஞர், கவிஞராக இருப்பவர். அரசியல், பொதுத்தொண்டு ஆர்வம் உடையவர், நல்ல கவர்ச்சி உடையவர்.

### 7.ஆதிக்கம் பெற்றவர்கள்

ஞானி, விஞ்ஞானம், உலக அறிவு, படிப்பாளி, ஆன்மீக ஈடுபாடு, தத்துவம் இவரது குணம், பலமொழி கற்பதில் ஆர்வம்,கலைகளில் ஈடுபாடு உடையவர். திருமண விழாவில் கசப்பை உணர்வர்.

### 8.ஆதிக்கம் பெற்றவர்கள்

இயந்திர நுட்ப அறிவொளி, கடும் உழைப்பு, முரட்டு சுபாவம் கொண்டவர். பேச்சில் கடினம் இருக்கும். சண்டை வல்லுநர், சமூக வளர்ச்சி ஆர்வம் உடையவர். எதிரிகள் தொல்லை உடையவர்.

### 9.ஆதிக்கம் பெற்றவர்கள்

மாபெருஞ் சாதனையாளர், எதிரிகளை அடக்கி ஆள்பவர், பார்வையில் கம்பீரம் உடையவர், பேச்சு இனிமை,கோபம் பொல்லாதது.

# இராசி பலன்

**24.09.2019**

புரட்டாதி 7, செவ்வாய்க்கிழமை
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
தசமி பிற்பகல் 12.05 மணிவரை
புனர்பூசம் காலை 6.56 மணிவரை
பூசம் பின்னிரவு 5.41 மணிவரை
சுபநேரம் 10.32-12.02 மணிவரை
இராகுகாலம் 3.02-4.32 மணிவரை

வளவன்

கிரகநிலை: ராகு, சந், செவ், சூரி., புத.சுக், குரு, சனி, கேது

சந்திராஷ்டமம்: உத்திராடம்

**மேடம்** – சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம், பெற்றோரின் ஆதரவால் பெருமைகள் கூடும் நாள், போசன சுகமுண்டு.

**இடபம்** – தொழிலை விரிவுபடுத்த முற்படுவீர்கள், எடுத்த காரியங்களில் முன்னேற்றமுண்டு, வருமானம் திருப்தி தரும், உறவினர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**மிதுனம்** – நிலையான வருமானத்திற்கு வழி கிடைக்கும், நா வன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், தொழிலில் அதிகாரிகளின் பாராட்டுக் கிடைக்கும், பணப் பழக்கம் அதிகரிக்கும் நாள்.

**கடகம்** – வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், எப்படி நடக்குமோ என நினைத்த காரியம் நல்ல விதமாக அமையலாம், அதிகாரிகள் அனுசூலமாக நடந்து கொள்வர், போஜனசுகமுண்டு.

**சிம்மம்** – தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம்பெறலாம், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், சந்தித்தவர்களால் சந்தோசங்கள் கிடைக்கும் நாள், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம்.

**கன்னி** – பொருளாதார நிலை உயரும் நாள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், காரிய அனுகூல முண்டு, பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**துலாம்** – தேடிச் சென்றவர்கள் நாடி வந்து உதவுவர், எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், தன்னம்பிக்கை துளிர் விடும் நாள், முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம்.

**விருச்சிகம்** – தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள், பூர்வீக சொத்துக்களால் ஆதாயமுண்டு, பயணங்கள் கைகூடும்.

**தனுசு** – காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், தொழில் போட்டிகள் அதிகரிக்கலாம், அலைச்சல்கள் சற்று கூடலாம், தேவையற்ற எதிர்ப்புகள் ஏற்படலாம்.

**மகரம்** – விட்டுப்போன உறவுகள் மீண்டும் வந்து சேரலாம், நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள், தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைப்பதற்கான வாய்ப்புண்டு.

**கும்பம்** – தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், மறைமுகப் போட்டிகள் மாறும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**மீனம்** – தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், பிள்ளைகளின் கல்வி நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

## பிரதேச செயலகம் - சபை

# அதிகாரிகளின் அதிகாரப் போட்டியால் அல்லல்படும் வீட்டுத்திட்டப் பயனாளிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இடம்பெற்று வருகின்ற அரச வீட்டுத்திட்டங்களில் பிரதேச செயலக அதிகாரிகளின் உரிய வழிகாட்டல் இன்மையால் பயனாளிகளைப் பிரதேச சபைகள் அலைக்களித்து அவதிக்குள்ளாக்கும் நிலை தொடர்கின்றது.

குறிப்பாக தேசிய வீடமைப்பு அதிகார சபையின் வீட்டுத்திட்டப் பயனாளிகளே இவ்வாறான அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

தேசிய வீடமைப்பு அதிகார சபையால் வழங்கப்படும் வீட்டுத் திட்டங்கள் பிரதேச செயலகங்கள் ஊடாக பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன.

அரச வீட்டுத்திட்டங்களால் பொதுமக்கள் நன்மையடையும் அதேவேளை பிரதேச செயலகங்களால் உரிய திட்டமிட்ட ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் வீட்டுத்திட்டப் பயனாளிகளுக்கு வழங்கப்படுவதில்லை என்று விமர்சனங்கள் முன்வைக்கப் பட்டுள்ளன.

அதாவது தமது பகுதி வீட்டுத் திட்டம் காலதாமதமாகக் கூடாது என்பதற்காகப் பயனாளிகளை அவசரப்படுத்தி வீட்டுத்திட்ட கட்டுமான வேலைகள் பிரதேச செயலக அதிகாரிகளால் விரைவுபடுத்தப்பட்டன.

இவ்வாறான நிலையில் ஒதுக்கப்பட்ட நிதிக்கு ஏற்றபடி வீட்டுத் திட்டத்திற்கான தளவடிவப்படம் தயாரிக்கப்பட்டு பிரதேச சபையில் அனுமதியும் பெறப்படுகிறது.

பின்னர் வீட்டுத்திட்டப் பயனாளிகள் பிறரின் உதவியுடனோ அல்லது தம்மிடம் உள்ள பணத்தைப் பயன்படுத்தியோ ஒரு அறையைக் கூடுதலாகக் கட்டுவதற்கு பிரதேச செயலக அதிகாரிகளிடம் கேட்கின்ற நிலையில் தமது திட்டம் குறித்த காலப் பகுதியில் முடிக்கப்பட வேண்டும் என்ற எழுத்துமூலமான உறுதிப்படுத்தலை பெற்ற பின் கட்ட அனுமதிக்கிறார்கள். அத்துடன் அவர்களின் வேலை முடிவுறுகிறது.

பின்பு தான் பிரச்சினை ஆரம்பிக்கிறது. அதிகாரிகள் தாம் தப்புவதற்காகப் பயனாளிகளை பிரதேச சபையிடம் அனுப்புகின்றனர். பிரதேச சபை அதிகாரிகளும் இது தான் சந்தர்ப்பம் என்று தமக்கும் பிரதேச செயலக அதிகாரிகளுக்குமிடையிலான அதிகாரப் போட்டியை சாதிப்பதற்காக பிரதேச சபை சட்டதிட்டங்களை முழுமையாக அமுல்படுத்தும் நோக்கில் பயனாளிகளை வஞ்சிக்கின்றனர்.

அரச வீட்டுத்திட்ட வீடுகள் பிரதேச சபையின் சட்டதிட்டங்களுடன் ஒப்பிடும் போது முரண்படுவதான குற்றச்சாட்டுகளும் எழுந்துள்ளன.

அதாவது பிரதான படுக்கை அறை 120 சதுர அடியாக இருக்க வேண்டுமென்ற பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் அறிவுறுத்தல்களை முழுமையாகப் பிரதேச சபைகள் பின்பற்றினால் அரச வீட்டுத் திட்டத்தில் எவருமே பிரதேச சபையின் அனுமதியைப் பெறமுடியாது. ஏனெனில் அரச வீட்டுத்திட்டத்தில் வழங்கப்படும் பிரதான படுக்கை அறை 116 சதுர அடியாகவே காணப்படுகிறது. அதுமட்டுமல்லாது அவசர அவசரமாக பிரதேச செயலகங்களினால் நடை முறைப்படுத்தும் வீட்டுத்திட்டங்களுக்கான நில அளவைப்படம் கூட முறையாக இல்லாத நிலையிலுள்ளது. அதாவது வீடு கட்டி முடிவுறும் நிலையில் படத்தை வரையும் சந்தர்ப்பங்களும் அதிகளவில் இடம்பெறுவதாக அறிய முடிகிறது.



வீட்டைப் பெருப்பிப்பதற்கான உத்தரவாதக் கடிதத்தை பிரதேச செயலக அதிகாரிகளுக்கு வழங்கிய பயனாளிகள் பிரதேச சபையிடம் வீட்டைப் பெருப்பிப்பதற்கான அனுமதி ஏன் தம்மிடம் பெறவில்லை மற்றும் அதற்கான தளப்படத்தைச் சமர்ப்பித்து புதிதாக ஏன் அனுமதி பெறவில்லை எனப் பல கேள்விகள் எழுப்புவதோடு அபராதமும் அறவிடுகின்றனர்

இதற்குக் காரணமானவர்கள் யார்? உரிய வழிகாட்டல் மற்றும் கடமையுணர்வும் இருந்திருந்தால் வீட்டுத்திட்டத்தை ஆரம்பிக்க முன்னரே பெருப்பித்துக் கட்டக்கூடியவர்கள் அதற்குரி அனுமதியைப் பெறுமாறு தெரிவித்திருக்க வேண்டும். இதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தான் பதில் கூறவேண்டும் எனச் சமூக ஆர்வலர்கள் சுட்டிக் காட்டினர்.

எனவே யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதி மக்களுக்கு நன்மையளிக்கும் என்ற நோக்கத்தோடு ஆரம்பிக்கப்பட்ட வீட்டுத் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் பிரதேச செயலக அதிகாரிகள் உரிய திட்டமிடல் ஆலோசனைகள் மூலம் பிரதேச சபை அதிகாரிகளையும் இணைத்து குறித்த திட்டப் பயனாளிகளுக்குத் தெரியப்படுத்தியிருந்தால் அல்லல் படுவதை தவிர்த்திருக்கலாம் என வீட்டுத் திட்டப் பயனாளிகளாலும் சமூக ஆர்வலர்களாலும் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-10)

## பாடசாலைக்கு உதவி



(சாவகச்சேரி)

யா/கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலய பழைய மாணவர்கள் நால்வர் இணைந்து பாடசாலைக்கு நிழற் பிரதி இயந்திரம் ஒன்றையும், நீர் வடிகட்டும் இயந்திரம் ஒன்றையும் அண்மையில் வழங்கினர்.

பாடசாலை அதிபர் மகிந்தன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் இயந்திரங்களை அன்பளிப்பாக வழங்கிய புலம்பெயர் நாடுகளைச் சேர்ந்த பழைய மாணவர்களான சுஜன், மோகன், உமாகரன் மற்றும் சுரேன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (இ-30)

## வாகன இலக்கத் தகடுகளை பெற்றுக்கொள்ள முடியும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மோட்டார் போக்குவரத்து திணைக்கள அலுவலகத்திற்குக் கிடைக்கப்பெற்ற வாகன இலக்கத்தகடுகளின் பட்டியல் யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்துப் பிரதேச செயலகங்களிலும் மாவட்ட செயலகத்திலுள்ள மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திலும் பொதுமக்களின் பார்வைக்காக அறிவிப்புப் பலகையில் காட்சிப் படுத்தப்பட்டுள்ளது. மேலும் மாவட்டச் செயலக இணையத்தளத்திலும் பார்வையிடலாம். இதற்கமைய புதிதாக வாகனங்களைப் பதிவு செய்த உரிமையாளர்கள் வாகனப்பதிவுப் புத்தகம், தேசிய அடையாள அட்டை என்பவற்றையும் மாகாணங்களுக்கிடையே வாகன உரிமை மாற்றம் பெற்றவர்கள் மேற்குறித்த இரு ஆவணங்களுடன் பழைய வாகன இலக்கத்தகடுகள் மற்றும் வாகன இலக்கம் பொறித் ஒட்டும் தாள் (Sticker) என்பவற்றையும் யாழ். மாவட்ட போக்குவரத்து அலுவலகத்தில் சமர்ப்பித்து வாகனங்களுக்குரிய இலக்கத் தகடுகளைப் பெற்றுக்கொள்ளுமாறு போக்குவரத்து திணைக்கள பிரதி ஆணையாளர் அறிவித்தார். (இ-5)




## பாம்புக் கடிக்கு இலக்கான இளைஞன் பாம்புடன் வைத்தியசாலைக்கு சென்றார்

(சாவச்சேரி)

சாவகச்சேரி -மட்டுவில் பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை பாம்புக் கடிக்கு இலக்கான இளைஞன் ஒருவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

மட்டுவில் பகுதியைச் சேர்ந்த சுதர்சன் (வயது - 26) என்ற இளைஞனே தன்னைத் தீண்டிய பாம்பை போத்தலில் அடைத்து அதனையும் வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்று அடையாளம் காட்டி சிகிச்சை பெற்று வருகிறார். (இ-30)

## கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பில் யாரும் இதுவரை கைது செய்யப்படவில்லை

### பொலிஸார் மீது பொதுமக்கள் குற்றச்சாட்டு

(கரணவாய்)

பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் கொள்ளை மற்றும் திருட்டுச் சம்பவங்களில் பொலிஸாருக்கு நேரடியாகத் தொடர்புள்ளதாக பொது மக்கள் பகிரங்கமாக குற்றம்சாட்டினர்.

கடந்த ஆறு மாதங்களுக்குள் பல கொள்ளை மற்றும் திருட்டுச் சம்பவங்கள் பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இடம்பெற்றுள்ளன. இதில் உதய கதிர்காமம் பகுதியில் மட்டும் 4 கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றன. இக் கொள்ளைச் சம்பவங்கள் வாள்முனையில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

கடந்த 6 மாதங்களுக்குள் குடத்தனை, புலோலி, துன்னாலை, பருத்தித்துறை ஆகிய பகுதிகளில் பல கொள்ளை மற்றும் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்ற போதும் இதுதொடர்பாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. புலோலி பகுதியிலுள்ள உபய கதிர்காமம் மற்றும் பெருந்தெரு ஆகிய பகுதிகளிலுள்ள ஐந்து வீடுகளில் இந்த ஆறு மாத காலப்பகுதிக்குள் கொள்ளைச் சம்பவங்கள் இடம் பெற்றன. இது தவிர புற்றளை, குடத்தனை ஆகிய பகுதிகளிலும் கொள்ளைச் சம்பவங்கள் இடம் பெற்றன.

இந்நிலையில் சட்டவிரோத செயற்பாடுகளுடன் தொடர்பு இருப்பதாக தெரிவித்து பருத்தித்துறை பொலிஸ் பிரிவில் 12 பொலிஸ் அதிகாரிகள் இடமாற்றப்பட்டனர். பொலிஸாருக்கும் கொள்ளையர்களுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பிருப்பதனால் பொலிஸார் அவர்களை கைது செய்யவில்லை எனப்பொதுமக்கள்பகிரங்கமாக குற்றம்சாட்டியுள்ளனர். (இ-5-60)

### முன்னாள் ஆளுநர் கூரே தலைமையில்

## மகிந்த அணியின் பிரசாரம் பருத்தித்துறையில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தாமரை மொட்டுச் சின்னத்தில் போட்டியிடும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைத் தலைவராகக் கொண்ட ஸ்ரீலங்கா பொதுஜனப் பெரமுனவின் தேர்தல் பிரசாரம் நேற்று முன்தினம் பருத்தித்துறைப் பகுதியில் ஆரம்பமானது.

குறித்த தேர்தல் பிரசாரம் வடமாகாண முன்னாள் ஆளுநர் ரெஜினோல்ட் கூரே தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டது. (இ-10-60)

# அரசியல் ரீதியாக நியமனங்களை வழங்கி கல்வித்துறையை சீரழித்து வருகிறது அரசு

## சுகவீன விடுமுறைப் போராட்டத்திற்கு ஆதரவாக இலங்கை ஆசிரியர் சங்கம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் நாடளாவிய ரீதியாக எதிர்வரும் 26, 27 ஆம் திகதிகளில் அதிபர்,ஆசிரியர்கள் சுகவீன விடுமுறைப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர்.

இவ்விரு நாட்களும் அதிபர், ஆசிரியர்கள் சுகவீன விடுமுறையை அறிவித்து அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் - ஒன்றுபட்டு தமது உரிமைக்காக செயற்படவுள்ளனர் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்தார்.

இந்த சுகவீன விடுமுறை எடுக்கும் நடைமுறையை பின்பற்றி திணைக்களத் தலைவருக்கு கட்டாயம் அறிவித்தால் போதுமானது.

இந்த இரண்டு தினங்களிலும் - எவ்வித காரணங்களுக்காகவும் ஆசிரியர்களோ அதிபர்களோ எந்தவொரு அதிகாரிகளின் கட்டளைக்குப் பயந்தும், பணிந்தும் பாடசாலைக்குச் செல்ல வேண்டிய அவசியமில்லை.

இச் செயற்பாட்டின் முழுப் பொறுப்பையும் போராட்டத்தில் பங்கு கொள்ளும் தொழிற்சங்கங்களுடன் இணைந்து இலங்கை ஆசிரியர் சங்கம் ஏற்றுக் கொள்ளும் எனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் இரண்டு நாட்களும் பாடசாலைச் செயற்பாடுகளில் தடங்கல் ஏற்படுவதற்கு - தொடர்ச்சியாக எம்மை ஏமாற்றி வரும் இந்த அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும். எமது நியாயமான தொழிற்சங்கப் போராட்டத்தைப் புரிந்து கொண்டு பெற்றோர்களும் ஒத்துழைக்க வேண்டும் எனவும் ஜோசப் ஸ்ராலின் கேட்டுக்கொண்டார்.

நீண்டகாலமாக நிலவிவரும் அதிபர் , ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டைத் தீர்த்து சம்பளத்தை அதிகரிக்குமாறு பல தடவைகள் கோரிக்கை விடுக்கப்பட்ட நிலையில் - போலியான வாக்குறுதிகளை வழங்கி அரசு தொடர்ச்சியாக எம்மை ஏமாற்றி வந்துள்ளது.

அரசியல் ரீதியாக நியமனங்களை வழங்கி கல்வித்துறையை சீரழித்து வருகின்றது.

ஆசிரியர்,அதிபர்களின் ஓய்வூதியத் திட்டத்தை நிறுத்த முயற்சிக்கிறது.

பிரிவெனா மற்றும் நன்கொடை பெறும் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு ஓய்வூதியத்திட்டத்தை வழங்கப் பின்னடிக்கிறது.

ஆசிரியர்களுக்கு தேவையற்ற அழுத்தங்களைப் பிரயோகித்து வருகிறது. தேசிய வருமானத்தில் கல்விக்கு 6சதவீதத்தை ஒதுக்காமல் பெற்றோரிடம் பணம் அறவிட்டு வருகின்றது. இவற்றிற்கு நாம் தீர்வுகாண வேண்டும்.

அதிபர்,ஆசிரியர்களாகிய நாம் - எமது உரிமைகளுடன் சேர்த்து இலங்கையில் தரமான கல்விக்கட்டமைப்பை உருவாக்கவும் இலவசக் கல்வியைப் பாதுகாக்கவும் அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

இந்த வகையில் அனைவரும் இணைந்து போராட்டம் வெற்றிபெற பலம்சேர்க்க வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சம்பள பிரச்சினைகள் குறித்து ஊழியர்களுடன் பேசத்தயார்

## அமைச்சர் மத்தும தெரிவிப்பு



(கொழும்பு)

அரசாங்க ஊழியர்களின் சம்பளப் பிரச்சினை தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அரசாங்கம் தொடர்ந்தும் தயாராக இருப்பதாகவும் தொழிற் சங்கங்கள் வேலை நிறுத்தப் போராட்டங்களில் ஈடுபட்டு பொது மக்களை அசௌகரியத்திற்கு உட்படுத்தக் கூடாது எனவும் பொது நிர்வாக, முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார கேட்டுக்கொண்டார்.

தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடாது பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தொழிற்சங்கங்கள் முன்வர வேண்டும் எனக் குறிப்பிட்ட அமைச்சர் அவ்வாறான போராட்ட நடவடிக்கைகளை அரசாங்கம் அனுமதிக்க முடியாது என்றும் தெரிவித்தார். பல்வேறு அரசியல் நோக்கங்களுக்காக சதி நடவடிக்கைகளில் ஈடுபட்டுத் தொழிற்சங்கங்கள் பொதுமக்களை அசௌகரியத்திற்குட்படுத்தக் கூடாது என்றும் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

அரசாங்க ஊழியர்களின் சம்பளப் பிரச்சினை தொடர்பில் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அரசாங்கம் எப்போதும் தயாராகவுள்ளதாகவும் அரச ஊழியர்களின் சம்பளம் 107 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதற்காக அரசாங்கம் வழமையைவிட இரண்டு மடங்கு நிதியை அதிகமாக ஒதுக்கியுள்ளது.

நிறைவேற்று அதிகாரிகளின் சம்பள முரண்பாடு தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்புடன் பேச்சுவார்த்தை நடத்தி அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் இன்னும் முழுமையான அனுமதி கிடைக்கவில்லை.

இதனை அடிப்படையாகக் கொண்டு எந்தத் தரப்பினருக்காவது பாதிப்பு ஏற்படுமாயின் அந்தத் தரப்பினருடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு தாம் தயாராக இருப்பதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 4<br>கி.பா:14<br>உயரம்: 5’6”<br>தகைமை/தொழில்: O/L நகைவேலை செய்யும் சொந்தக்கடை<br>எதிர்பார்ப்பு: சாதரண படித்தபெண்<br>தொ.இ: B10054 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா:62 3/4 செவ் 7இல்<br>உயரம்: 5’2”<br>தகைமை/தொழில்:B.A அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி அரசஉத்தியோகம்<br>தொ.இ: G/5885 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் கி.பா: 9<br>உயரம்: 5’7"<br>தகைமை/தொழில்: என்ஜினியர் அவுஸ்திரேலியா பட்டதாரி<br>எதிர்பார்ப்பு: பட்டதாரிபெண்<br>தொ.இ: B/10055 | பிறப்பு: 1983 இந்து உயரம்: 5’2"<br>நட்சத்திரம்: விசாகம் 2<br>கி.பா:57 1/2 சூரி,செவ்.8 இல்<br>தகைமை/தொழில்: H.N.D.A அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: அரசஉத்தியோகம்<br>தொ.இ: G/5911 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்:ஆயிலியம் 2<br>கி.பா:27உயரம்: 5’7"<br>தகைமை/தொழில்: B.A(Jaffna) Dip.inLIS Information Assistant<br>எதிர்பார்ப்பு: பட்டதாரிஅரச உத்தியோகம் வீடு முக்கியம்<br>தொ.இ: B/10057 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 3<br>கி.பா: 37 ½செவ்.8 இல்<br>உயரம்:5’3”<br>தகைமை/தொழில்: B.Sc (Hons) M.Sc செயற்றிட்ட உதவியாளர்<br>எதிர்பார்ப்பு: M.Scவைத்தியர் என்ஜினியர் கணக்காளர்<br>தொ.இ: G/5956 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 1<br>7 இல் செவ்.<br>தகைமை/தொழில்:O/L சாரதி<br>எதிர்பார்ப்பு: உள்நாடுமட்டும்<br>தொ.இ: B/10059 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம் உத்தரட்டாதி 4<br>கி.பா: 30, 4இல் செவ் உயரம்: 5’4”<br>தகைமை/தொழில்:B.com<br>எதிர்பார்ப்பு: அரசபணிஅரசவங்கி உத்தியோகத்தர்<br>தொ.இ: G/5961 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


# திரையரங்கு உரிமையாளர் மீது மதுபோதையில் வந்தவர் தாக்குதல்

(கரணவாய்)

பருத்தித்துறையிலுள்ள திரையரங்கின் உரிமையாளர் ஒருவர் தாக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை கிராமக்கோட்டு சந்திக்கு அருகாமையிலுள்ள திரையரங்கு ஒன்றில் இரவு திரைப்படக் காட்சி இடம் பெற்றுக் கொண்டிருந்தது.

இரவு 9.30 மணியளவில் மது போதையில் திரையரங்கிற்குள் இருந்த ஒருவர் தகராறில் ஈடுபட்டதாகக் கூறப்படுகிறது.

இதனையடுத்து திரையரங்கின் உரிமையாளர் அவரை வெளியேறுமாறு கூறியபோது அவர் திரையரங்கின் உரிமையாளர் மீது தாக்குதல் மேற் கொண்டுள்ளார்.

இதில் திரையரங்கத்தில் உரிமையாளரான தி.முருகதாஸ் (வயது- 42) என்பவர் தலையில் காயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். (இ-60)

# முதியோர் சங்க ஆண்டு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் 8ஆவது ஆண்டு நிறைவு விழா எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் கோப்பாய் முதியோர் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அனைத்து மூத்த பிரஜைகளையும் அதில் கலந்து கொள்ளுமாறு செயலாளர் ந.கனகலிங்கம் கேட்டுக்கொண்டார். (இ-5)

# பெண்களுக்கான யோகா வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.யோகா மாதா நிலையத்தால் பெண்களுக்காக யோகாசன வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன.

இலவசமாக நடைபெறும் இவ் வகுப்புக்கள் இல 102, அம்பலவானர் வீதி, அத்தியடி பிள்ளையார் கோவியலடி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள மேற்படி நிலையத்தில் நடைபெறுகின்றன.

இவ் வகுப் புக்கள் திங்கள், புதன் ஆகிய கிழமைகளில் மாலை 5 மணியிலிருந்து 6மணிவரை இடம்பெறும். எனவே இவ் வகுப்புக்களில் இணைந்து பயன்பெற விரும்பும் பெண்கள் மேற்படி நிலையத்தில் பதிவுகளை மேற்கொண்டு இணைந்து கொள்ள முடியும்.

இதேவேளை சிறுவர்களுக்கான பால விகார், அறநெறி மற்றும் யோகா வகுப்புக்களும் பிரதி வெள்ளிக்கிழமைகளில் பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 5 மணிவரையில் நடைபெறுகின்றன.

இவ் வகுப்புக்களில் கலந்து கொள்ள விரும்பும் சிறுவர்கள் பால்வேறுபாடின்றி கலந்து பயன்பெற முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக தகவல்களை 077 029 3263 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும் என யாழ்.யோகா மாத நிலையத்தால் அறிவிக்கப்பட்டது. (இ-7)

# உரிமைக்கான போராட்டம் தொடரும்

# நாம் ஒருபோதும் கைவிட மாட்டோம்

## சுமந்திரன் சுட்டிக்காட்டு

(சாவகச்சேரி)

**எங்களுடைய உரிமைகள் முக்கியமானவை. அவற்றை நாம் ஒருபோதும் கைவிடமாட்டோம். அபிவிருத்தியுடன் உரிமைக்கான போராட்டம் தொடரும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.**

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நேற்று இடம்பெற்ற வகுப்பறைக் கட்டடத்தொகுதி திறப்பு விழாவின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த சில வருடங்களாக எமக்கு கிடைத்துள்ள சந்தர்ப்பங்களை நாம் பயன்படுத்தி வருகின்றோம். இன்று பலர் அபிவிருத்தித் திட்டங்களில் கவனம் செலுத்துவதனை விடுத்து பலவிதமாகப் பேசி வருகின்றனர்.

உரிமைக்காகப் போராடியவர்கள் தற்போது-கம்பரெலியவில் வந்து நிற்கின்றனர் என்று பலர் சொல்கின்றனர். வீழ்ச்சியடைந்துள்ள எமது சமூகத்தை திரும்பத் தலை நிமிர்த்தும் செயற்பாடாகத் தான் அபிவிருத்தித் திட்டங்களைப் பார்க்கின்றோம்.



எங்களுடைய உரிமைகள் முக்கியமானவை. அவற்றை நாம் ஒருபோதும் கைவிடப் போவதில்லை. ஆனால் பசியோடு போராடுமாறு மக்களை அழைக்கக் கூடாது. மக்களுடைய நாளாந்த தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும், வாழ்வாதாரம் கட்டியெழுப்பப்பட வேண்டும்.

முக்கியமாக கல்விச்செயற்பாடுகளில் எந்தவித பின்னடைவும் ஏற்படக்கூடாது. இப்படியான ஒரு சாதகமான சூழ்நிலையில் எமது உரிமைப் போராட்டத்தை நாம் தொடர்ந்து முன்னெடுப்போம். எமது மக்களை அநாதரவாக விட்டுவிட்டு உரிமைக்காக மாத்திரம் போராட முடியாது.

ஆகவே தான் நாம் அபிவிருத்தியையும், உரிமையையும் சமாந்தரமாகக் கொண்டு செல்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-30)



## கீத் நொயர் மீது தாக்குதல் எப்.பி.ஐயின் உதவி கோரல்

(கொழும்பு)

ஊடகவியலாளர் கீத் நொயர் மீது தாக்குதல் நடத்தப்பட்டமை தொடர்பில் அமெரிக்காவின் புலனாய்வுத் துறையா்னா எப்.பி.ஐயின் உதவியை பெற்றுக் கொள்ள இலங்கைப் பொலிஸார் தீர்மானித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கீத் நொயர் தாக்கப்படுவதற்கு முன்பாக பதிவு செய்யப்பட்ட தொலைபேசி குரல் பதிவுகள் தொடர்பான அறிக்கை இன்னும் இலங்கைக்கு கிடைக்கவில்லை.


இதனையடுத்தே எப்.பி.ஐ. நிபுணர்களின் உதவியை பெற்றுக் கொள்ள இலங்கை பொலிஸார் தீர்மானித்ததாக தெரிய வருகிறது.

2008ஆம் ஆண்டு மே 22 ஆம் திகதியன்று கீத் நொயர் கடத்திச் செல்லப்பட்டு தாக்கப்பட்டார்.

இந் நிலையில் கடத்தலுக்கு முன் உயர் மட்டத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட தொலைபேசி அழைப்புக்கள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.(இ-7)




## செரினுக்காக பச்சை மிளகாய் தின்ற தர்ஷன்




பிக்போஸ் நிகழ்ச்சி ரசிகர்களுக்கு சோகமான நேரம். காரணம் நிகழ்ச்சி இன்னும் கொஞ்ச நாளில் முடிய இருக்கிறது.

போட்டியாளர்களுக்கு போட்டிகளும் கடுமையாக கொடுக்கப்பட்டு வருகிறது. பைனலுக்கு போட்டிகள் மூலம் முதல் இடத்தை பிடித்து நேரடியாக பைனலுக்கு தேர்வாகியுள்ளார் முகேன். தர்ஷனிடம் யாரைக் காப்பாற்ற நினைக்கிறீர்கள் என பிக்போஸ் கேட்க, அதற்கு அவர் ஷெரின் எனக்கூறுகிறார்.

ஷெரினைக் காப்பாற்ற பச்சை மிளகாய் சாப்பிட வேண்டும் என பிக்போஸ் கூற அதையும் செய்கிறார். பின் சாண்டி அவர்களையும் காப்பாற்ற விரும்புகிறேன் என அவருக்காகவும் பச்சை மிளகாய் சாப்பிடுகிறார் தர்ஷன்.

## சேரப்பாவிற்கு குவியும் வாழ்த்துக்கள்



பிக்போஸ் நிகழ்ச்சியின் தமிழ் தொடரில் இதுவரை எந்த சீனியர்களுக்கும் இல்லாதளவுக்கு இந்த சீசனில் சேரனுக்கு ஒரு பெரும் புகழ் மக்கள் மத்தியில் கிடைத்துவிட்டது. லொஸ்லியா அவரை சேரப்பா எனக் கூப்பிட தொடங்கியதால் ரசிகர்களிடத்திலும் சேரப்பா என்றே அடைமொழி பரவலனாது. பிக்போஸ் கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னே அவர் வெளியேற்றப்பட்டு இரகசிய அறையில் வைக்கப்பட்டு பின் மீண்டும் போட்டியாளராக அனுமதிக்கப்பட்டார்.

கமல் உட்பட பலரும் சேரனின் நடவடிக்கைகளை வரவேற்றனர். நேற்று முன்தினம் அவர் வெளியேறினார். இந்நிலையில் அவ்வரை சீரியல், சினிமாத்துறையில் எழுத்தாளராக பணியாற்றி வரும் பத்மாவதி குட்ஃபாதர், காட் ஃபாதர், எதுவாயினும் இது விளையாட்டே என கூறி வாழ்த்தியுள்ளார். பத்மாவதி விஸ்வாசம் பாடலாசிரியின் மனைவி என்பது குறிப்பிடத்தக்கது.

## லொஸ்லியாவை அதட்டிய தர்ஷன்



தர்ஷன், லொஸ்லியா இருவரும் ஈழத்தில் இருந்து சென்று பிக்போஸில் பங்கேற்றுள்ளனர். இறுதி வாரம் வரை அவர்கள் போட்டியில் இருப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. 91 நாளை கடந்து பிக்போஸ் ஓடிக்கொண்டிருக்கும் நிலையில் தர்ஷன் லொஸ்லியாவை கோபத்தில் திட்டியுள்ளார்.

லொஸ்லியா "தர்மர்.. தர்மர்" என தர்ஷனை கூறி அழைக்க அதனால் கோபமான தர்ஷன், "இனிமேல் இப்படிச் சொன்னால் திட்டிவிடுவேன் எனக் கூறியுள்ளார்.

# கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கு புருசோத்தமன் எழுதும் அன்பு மடல்

அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களுக்கு அன்பு வணக்கம்.

தங்கள் மீது கொண்ட மரியாதை காரணமாகவும் தங்களின் அரசியல் வகிபாகம் எம் இனத்திற்குத் தேவை என்று யாம் உணர்வதன் காரணமாகவும் இக்கடிதத்தை எழுதுகிறேன்.

இக்கடிதம் எழுதுவதற்கு முன்பாகப் பல தடவைகள் சிந்தித்தேன். கடிதம் எழுதுவது சரியா? தவறா? என்பதைத் தீர்மானிப்பதற்கான சிந்தனை அல்ல அது.

மாறாக இக்கடிதத்தை தாங்கள் எப்படிப் பார்ப்பீர்கள், உங்கள் ஆதரவாளர்கள் எப்படி நோக்குவார்கள் என்பதுதான் என் சிந்திப்பாக இருந்தது.

யானையைப் பார்த்த குருடரைப் போல என்னைப் பார்த்தால் என் செய்வேன் என்று வி.கல்யாணசுந்தரனார் பாடி வைத்துள்ளார்.

கண் தெரியாத நால்வர் ஒரு யானையைத் தொட்டுப் பார்த்தார்கள். ஒருவர் யானையின் துதிக்கையை உரல் என்றார், இன்னொருவர் யானையின் செவிகளைச் சுளகு என்றார், மற்றொருவரோ யானையின் கால்களை உரல் என்றார். ஆக, எதைப் பார்க்கிறோம் என்பதைவிட எப்படிப் பார்க்கிறோம் என்பது மிகவும் முக்கியமானது.


அந்த வகையில்தான் இக்கடிதத்தின் நோக்கம் எப்படிப் பார்க்கப்படும் என்று சிந்தித்தேன். அந்தச் சிந்தனை கடிதம் எழுத வேண்டும் என்ற நினைப்பை தவணையிட்டுக் கொண்டது.

எழுக தமிழ் எழுச்சிப் பேரணி முடிந்த பின்பும் இக்கடிதத்தை எழுதாவிட்டால் அது அறம் பிழைப்பதாகக் கருதுகிறேன். அதனால்தான் தங்களுக்கான கடிதத்தை எழுதுவது என்று முடிவு செய்தேன்.

எனினும் கடிதம் எழுதாமல் காலதாமதமாகியமைக்கு நீங்கள் எழுக தமிழ் எழுச்சிப் பேரணியில் கலந்து கொள்வீர்கள் என்ற நம்பிக்கை என்னிடம் இருந்ததும் காரணம் என்பதை இவ் விடத்தில் கூறித்தானாக வேண்டும்.

எனினும் ஏனோ தெரியவில்லை. நீங்கள் எழுக தமிழ் எழுச்சிப் பேரணியில் கலந்து கொள்ளவில்லை. உங்கள் கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் பங்கேற்கவில்லை. இது என் நம்பிக்கையை உடைத்தது.

எழுக தமிழ் எழுச்சிப் பேரணியில் நீங்களும் உங்கள் கட்சியும் கலந்து கொள்ள வேண்டும் எனக் கடுமையாக விரும்பியவர்களில் யானும் ஒருவன்.




அதற்கான சூழமைவை ஏற்படுத்த வேண்டும் என்று நினைத்து சில சந்திப்புக்களை உங்களுடனும் உங்கள் கட்சி முக்கியஸ்தர்களுடனும் நடத்துவதை மறைவில் நின்று ஊக்கப்படுத்தினேன்.

அந்தச் சந்திப்புக்களும் வெற்றிதரவில்லை என்று அறிந்தபோது வேதனையாக இருந்தது.

இருந்தும் அரசியல் கட்சி என்ற எல்லைகளைக் கடந்து பெருந்தன்மை கொண்டு தமிழ் மக்களின் உணர்வெழுச்சிக்கு மதிப்பளித்து நீங்களும் உங்கள் கட்சியினரும் பேரணியில் பங்கேற்பீர்கள் என்று நினைத்தேன். அனைத்தும் கற்பனைகளாக மட்டுமே கரைந்து போயின.

இதன் பின்புதான் இக்கடிதம் எழுதுவது என்று முடிவு செய்தேன். கடிதம் எழுதுவது என்று நினைத்ததற்குள் பல க்காரணங்கள் உள்ளன. அதில், உங்கள் அரசியல் எதிர்காலம் பற்றியது முதன்மையானது. இதை நாம் கூறும்போது நீங்கள் நெற்றிப் புருவத்தை உயர்த்திக் கொள்ளலாம். அது உங்கள் உரிமை.

ஆனால் என்னைப் பொறுத்தவரை கஜேந்திரகுமார் பொன்னம்பலம் என்ற மனிதர் ஆளுமை மிக்கவர். எங்கள் இனத்தின் அவலத்தைச் சர்வதேசத்திற்கு எடுத்துக் கூறக் கூடிய வல்லமை பொருந்தியவர். ஈழத்தமிழினம் பற்றிய பகிர்வுகளை சர்வதேச சமூகத்துடன் கலந்துரையாடுகின்ற பணியைத் தொடர்ந்து செய்து கொண்டிருப்பவர்.

எனவே, அவர் எங்கள் தமிழினத்தின் அரசியலுக்குத் தேவை என்று கருதுகிறேன். இந்த நிலைப்பாடுதான் உங்களை உங்களுக்குத் தெரியாமல் மானசீகமாக ஆதரிக்கின்றவர்களின் மனநிலையும் என்பதை இவ்விடத்தில் கூறித்தானாக வேண்டும்.

தவிர, 2015 ஆம் ஆண்டு நடந்த பொதுத்தேர்தலில் தங்களுக்குப் பாராளுமன்ற உறுப்பினர் பதவி கிடைக்கவில்லை என்றதும் உச்சமாகக் கவலைப் பட்டவர்களில் நானும் ஒருவன். அந்தக் கவலை தனிப்பட்ட கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கானதல்ல.அது எங்கள் தமிழினம் சார்ந்தது.

கஜேந்திரகுமார் பாராளுமன்றம் சென்றிருந்தால் எங்கள் பிரச்சினைகளை ஆணித்தரமாகப் பாராளுமன்றத்தில் எடுத்துரைத்திருப்பார். அவரின் பாராளுமன்ற உறுப்பினர் பதவியானது சர்வதேச ரீதியில் எம் தமிழ் மக்களின் அவல த்தை எடுத்துரைப்பதற்குக் கனதியான அங்கீகாரமாக இருந்திருக்கும். எனினும் அது நடக்கவில்லை என்பது வேதனையானதே.

இத்தகையதொரு நிலைமை ஏற்பட்டமைக்குத் தமிழ் மக்களே காரணம் என்று சிலர் சுட்டு விரல் காட்டலாம். ஆனால் அதனை நான் ஒருபோதும் ஏற்கமாட்டேன்.

என்னைப் பொறுத்தவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து நீங்கள் விலகியமை ஒரு ஆரோக்கியமான நடவடிக்கை அல்லல.

கூட்டமைப்பு பிழை செய்கிறது என்றால் அதனைக் கூட்டமைப்பிற்குள் இருந்து கொண்டு திருத்தியிருக்க வேண்டும்.

எனினும் அதனை நீங்கள் செய்யவில்லை. மாறாக கூட்டமைப்பிற்குள் எந்தவகையிலும் இருக்கமுடியாது என்று நீங்கள் கருதியிருந்தால், கணிசமான மக்கள் ஆதரவுடன் நீங்கள் வெளியேறியிருக்கவேண்டும்.

அந்த வெளியேறலுக்குப் பின்னால் உங்களிடம் இருக்கக் கூடிய நியாயப்பாட்டை தமிழ் மக்களிடம் முன்வைத்திருக்க வேண்டும். இவை எதனையும் நீங்கள் செய்யாதபோது உங்கள் கட்சி சார்ந்த இருவருக்கு ஆசனங்கள் தரமறுத்ததாலேயே நீங்கள் கூட்டமைப்பில் இருந்து வெளியேறியதான பிரசாரம் கூட்டமைப்பால் முன்வைக்கப்பட்டது.

அந்தப் பிரசாரம் மக்களிடம் எடுபட்டது. இதை நான் கூறும்போது உங்கள் கோபம் என்னை நோக்கியதாக இருக்கலாம். ஆனால் மக்களின் மனப்பதிவையே இங்கு நான் முன்வைக்கின்றேன்.

எதுவாயினும் அரசியல் சாக்கடையில் இத்தகைய பிரசாரங்கள் ஏற்படவே செய்யும். அவற்றைச் சுற்றிவளைத்து; நியாயங்கள், உண்மைகள், ஆதாரங்கள் என்ப வற்றால் சிறைப்படுத்த வேண்டும்.

எனினும் அதனை நீங்கள் செய்யத் தவறிவிட்டீர்கள். கூட்டமைப்பில் இருந்தான உங்களின் வெளியேற்றம் தனியனாக, தனிக்கட்சியாக அமைந்துவிட்டது.

இங்கு நான் ஓர் உண்மையைச் சொல்வேன். நீங்கள் கூட்டமைப்பில் இருந்திருந்தால் நிச்சயம் தமிழினத்தின் உரிமை விலை பேசப்பட்டிருக்காது. உங்களுடன் குறைந்தது இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களேனும் துணை நின்றிருப்பர். இது கூட்டமைப்பின் தலைமை கொண்ட சர்வாதிகாரப் போக்கை வேரறுத்திருக்கும்.

அல்லது சட்டத்துறையில் நிபுணத்தும் மிக்க எம்.ஏ. சுமந்திரனும் தாங்களும் இணைந்து தமிழ் மக்களுக்கான உரிமையை சட்ட நிலை நின்று வென்றெடுக்க முற்பட்டிருப்பீர்கள். இது தமிழினத்திற்குச் சாதகமாக அமைந்திருக்கும்.

என்ன செய்வது ஆற்றுநீர் ஓடுகிறது. அதை விட்ட நன்னீர் வேறில்லை. ஆனால் அதனை வரம்பிட்டு வாய்க்கால் வழி ஓடவிட்டு செய்பயிருக்குப் பாய்ச்சுகின்ற போதுதான் விளைச்சலும் கிடைக்கிறது.

(தொடரும்)

# நீதிமன்ற தீர்ப்பை அவமதித்து பிக்குகள் அடாவடி

## நீராவியடி ஆலய வளாகத்தில் பிக்குவின் உடல் தகனம்



முல்லைத்தீவு நீராவியடி பிள்ளையார் ஆலயத்தில் விகாரை அமைத்து தங்கியிருந்த பிக்கு உயிரிழந்த நிலையில் இந்துசமய பாரம்பரிய கோட்பாட்டின் அடிப்படையில் அவரின் உடலை ஆலய வளாகத்தில் தகனம் செய்ய நீதிமன்று தடை விதித்தது. நீதிமன்ற தீர்ப்பை மீறி ஞானசார தேரர் தலைமையிலான பிக்குகள் பொலிஸாரின் பாதுகாப்புடன் சட்டத்தரணிகள், பொதுமக்களை தாக்கி அடாவடியில் ஈடுபட்டு பொதுமக்களின் எதிர்ப்பை மீறி குறித்த உடலை ஆலய வளாகத்தில் தகனம் செய்திருந்தனர். (9-281)

## வவுனியா மாணவர்களின் முன்மாதிரியான செயற்பாடு



(நெளுக்குளம்)

வவுனியா நொச்சிமோட்டையிலுள்ள பாடசாலை மற்றும் அயற் கிராமங்கள், வர்த்தக நிலையங்களுக்கு முன்பாகவு ள்ள இடங்களை துப்புரவு செய்யும் பணி நேற்றுக் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 11.30 மணி வரை மாணவர்களால் முன்னெடுக்கப்பட்டது. வவுனியா நொச்சிமோட்டை கனிஷ்ட உயர்தர வித்தியாலயத்தின் அதிபர் கோ.குலேந்திரகுமாரின் வழிகாட்டலில் பாடசாலை மற்றும் அயற்கிராமங்களில் வித்தியாலய மாணவர்கள், ஆசிரியர்கள், நகரசபையினர் இணைந்து மேற்கொண்டு டெங்கு ஒழிப்பு சிரமதானப்பணியினை மேற்கொண்டிருந்தனர்.

தற்போது பெய்து வரும் மழையினால் நாட்டில் பல இடங்களில் டெங்கு நோய் தாக்கங்கள் ஏற்படக்கூடிய சூழல் காணப்படுகின்ற நிலையில் இவர்களின் நடவடிக்கை முன்மாதிரியாக அமைந்துள்ளதாக பொதுமக்கள் தெரிவித்தனர். (9-299)

## தண்ணுமைப் பிரவாகம் இசை நிகழ்வு



(நெளுக்குளம்)

நல்லைக்கந்தன் குருஷேத்திர மாணவர்களும் வவுனியா தமிழ் சங்கமும் இணைந்து வழங்கும் தண்ணுமைப் பிரவாகம் இசை நிகழ்வு நேற்று முன்தினம் வவுனியா கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் வவுனியா தமிழ் சங்கம் மற்றும் நல்லைக் கந்தன் குருஷேத்திர மாணவர்களால் தண்ணுமை எனப்படும் மிருதங்க கச்சேரி மற்றும் வயலின் இசை என்பன மேடையேற்றப்பட்டன.

தமிழருவி சிவகுமாரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ்ப்பாண பல்கலைக் கழக வவுனியா வளாக முதல்வர் கலாநிதி மங்களேஸ்வரன், வவுனியா நகரசபை செயலாளர் தயாபரன், வவுனியா கல்வியியற் கல்லூரி ஓய்வு நிலை பீடாதிபதி சிதம்பரநாதன், வவுனியா தமிழ் சங்கத்தின் தலைவர் எஸ்.என்.ஜி. நாதன், நகரசபை உறுப்பினர்களான சேனாதிராஜா, இராஜலிங்கம் மற்றும் கலைஞர்கள், சிவாச்சாரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (9-299)

## புலிகளின் தங்கம் எங்கே?

### சுனில் ஹந்துன்நெத்தி கேள்வி

(முல்லைத்தீவு)

கடந்த காலத்தில் விடுதலை புலிகள் கட்டுப்பாட்டிலிருந்து பெறப்பட்ட தங்க நகைகள், பணங்களுக்கு பின்னர் என்ன நடந்தது என தென்னிலங்கையில் வாழும் மக்கள் மத்தியிலும் கேள்வி நிலவுகின்றது என மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.

முல்லைத்தீவு முறிகண்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று மக்களுக்கு பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றன. மக்கள் குடிக்க நீர் இல்லாமலும் உணவு இல்லாமலும் பெரும் கஷ்டங்களை எதிர்கொள்கின்றனர். கடந்த 10 வருடங்களில் வீதியையும் புகையிரத்தையும் மாத்திரம் அபிவிருத்தியாக செய்துவிட்டு மக்களை அபிவிருத்திப் பாதைக்குள் அழைத்து சென்றுள்ளதாக கூறுகின்றனர். உண்மையில் இவ்வாறான செயற்பாடுகள் நாளாந்தம் நாம் செய்யும் செயற்பாடுகள் போன்றவை. அதற்காக நாம் அதனை அடிக்கடி சொல்லிக்காட்டிக்கொள்வதில்லை. அதுபோன்றுதான் இது வரை மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திகளும். ஆனால் என்றோ ஒருநாள் செய்த அபிவிருத்தியை இன்றும் சொல்லிக்கொண்டு திரிகின்றார்கள்.

இங்குள்ள மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு எவருக்கும் விருப்பம் இல்லை. பிரச்சினைகள் இவ்வாறு தொடர்ந்தால் தான் அதை வைத்து அரசியல் செய்யலாம் என்பது அவர்களின் சிந்தனை. இறுதி யுத்தத்தின் போது அதிலும் குறிப்பாக கடந்த காலங்களில் மக்களுக்கு மீள கையளிக்கப்பட்ட தங்கங்களின் மிகுதிக்கு என்ன நடந்தது என்பதை தென்னிலங்கை மக்களும் கேள்வி எழுப்புகின்றனர். விடுதலை புலிகளின் வங்கியில் வைப்பிலிடப்பட்ட பணத்திற்கு என்ன நடந்தது.

அவற்றில் கொஞ்ச நகைகள் கொடுக்கப்பட்டன. மிகுதி தங்கத்திற்கு என்ன நடந்தது என்று தெரியாது. எவ்வளவு தங்கம் பணம் மீட்கப்பட்டது என்பது ரணில் விக்கிரமசிங்க விற்கும் தெரியாது. எல்லோரும் தத்தமது அரசியலை பாதுகாக் கவே முற்படுகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (9)



# மீள்குடியேறி பத்து வருடங்கள் கடந்தும் அபிவிருத்தியடையாத நாகபடுவான் கிராமம்



(மன்னார்)

கிளிநொச்சி பூநகரி பிரதேச சபைக்குட்பட்ட கரியாலை நாக படுவான் கிராமத்தை சேர்ந்த மக்கள் மீள்குடியேறி பத்து வருடங்கள் ஆகியும் இதுவரை தாங்கள் தொடர்ச்சியாக அடிப் படை வசதிகள் எதுவும் இன்றி அவதியுறுவதாகவும் அரச அதி காரிகள் தொடர்ச்சியாக பாராமுக மாக செயற்படுவதாகவும் மெசிடோ நிறுவனத்தினால் ஒழுங்கு செய் யப்பட்ட மக்கள் கருத்து கேட்கும் நிகழ்ச்சி திட்டத்தில் விசனம் தெரி வித்துள்ளனர்.

கிளிநொச்சி கரியாலை நாக படுவான் கிராமத்தை சேர்ந்த மக்கள் யுத்தகாலப்பகுதியில் இரா ணுவ நடவடிக்கை காரணமாக தங்களுடைய சொந்த கிராமத்தில் இருந்து வெளியேற்றப்பட்டு தற்கா லிகமாக பல்வேறு பகுதிகளுக்கு இடம்பெயர்ந்து இறுதியில் கடந்த 2009 ஆம் ஆண்டு யுத்தம் நிறைவடைந்த பின்னர் குறித்த பகுதி மக்கள் அவர்களின் சொந்த நிலங்களில் மீள்குடியேற்றப்பட்ட னர்.

ஆனால் மீள்குடியேறி 10 வருட ங்கள் கடந்தும் கரியாலை நாகபடு வான் மக்கள் அடிப்படை வசதிகள் கூட பூர்த்தி செய்யப்படாமல் ஒழுங் கான போக்குவரத்து வசதிகள் இன்றி அன்றாட வாழ்வாதாரத் திற்கே கஷ்டப்படும் நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

அதேபோன்று இதுவரை குறி த்த மக்களுக்கான ஒழுங்கான போக்குவரத்து வசதிகளோ சுகா தர வசதிகளோ அரசாங்கத்தினால் செய்து தரப்படவில்லை எனவும் அதேநேரத்தில் தரம் 5 ஆம் ஆண்டு வரை மாத்திரமே பாட சாலை காணப்படுவதால் 5 ஆம் தரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் 10 கிலோ மீற்றருக்கு மேற்பட்ட தூரம் காட்டுப் பாதைகளினால் பயணித்தே பாடசாலைக்கு செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலை காணப்படுவதாக கரியாலை நாக படுவான் மக்கள் ஆதங்கம் தெரி விக்கின்றனர்.

அத்துடன் குறித்த கிராமத்தின் பிரதான பாதை மோசமான நிலை யில் காணப்பட்டதை தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினர் சிறி தரனின் நிதி ஒதுக்கீட்டில் குறித்த பிரதான பாதைக்கு 20 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் கிரவல் மண் சுமார் 2 கிலோமீற்றருக்கு குவிக்கப்பட்ட நிலையில் குறித்த வீதியானது மூன்று மாதங்களுக்கு மேலாக பரவப்படாமல் கிரவல் குவிக்கப்பட்ட நிலையில் காணப்ப டுகின்றது. குறித்த கிரவலை பர வித்தருமாறு பல்வேறுபட்ட அதி காரிகளிடம் கோரிக்கை விடுத்தும் இதுவரை யாரும் குறித்த பிரதான பாதையை சீர் செய்வதில் அக் கறை எடுப்பதாக தெரியவில்லை எனவும் மக்கள் தெரிவிக்கின் றனர்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட ஏனைய கிராமங்களை அரசாங்கம் மற் றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அபிவிருத்தி செய்யும் போது எங் கள் கிராமங்களையும் அபிவிரு த்தி செய்ய முயற்சி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எனவே சம்பந்தபட்ட அதிகாரி கள் உடனடியாக தலையிட்டு தங்களுக்கு ஆடம்பர வசதிகளை செய்து தராவிட்டாலும் அடிப்படை வசதிகளான ஆரம்ப சுகாதார நிலை யம், வாய்க்கால் புனரமைப்பு, பிரதான வீதிகள், போக்குவரத்து போன்ற பொதுவான வசதிகளை யாவது செய்துதர நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மக்கள் கோரி க்கை விடுக்கின்றனர். (9-285)

# விசுவமடு கிராம அலுவலர் பிரிவை இரு பிரிவுகளாக்கக் கோரிக்கை

(கண்டாவளை)


முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட விசுவமடு கிராம உத்தியோகத்தர் பிரிவினை இரண்டு கிராம உத்தி யோகத்தர் பிரிவுகளாக பிரிக்க வேண்டும் என பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் உள்ள விசு வமடு கிராம உத்தியோகத்தர் பிரிவில் தற்போது ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இவ்வாறு ஆயிரம் வரையான குடும்பங்களுக்கான தேவைகளை நிறைவு செய்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவ தாகவும் தெரிவித்த பிரதேச மக் கள், தமது பிரதேசத்திற்கென கிடைக்கப்பெறும் ஒதுக்கீடுகள் பங்கீடு செய்வதிலும் பெரும் சிரம ங்கள் காணப்படுகின்றன.

எனவே தமது கிராம உத்தி யோகத்தர் பிரிவினை இரண்டு பிரிவுகளாகப் பிரிப்பதற்கு உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ள னர். (9-315)

# சுகவீன விடுமுறைப் போராட்டத்தால் பொதுமக்கள் அசௌகரியம்



(நெளுக்குளம்)

சம்பளம் மற்றும் கொடுப்ப னவு பிரச்சினைகளை முன்னி றுத்தி அரச நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள் சுகவீன விடு முறைப் போராட்டத்தில் நேற்று ஈடுபட்டிருந்தனர்.

அரச நிர்வாக அமைச்சினால் ஒருதரப்பினருக்கு மாத்திரம் கொடுப்பனவை அதிகரிப்பதற்காக முன்வைக்கப்பட்ட அமைச்சர வைப் பத்திரத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தே குறித்த் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இந்த தொழிற்சங்க நடவடிக் கைக்கு, கிராம சேவை உத்தி யோகத்தர்கள், அபிவிருத்தி உத் தியோகத்தர்கள், அரச முகாமை த்துவ உதவியாளர்கள் உள்ளிட்ட 18 தொழிற் சங்கங்களின் உறு ப்பினர்கள் ஆதரவு தெரிவித் திருந்தனர்.

இதேவேளை குறித்த தொழி ற்சங்க போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து வடக்கிலும் நேற்று வேலை நிறுத்தப்போராட்டம் முன்னெடுக்கபட்டுள்ளது.

குறிப்பாக மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் பல்வேறு உத்தி யோகத்தர்கள் சுகவீன விடு முறைப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து கடமைக்கு சமுகம ளிக்கவில்லை.

இதனால் பல்வேறு சேவை களை பெற்றுக்கொள்வதற்காக பிரதேச செயலாக்கங்களு க்கு வருகை தந்த பொதுமக் கள் பல்வேறு அசௌகரியங் களுக்கு முகம் கொடுத்திருந் தனர். (9-299)



## 1500 இற்கு மேற்பட்ட மண் மூடைகள் அடுக்கியும் பயனில்லை

# வன்னேரிக்குளத்தில் நிரந்தர தடுப்பணைகளை அமைக்குமாறு விவசாயிகள் கோரிக்கை



(அக்கராயன்)

கிளிநொச்சி வன்னேரிக்கு ளத்தில் இருந்து நீர் வெளியேறு கின்ற சந்தர்ப்பங்களில் அதனைத் தடுப்பதற்கு நிரந்தர கட்டுமானங் கள் உருவாக்கப்பட வேண்டும் என விவசாயிகள் தெரிவிக்கின்ற னர். குளத்தின் நீர் மட்டம் உயர் கின்ற சந்தர்ப்பங்களில் குளத்தில் இருந்து பின்வழியாக நீர் வெளி யேறுகின்ற போது மண் மூடை களை விவசாயிகள் அடுக்கி நீரி னைத் தடுக்கின்ற முயற்சிகளில் ஈடுபடுவார்கள். இதுவரை 1,500 இற்கு மேற்பட்ட மண் மூடைகள் அடுக்கப்பட்டும் நீர் வெளியேறு கின்ற நிலைமைகளில் மாற்றம் ஏற்படவில்லை. இனிவருங்காலம் மழைகாலம் என்பதனால் பெரும ளவு நீர் குளத்தில் இருந்து பின் பக்கமாக வெளியேறுகின்ற நிலைமை காணப்படுகின்றது. இந்நிலையில் குளத்தில் இருந்து நீர் வெளியேறுவதைத் தடுப்பதற்கு நிரந்தரக் கட்டுமானங்கள் உருவாக் கப்பட வேண்டும் என்பது வன்னே ரிக்குளம் விவசாயிகளின் நீண்ட காலக் கோரிக்கையாகும். வன் னேரிக் குளத்தின் பின்பகுதியில் தொடர்கின்ற மணல் அகழ்வும் குளத்தில் இருந்து நீர் வெளியே றுவதற்கு காரணமாக அமைந்து உள்ளது. இப் பகுதியில் மண் அகழ்வு இடம்பெற்று ஜெயபுரம் வழியாக பிற இடங்களுக்குக் கொண்டு செல்லப்படுவதாக வன் னேரிக்குளத்தில் கூட்டங்களில் கலந்து கொள்கின்ற அதிகாரி களிடம் விவசாயிகள் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக் கது. (9-350)

# கோத்தபாயவை ஆதரித்து வவுனியாவில் தீவிர பிரசாரம்

(குருமன்காடு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெர முன கட்சியின் ஜனாதிபதி வேட் பாளர் கோத்தபாய ராஜபக்ஷவை ஆதரித்து வவுனியாவில் தீவிர பிரசார நடவடிக்கைகள் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட் டுள்ளது.

வவுனியாவின் பூவரசன் குளம், கோயில் மோட்டை, சிவன் நகர், புலவனூர் ஆகிய கிராமங் களில் இப் பிரசார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பொதுஜன பெரமுன கட்சியின் அமைப்பாளரும் முன்னாள் வட



மாகாண சபை உறுப்பினருமான தர்மபால செனவிரட்ன தலைமை யிலான பொதுஜன பெரமுன வைச் சேர்ந்த உறுப்பினர்கள் இதில் கலந்து கொண்டு தீவிர பிரசாரங்களை முன்னெடுத் தனர். (9-250)

# புனித சூசையப்பர் வாசகப்பா நிகழ்வு



(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் பிர சித்தி பெற்ற தாழ்வுபாடு புனித சூசையப்பர் வாசகப்பா நிகழ்வு அருட்தந்தை ஜேசுராஜாவின் ஏற்பாட்டில் அண்ணாவியார் கிறிஸ் ரியன் டயஸ் தலைமையில் கடந்த சனிக்கிழமை மாலை 6 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை தாழ்வுபாடு புனித வளனார் பாடசா லையில் இடம்பெற்றது.


சுமார் 100 வருடங்களுக்கு முற் பட்ட தென்மோடி கூத்து சாயலில் தாழ்வுபாட்டு பங்கு மக்களால் நடத் தப்படும் குறித்த வாசகப்பா நிகழ்வு நான்கு வருடங்களுக்கு பின்னர் மன்னாரில் இடம்பெற்றுள்ளது.

குறித்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக மன்னார் மறை மாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ, சிறப்பு விருந்தின ர்களாக மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் விக்டர் சோசை, வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், மன்னார் பிரதேச செயலாளர் கனகாம்பிகை சிவசம்பு, மன்னார் பிரதேச சபை தவி சாளர் முஜாஹிர், பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் ராதா பெர்னாண்டோ, அருட்தந்தையர்கள், அருட்சகோதரர்கள், அருட்சகோ தரிகள், பங்கு மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (9-285)

# பாரதம்

## பஞ்சாப்பை தனிநாடாக மாற்ற விரும்பும் பயங்கரவாதிகளின் முகாம் சுற்றிவளைப்பு

### இயந்திரத்துப்பாக்கிகள் உட்பட பெருமளவு ஆயுதங்கள் மீட்பு





(பஞ்சாப்)

பஞ்சாப் மாநிலத்தை தனிநாடாக மாற்ற விரும்பும் காலிஸ்தான் பயங்கரவாதிகளின் மறைவிடம் பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டு இயந்திரத்துப்பாக்கிகள் உள்ளிட்ட ஏராளமான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

இதன்போது, ஏ.கே-47 ரக இயந்திரத் துப்பாக்கிகள், செயற்கைக்கோள் கைபேசிகள், கையெறி குண்டுகள், பணக் கட்டுகன் ஆகியவை கைப்பற்றப்பட்டன.

பஞ்சாப் மாநிலத்தை தனி நாடாக மாற்ற வேண்டும் என்ற நோக்கத்துடன் பல்வேறு பிரிவினைவாத அமைப்புக்கள் முன்னர் ஆயுதமேந்திய போராட்டங்களில் ஈடுபட்டன. இந்திரா காந்தி பிரதமராக இருந்தபோது இந்த அமைப்புக்கள் ஒடுக்கப்பட்டிருந்தன.


இந்நிலையில் இந்திரா காந்தியின் மறைவுக்குப் பின்னரும் பஞ்சாப் பிரிவினைவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் தொடர்ந்து வருகின்றன.

இருப்பினும், முன்னர் காலிஸ்தான் ஜிந்தாபாத் இயக்கம் என்ற பெயருடன் செயற்பட்டு வந்த பயங்கரவாத அமைப்பு, பாகிஸ்தான் மற்றும் ஜேர்மனியில் இயங்கி வரும் சில பயங்கரவாத குழுக்க ளின் நிதியுதவி மற்றும் ஆதரவு டன் அண்மைக்காலமாக மெல்ல மெல்ல தலைதூக்கத் தொடங்கியது.

இந்தச் சூழ்நிலையில் இவ்வாறு பயங்கரவாதிகளின் முகாம் சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

## இந்தியாவிற்குள் நுழையும் பயங்கரவாதிகளில் ஒருவரேனும் பாகிஸ்தானுக்கு திரும்பிப் போகமுடியாது

### ராஜ்நாத் சிங் எச்சரிக்கை



(டில்லி)

இந்தியாவுக்குள் பாகிஸ்தான் அனுப்பிவைக்கும் பயங்கரவாதிகளில் ஒருவர் கூட திரும்பிப் போக முடியாது என இராணுவ அமைச்சர் ராஜ்நாத் சிங் எச்சரிக்கை விடுத்தார்.

காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்து இரத்துச் செய்யப்பட்டமை குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் ஒழுங்கு செய்யப்பட்ட பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து தெரிவித்த அவர், "காஷ்மீரில் அமைதியை சீர்குலைக்க எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை பாகிஸ்தான் தூண்டி விடுகிறது.

எவ்வளவு தீவிரவாதிகளை பாகிஸ்தான் அனுப்புகிறது என்று பார்ப்போம். இந்தியாவுக்குள் நுழையும் ஒரு பயங்கரவாதிகூட திரும்பிப்போக முடியாது. அந்த அளவுக்கு எல்லையில் எமது இராணுவ வீரர்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்கிறார்கள்.

1965 மற்றும் 1971 ஆம் ஆண்டுகளில் செய்த தவறை பாகிஸ்தான் மீண்டும் செய்யக் கூடாது. தனது மண்ணில் மனித உரிமைகள் மீறப்படுவதை பாகிஸ்தான் தடுத்து நிறுத்த வேண்டும்.

காஷ்மீர் மாநிலம் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதி என்பதை பாகிஸ்தான் மனதில் கொள்ள வேண்டும். பயங்கரவாதத்துக்கு ஆதரவு அளிப்பதை பாகிஸ்தான் நிறுத்தினால்தான் அந்த நாட்டுடன் பேச்சுவார்த்தை நடத்த முடியும். ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதி பற்றி மட்டுமே இனி பாகிஸ்தானுடன் பேச முடியும்" என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-2)

## ரஷ்யாவிடம் ரபேல் போர் விமானங்களை மேலதிகமாக கொள்வனவு செய்யும் இந்தியா

(டில்லி)

பிரான்ஸ் நிறுவனத்துடன் மத்திய அரசு ஏற்கனவே செய்துள்ள ஒப்பந்தத்தின்படி 36 ரஃபேல் போர் விமானங்களை இந்தியா கொள்வனவு செய்யவுள்ள நிலையில் மேலும் 36 ரஃபேல் போர் விமானங்களை வாங்குவதற்கு மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

இந்தப் புதிய ஒப்பந்தம் 2020 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இறுதிசெய்யப்படலாம் என இந்தியப் பாதுகாப்பு ஆய்வுப் பிரிவு கடந்த (சனிக்கிழமை) வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்தது.

பிரான்சின் டஸால்ட் அவியேஷன் நிறுவனத்திடம் இருந்து சுமார் ரூ.62 ஆயிரம் கோடி மதிப்பில் 36 ரபேல் போர் விமானங்கள் வாங்குவதற்காக கடந்த 2016 செப்டம்பர் மாதம் இந்தியா ஒப்பந்தம் செய்தது.

இந்த ஒப்பந்தத்தின்படி முதல் போர் விமானம் இந்திய விமானப் படை அதிகாரியிடம் முறைப்படி ஒப்படைக்கப்பட்டது. அந்த விமானத்துக்கு ஆர்.பி.-01 என பெயரிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் எதிர்வரும் ஒக்டோபர் 8ஆம் திகதி பிரான்ஸ் செல்லும் மத்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்கிடம் ரபேல் போர் விமானம் அதிகாரபூர்வமாக ஒப்படைக்கப்படவுள்ளது. அடுத்த ஆண்டுக்குள் அனைத்து விமானங்களும் இந்தியாவிடம் ஒப்படைக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

## நைரோபியில் பாடசாலைச் சுவர் இடிந்து வி

### ஏழு சிறுவர்கள் உயிரிழப்பு; மேலும் 17 பே

(நைரோபி)

கென்யாவின் நைரோபியில் உள்ள பாடசாலைக் கட்டடம் ஒன்றின் வகுப்பறைக் கட்டடத்தின் சுவர் இடிந்து வீழ்ந்ததில் 7 மாணவர்கள் உயிரிழுந்தனர்.

இந்த விபத்தானது நேற்றுக் காலை 7 மணியளவில் இடம்பெற்றது.

இதன்போது படுகாயமடைந்த 17 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக சர்வதேச ஊடகம் செய்தி வெளியிட்டது. (ஜ-2)



## அமெரிக்காவில் ஜனாதிபதித் ட்ரம்பையே ஆதரிக்க வேண்

### அமெரிக்கர்களிடம் மோடி வலி



## ஐம்பது இலட்சம் அமெரிக்காவிடமிரு


### மோடி முன்னிலையில் ஒ

(ஹூஸ்டன்)

அமெரிக்காவில் இருந்து 50 இலட்சம் தொன் இயற்கை எரிவாயு இறக்குமதி செய்ய பிரதமர் மோடி முன்னிலையில் ஒப்பந்தம் கையெழுத்தானது.

அமெரிக்காவில் இருந்து 50 இலட்சம் தொன் இயற்கை எரிவாயு இறக்குமதி செய்ய பிரதமர் மோடி முன்னிலையில் ஒப்பந்தம் கையெழுத்தானது.

பிரதமர் நரேந்திர மோடி ஒரு வார கால அமெரிக்க சுற்றுப் பயணம் மேற்கொண்டார். முதல் கட்டமாக நேற்று முன்தினம் அவர் ஹூஸ்டன் நகருக்கு சென்றார். அங்கு அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.



அங்கு நடைபெற்ற கூட்டத்தின் போது பிரதமர் மோடி முன்னிலையில் அமெரிக்காவின் டெல்லூரியன் நிறு

# வெளிநாடு

## து வீழ்ந்ததில்

## பேர் காயம்





## வீழ்ந்தது பிரிட்டனின் தோமஸ்குக் நிறுவனம் சிக்கித் தவிக்கும் 2 இலட்சம் சுற்றுலாப்பயணிகள்



(பிரிட்டன்)

பிரிட்டனைச் சேர்ந்த பிரபல சுற்றுலாப் போக்குவரத்து குழும மான தோமஸ் குக் வீழ்ச்சி யடைந்து தனது வர்த்தக நட வடிக்கைகளை உடனடியாக நிறுத்துவதாக அறிவித்தது.

178 வருடகால நிறுவனத்தை காப்பாற்றுவதற்கான இறுதிக்கட் டப்பேச்சுவார்த்தைகள் தோல் வியடைந்துள்ளதாக தகவல்கள் வெளியாகின.

தோமஸ்குக் தனது நடவடிக் கைகளை இடைநிறுத்தியதன் காரணமாக உலகின் பல நாடு களில் இடைநடுவில் சிக்குண் டுள்ள பிரிட்டிஷ் பயணிகளை நாட்டிற்கு அழைத்து வருவதற் கான நடவடிக்கைகள்' ஆரம் பிக்கப்பட்டுள்ளன.

தனது நிறுவனம் கவிழ்ந் தமை மிகவும் கவலைக்குரிய விடயம் என தோமஸ் குக்கின் பிரதம நிறைவேற்று அதிகாரி கவலை வெளியிட்டார். தோமஸ் குக் நிறுவனம் மூடப்பட்டதால் சர் வதேச அளவில் 22.000 பேரும் பிரிட்டனில் 9000 பேரும் வேலை இழக்கும் அபாயம் ஏற்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

## தித் தேர்தலில் ண்டும்

### வலியுறுத்து

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் அடுத்த ஜனா திபதியாக டொனால்ட் ட்ரம்பை தெரிவு செய்ய வேண்டும் என பிரதமர் நரேந் திர மோடி வலியுறுத்தினார்.

அமெரிக்காவின் ஹூஸ்டன் நகரில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற ஹவுடி மோடி நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக் கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், "அமெரிக்கா, மும் பையில் தாக்குதல் நடத்திய வர்களை தற்போது எங்கே தேடு வது.

அவர்கள் எங்கு இருக்கி றார்கள் என்பது அனைவருக்கும் தெரியும். பயங்கரவாதிகளுக் கும், பயங்கரவாதிகளை உரு வாக்குபவர்களுக்கும் தக்க பதி லடி கொடுத்தே ஆக வேண்டும்.

பயங்கரவாதத்தை வேரறுக்க அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் உறுதி பூண்டுள்ளார். அவருக்கு அனைவரும் எழுந்து நின்று ஆதரவு தெரிவிக்க வேண்டும். ஒட்டுமொத்த இந்தியாவும், ட்ரம் புடன் நன்கு தொடர்பு கொண்டு ள்ளது.

அடுத்த ஆண்டு அமெரிக்கத் தேர்தல் நடைபெறவுள்ளதால், அவர் வேட்பாளராக மீண்டும் நிற்கிறார். எனவே, அவரை மீண்டும் ஜனாதிபதி யாகத் தெரிவு செய்ய வேண்டும்" என மேலும் தெரிவித்தார்.(ஜ-2)

## சாதியவாதத்தை வன்கொடுமையாக ஐ.நா. அங்கீகரிக்க வேண்டும்

### தொல்.திருமாவளவன் அமெரிக்காவில் வலியுறுத்து

(வோஷிங்டன்)

சாதியவாதம் ஒரு பெரும் வன்கொடுமை என ஐ.நா.சபை அங்கீகரிக்க வேண்டும் என விடுதலைச் சிறுத்தைகள் கட்சி யின் தலைவரும் மக்களவை உறுப்பினருமான தொல். திரு மாவளவன் வலியுறுத்தினார்.

அமெரிக்காவின் நியூஜெர் சியில் நேற்று முன்தினம் நடை பெற்ற சாதிய ஒடுக்குமுறை மற் றும் அடிமைத்தனத்தின் சமகால வடிவங்கள் எனும் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து தெரி வித்த அவர், "உலகெங்கிலும் உள்ள ஜனநாயக சக்திகளின் ஆதரவு இல்லாமல் சாதியை ஒழிப்பது எளிதானது அல்ல. எனவே, எங்களுக்கு உலக அள வில் நாடாளுமன்றத்தினரின் ஆதரவு தேவை. முதலில் நாம் இந்தப் பிரச்சினையை ஐநா சபையில் கொண்டுவர வேண்டும்.

ஐ.நா.சபை இனவாத ஒழி ப்பை அங்கீகரித்தது இனவெறி யால் நடைபெற்ற வன்கொடுமை களை அகற்றுவதற்கான தீர் வைக் கண்டறிந்தது. ஆனால், ஐ.நா. சபையில் சாதி ஒழிப்புக் கான திட்டங்கள் ஏதுவும் இது வரையில் இல்லை.



எனவே, 'சாதியவாதம்' என் பது ஒரு வன்கொடுமை என உலக அளவில் அங்கீகரிக்க, பல்வேறு நாடுகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்தப் பிரச்சினையை அரசாங் கத்தின் கவனத்துக்குக் கொண்டு வர வேண்டும். 200 மில்லிய னுக்கும் அதிகமான மக்கள் சாதியால் பாதிக்கப்பட்டுள்ளனர்" என மேலும் தெரிவித்தார்.(ஜ-2)

## தொன் எரிவாயு ருந்து இறக்குமதி

### ஒப்பந்தம் கைச்சாத்து



வனத்துடன் இந்தியாவின் பெட்ரோ நெட் எல்.என்.ஜி. நிறுவனம் 50 இலட்சம் தொன் இயற்கை எரிவாயுவை (எல். என்.ஜி). பங்கு முதலீடுகள் வாயி லாக இறக்குமதி செய்வதற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெ ழுத்திடப்பட்டது.

இந்த ஒப்பந்தத்தின்படி, டெல் லூரியன் நிறுவனம், அமைக்க வுள்ள டிரிப்வுட் எல்.என்.ஜி. ஏற்றுமதி முனையத்தில் இந்தி யாவின் பெட்ரோநெட் எல்.என். ஜி. நிறுவனம் 2 1/2 பில்லியன் டொலர் (சுமார் ரூ.17 ஆயிரத்து 750 கோடி) முதலீடு செய்யும்.

40 ஆண்டு காலத்துக்கு ஆண் டுக்கு 50 இலட்சம் தொன் இய ற்கை எரிவாயுவை (எல்.என்.ஜி.) டெல்லூரியன் நிறுவனம் இந் தியாவுக்கு வழங்கும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

## வளைகுடா நாடுகளின் பாதுகாப்பிற்கு வெளிச் சக்திகளால் அச்சுறுத்தல்

### ஈரான் ஜனாதிபதி கவலை





(டெஹ்ரான்)

வளைகுடா பிராந்தியத்தை சேர்ந்த மக்களுக்கு வெளிநாட்டு சக்திகள் பிரச்சினைகளை உரு வாக்கி, பாதுகாப்பின்மைக்கு காரணமாகி விடலாம் என ஈரான் ஜனாதிபதி ஹசன் ரவு ஹானி தெரிவித்தார்.

சவுதி அரேபியா நாட்டிலுள்ள பெற்றோலிய சுத்திகரிப்பு ஆலை மற்றும் பெற்றோல் கிணறு ஆகி யவற்றின் மீது கடந்த 14 ஆம் திகதி ஆளில்லா விமானங்கள் மூலம் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதனால், சவுதி அரேபியா நாட்டின் பெற்றோலிய கச்சாய் எண்ணெய் உற்பத்தி சரிபாதி யாகக் குறைந்துள்ளது.

இந்தத் தாக்குதலுக்கு ஈரான் தான் காரணம் என சவுதி அர சும் அமெரிக்காவும் குற்றம்சாட்டி வருகின்றன.

இதுபோன்ற தாக்குதல்களில் இருந்து சவுதி அரேபியாவை காப்பாற்ற படைகளை அனுப்பப் போவதாக அமெரிக்கா அறி வித்தது.

இந்நிலையில், வெளிநாட்டு சக்திகள் இங்கு காலூன்றினால் வளைகுடாப் பிராந்தியத்தை சேர்ந்த மக்களுக்குப் பிரச்சினை களை உருவாக்கிப் பாதுகாப் பின்மைக்குக் காரணமாகி விட லாம் என ஈரான் ஜனாதிபதி ஹசன் ரவுஹானி குற்றம் சாட்டி னார். (ஜ-2)

# தாயிடமிருந்து பிள்ளைக்கு எச்.ஐ.வி. தொற்றுவதை ஒழித்த இலங்கை!

(கொழும்பு)

**தாயிடமிருந்து பிள்ளைக்கு எச்.ஐ.வி. தொற்றுவதை ஒழித்துள்ள நாடாக இலங்கைக்கு உலக சுகாதார அமைப்பு நற்சான்று வழங்கியது.**

இந்த விடயத்தை பாலியல் சார்ந்த நோய்கள், தடுப்பு தேசிய அமைப்பு தெரிவித்தது.

இதற்கான சான்றிதழ் இந்த வருட இறுதிக்குள் இலங்கைக்கு வழங்கப்படவுள்ளதாக அந்த அமைப்பின் பிரதிப் பணிப்பாளர் லிலானி ராஜபக்ஷ தெரிவித்தார்.

எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளான பெண்ணொருவர் கர்ப்பமடைந்திருந்தால், அவரது வயிற்றிலுள்ள குழந்தைக்கு அந்த வைரஸ் பரவாமல் மருந்துகள் மூலம் தடுக்கும் முறையை இலங்கை சுகாதாரத்துறையினர் பயன்படுத்தி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு உதவி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி -கோவிற்குடியிருப்பு ஜே/301 கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள உதயசூரியன் கிராமத்தில் வீட்டுத்திட்டப் பயனாளிகளுக்கு சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் ம.நடனதேவனால் கடந்த சனிக்கிழமை சீமெந்துப் பைக்கற்றுக்கள் வழங்கப்பட்டன.

உதயசூரியன் கிராமத்தில் 51 வீடுகளை உள்ளடக்கி மாதிரிக் கிராமம் அமைக்கப்பட்டு வந்த வேளையில் அம்மக்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படாத நிலையில் வீட்டுத்திட்டப் பணிகளைப் பூர்த்தி செய்ய முடியவில்லை.

இதன் காரணமாக சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் நடனதேவன் முதற்கட்டமாக பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு 150 சீமெந்து பைக்கற்றுக்களை வழங்கினார். கடந்த சித்திரை மாதம் ஆரம்பிக்கப்பட்ட வீட்டுத் திட்டப் பணிகள் இதுவரை பூர்த்தி செய்யப்படவில்லை எனவும் தமக்கு இதுவரை அதிகபட்சமாக இரண்டு இலட்சம் ரூபாய் மாத்திரமே வழங்கப்பட்டதாகவும் அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-30)

# வடக்கிலுள்ளவர்களுக்கு முன்னுரிமையளித்து வேலைவாய்ப்புக்களை வழங்க முடியுமா?

## ஹக்கீமிடம் டக்ளஸ் கேள்வி

(கொழும்பு)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடாத ஏனைய பணியாளர்களின் ஆட்சேர்ப்புச் செய்வதில் பக்கச் சார்புகளும் முறைகேடுகளும் காணப்படுவதாகவும் இத்தகைய நிலைமைகள் அரசியல் தலையீடுகளாக கணிக்கப் பெறுவதாகவும் பணியாளர்களது சங்கமானது குற்றச்சாட்டை முன்வைத்து போராட்டமொன்றையும் நடத்தி வருகின்றது.

குறிப்பாக, மேற்படி பணிகளுக்கென வடக்கு மாகாணத்திலிருந்து விண்ணபித்திருந்த 400 இற்கும் அதிகமான விண்ணப்பதாரிகளின் பெயர்கள், உயர் கல்வி அமைச்சிலிருந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பப்பட்டுள்ள ஆட்சேர்ப்புப் பட்டியலில் நீக்கப்பட்டுள்ளதுடன், வடக்கு மாகாணத்திற்கு வெளியே வாழ்ந்து வருகின்றவர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டு, மேற்படி ஆட்சேர்ப்புப் பட்டியல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் இவ்வாறு பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவர்களுக்கு நியமனங்களை வழங்குவதைத் துரிதப்படுத்துமாறு யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திற்கு அழுத்தங்கள் உயர் கல்வி அமைச்சிலிருந்து கொடுக்கப்பட்டு வருவதாகவும் மேற்படிப் பணியாளர்கள் சங்கத்தினர் குற்றம்சாட்டுகின்றனர்.

வடக்கு மாகாணத்திலே வேலை வாய்ப்பேற்று பல ஆயிரக் கணக்கானோர் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வருகின்ற நிலையில், அங்கே நிலவுகின்ற அனைத்து அரச நிறுவனங்களின் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்கின்றபோது, வடக்கு மாகாணத்தில் உள்ளவர்களுக்கே முதலிடம் கொடுக்கப்பட வேண்டும் என்ற விடயத்தை நாம் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்ற நிலையில், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் வெற்றிடங்களுக்கு வெளி மாகாணத்தவர்களை நியமிக்க முனைவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

அதேநேரம், பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து, அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடாத பணியாளர்கள் கடந்த 10 ஆம் திகதி முதல் தொடர்ச்சியான பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

எனவே, மேற்படி விடயங்கள் தொடர்பில் துறைசார் அமைச்சரிடம் பின்வரும் கேள்விகளை முன்வைக்கின்றேன்.

01.யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்விச் செயற்பாடுகள் அல்லாத ஏனைய பணிகளுக்கென வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த சுமார் 400 இற்கும் அதிகமானவர்கள் விண்ணப்பம் செய்துள்ளதாகக் கூறப்படுகின்ற நிலையில், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்ற ஆட்சேர்ப்புப் பட்டியலில் அவர்களது பெயர்கள் நீக்கப்பட்டுள்ளமைக்கான காரணம் என்ன?

02.தற்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஆட்சேர்ப்புப் பட்டியலில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் எந்தெந்த மாகாணங்களைச் சேர்ந்தவர்கள்?

03.யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பணிகளுக்கென வடக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்களுக்கு முதலிடம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காததற்கு என்ன காரணம்?



04.தற்போது அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஆட்சேர்ப்புப் பட்டியலை மீளாய்வுக்கு உட்படுத்தி, வடக்கு மாகாணத்தில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கி, மேற்படி வேலைவாய்ப்புக்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க முடியுமா?

05.அனைத்துப் பல்கலைக் கழக கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடாத ஏனைய பணியாளர்களது கோரிக்கைகள் தொடர்பில் உயர் கல்வி அமைச்சு தற்போது என்ன நடவடிக்கையினை எடுத்துள்ளது?

எனது மேற்படி கேள்விகளுக்கான பதில்களையும் எடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பிலான விளக்கத்தையும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் வழங்குவார் என எதிர்பார்க்கின்றேன் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நடைபெற்ற 27/2 நிலையியல் கட்டளையின் கீழான கேள்வி நேர விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கேள்வியெழுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## ஒற்றுமை

ஒரே ஒரு ஊரிலே அண்ணன், தம்பி இரண்டு பேர் இருந்தார்கள். அவர்கள் அப்பா கடைசியாக அவர்களுக்கென்று விட்டிட்டுப் போன சொத்து ஒரே ஒரு மாமரம், ஒரே ஒரு பசுமாடு, ஒரே ஒரு போர்வை அவ்வளவுதான். இந்த மூன்றையும் அவர்கள் இரண்டு பேரும் ஆளுக்குப் பாதியாக பிரித்துக் கொள்ள வேண்டும். பாகப் பிரிவினை!

எப்படி பாதியாகப் பிரிக்கிறது? எப்படி பங்கு போட்டுக் கொள்வது? எல்லாத்தையும் சரி பாதியாக வெட்டி ஆளுக்குப் பாதியாகவா எடுத்துக்கொள்ள முடியும்.

அண்ணன்காரன் ஒரு மக்கு. என்ன சொன்னாலும் தலையாட்டிக்கொண்டு போறவன். தம்பிக்காரன் கொஞ்சம் புத்திசாலி. இருந்தாலும் அந்த புத்திசாலித்தனத்தை தப்பா உபயோகப்படுத்தக் கூடியவன். அந்த தம்பிக்காரன் அண்ணனிடம் சொன்னான்,

"அண்ணா நம்ம அப்பா நமக்காக விட்டுட்டுப் போன சொத்தை நாம இரண்டு பேருமே ஒற்றுமையாக இருந்து பிரித்துக்கொள்ளலாம். இதுக்காக ஊரைக்கூட்டி பஞ்சாயத்து வைக்க வேண்டிய அவசியம் இல்லை?"என்றான்.

''சரி தம்பி...அப்படியென்றால் நீயே அதை பங்குபோடு'' என்றான் அவன். தம்பிக்காரன் யோசனை செய்தான். பின்பு சொன்னான்.

''அண்ணாச்சி நீங்க வயதில மூத்தவர். அதனாலே அந்த மூன்று விடயத்திலேயும் உங்களுக்குத்தான் முன்னுரிமை கொடுக்க வேண்டும். அதுதான் நியாயம். முதலிலே அந்த மாமரத்தை எடுத்துக்கொள்வோம். அதிலே அடிப்பாகம் தான் வலுவானது. அதனாலே அந்த மரத்திலே பாதிக்குக் கீழே உள்ளதெல்லாம் அதாவது வேர் உட்பட அடிப்பாகம் முழுவதும் உங்களுக்கு. மேல் பாகம் வெறும் கிளையும் இலையுமா இருக்கிறது...அது எனக்கு இருக்கட்டும்.

அடுத்தபடியாக உள்ளது அந்தப் பசுமாடு. எண்சாண் உடம்புக்கு சிரசே பிரதானம். அதனாலே அந்த மாட்டிலே தலைப்பாகம் உங்களுக்கு. பின்பக்கம் எனக்கு இருந்திட்டுப் போகட்டும்.

அடுத்தது அந்தப்போர்வை. அதைப்பகல் பூரா நீங்கள் வைத்துக் கொள்ளுங்கள். இரவு பூரா நான் வைத்துக்கொள்கின்றேன் என்றான் தம்பிக்காரன்.

விபரம் புரியாமல் சரி என்று ஒத்துக் கொண்டான் அண்ணன். பின்பு என்ன ஆகியிருக்கும் தெரியுமா? அண்ணன்காரன் அந்த மரத்துக்கு உரம் போடுகிறான், நீர் இறைக்கிறான். தம்பிக்காரன் ஜாலியா மேலே உள்ள பழத்தையெல்லாம் பறித்துக்கொண்டிருக்கிறான். அண்ணன்காரன் பசுமாட்டுக்கு முன்பக்கம் தீனி வைக்கிறான், புல்லு போடுகிறான், தண்ணி வைக்கிறான். தம்பிக்காரன் பின்பக்கம். அவன் பாட்டுக்கு பால் கறந்து குடித்துக் கொண்டிருக்கிறான்.

அண்ணன்காரன் பகல் பூரா போர்வையை மடித்து வைத்திருக்கிறான். தம்பிக்காரன் ஜாலியா இரவிலே அதை வாங்கி போர்த்திக் கொண்டு தூங்கிறான். இப்படியே நடந்து கொண்டிருந்தது. இதை பக்கத்து வீட்டுக்காரன் ஒரு நாள் கவனித்தான். நடக்கிறது நியாயமில்லை என்பதை புரிந்து கொண்டான்.

உடனே அந்த அண்ணன்காரனை இரகசியமாக ஒருநாள் தன் வீட்டுக்கு அழைத்துக்கொண்டு வந்து சில போதனையெல்லாம் செய்தான். இனிமேல் இப்படி நடந்துகொள் என்று யோசனை சொன்னான். அவனும் சரி என்று சொல்லி தலையாட்டிக் கொண்டு போனான். அதன்பின்பு என்ன ஆனது தெரியுமா?

அண்ணன்காரன் மரத்துக்கு உரம் போடுறது, நீர் இறைக்கிறதை நிறுத்தினான். மரம் காய்க்கவில்லை. தம்பி முழிக்க ஆரம்பித்தான். ஒரு கோடரியை எடுத்து அடிமரத்தை வெட்ட ஆரம்பித்தான் அண்ணன். தம்பி பதறிப் போய் "என்னண்னே இப்படிச் செய்கிறீர்களே" என்றான்.

"என் பங்கில நான் என்ன வேண்டும் என்றாலும் செய்வேன். உன் பாகத்திலேயா நான் வெட்டுகிறேன் என்றான் அவன். மாட்டுக்குத் தீனி வைக்கிறதையும் தண்ணி வைக்கிறதையும் நிறுத்தினான். தம்பி பால் கறந்து குடிக்க முடியவில்லை.

அந்தப் போர்வையை பகல் பூராகவும் அண்ணன்காரன் வைத்திருந்து இரவு நேரம் வருவதற்குள் அதை தண்ணீரிலே நனைத்து தம்பியிடம் கொடுத்தான். அவனால் போர்த்திக்கொள்ள முடியவில்லை. அதன் பிறகு அண்ணனிடம் சமரசம் செய்து நியாயமாக நடக்க ஆரம்பித்துவிட்டானாம் அந்தத் தம்பி.

ஒற்றுமையா வாழுறதிலேயும் ஒரு ஒழுங்குமுறை வேண்டும் என்பதை இதிலேயிருந்து புரிகிறது இல்லையா?

ஒரு ஆள் சொன்னான். "இது மாதிரி சேர்...என்னுடைய எதிர்த்த வீட்டுக்காரனிடம் நான் ரொம்பவும் பிரியமாக நடந்து" கொண்டான். அவனை என்கூடப் பிறந்த தம்பியா நினைத்துப் பழகினேன். தம்பி என்று கூப்பிடுவேன். அதுதான் இப்ப தப்பாப் போச்சு என்றான். ஏன் என்று கேட்டேன்.

"அவனும் அதை நிஜம் என்று நினைத்துக்கொண்டு இப்ப என் மரத்திலே பாதி பங்கு கேட்கிறான் சேர்" என்றான் ரொம்ப வேதனையோடு.

# நாடு ஸ்தம்பிதம்!

## மைத்திரி மீது மகிந்த அணி சீற்றம்

(மெனிக்ஹின்ன)

**ராஜபக்ஷக்களுக்கும் சீனாவிற்கும் இழிவை ஏற்படுத்துவதற்கே ஜனாதிபதி மைத்திரி, தாமரைக் கோபுர நிர்மாணிப்பு தொடர்பில் பொய்யான தகவலை வெளியிட்டார் எனச் சுட்டிக்காட்டிய மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க, இவ்வாறான முரண்பாடுகள் நீடித்தால் நாடு ஸ்திரமற்ற-ஸ்தம்பித நிலையை நோக்கி நகரும் எனவும் எச்சரித்தார்.**

மெனிக்ஹின்ன பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். ஜனாதிபதியும், பிரதமரும் மோதிக் கொள்ளும் ஸ்திரமற்ற அரசாங்கத்தை அமைப்பதில் பயனில்லை.

தாமரைக் கோபுர நிர்மாணம் தொடர்பில் ஜனாதிபதி வெளியிட்ட கருத்து பொய்யானது என அம்பலமாகியுள்ளது.

ராஜபக்ஷக்களுக்கும், சீனாவிற்கும் இழிவை ஏற்படுத்துவதற்கே ஜனாதிபதி இவ்வாறு பொய்களை கூறி வருகிறார்.

இவ்வாறான முரண்பாடுகள் நீஷத்தால் நாடு ஸ்திரமற்ற நிலையை நோக்கி நகரும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (இ-7)



## மைத்திரியின் பிடிவாதத்தால்

# 480மில்.டொலர்களை இலங்கை இழந்தது

(கொழும்பு)

மிலேனியம் சவால் நிதிய 480 மில்லியன் டொலர்களை இலங்கை இழந்துவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வருடம் முதல் இந்த நிதியை இலங்கைக்கு வழங்கும் வகையில் உடன்படிக்கையை செய்து கொள்ள அமெரிக்கா வலியுறுத்தி வந்தது.

எனினும் அரசியல் காரணங்களுக்காகவும் இலங்கையின் இறைமையை காரணம் காட்டியும் இலங்கை இதற்குப் பின்னடித்து வந்தது.

அத்துடன் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் இந்த உடன்படிக்கையை செய்து கொள்ள உடன்பட்ட போதும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த உடன்படிக்கைக்கு இணக்கம் வெளியிடவில்லை.

இந் நிலையில் இது தொடர்பில் எம்.சி.சியின் நிறைவேற்று சபை கடந்த வாரம் கூடி ஆராய்ந்தது.

இதன்போது இலங்கை இந்த உடன்படிக்கையைச் செய்து கொள்வதில்தாமதம்காட்டிவருவது தொடர்பாக ஆராயப்பட்டு, அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து பேசப்பட்டுள்ளது.

எதிர்வரும் டிசெம்பரில் எம்.சி.சியின் வருடாந்த கூட்டம் நடைபெறும் போது இந்த நிதியை வழங்கக்கூடிய ஒரு நாட்டை தெரிவு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை 2020ஆம்ஆண்டில் இருந்து இந்த நிதியை இலங்கையால் பெற்றுக் கொள்ள முடியாது என்று எம்.சி.சியின் இலங்கைக்கான பணிப்பாளர் ஜென்னர் எடெல்மன் தெரிவித்தார்.

நிதிக்கான கோரிக்கையை முன்வைத்த அரசாங்கமே அந்த நிதியை பெற்றுக் கொள்ள உடன்படிக்கை செய்து கொள்ளாமல் இருக்கும் செயலை தாம் இது வரை கண்டதில்லை என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

# கண்ணிவெடி அகற்றும் திட்டத்தில் உலகளாவிய ரீதியில் வெற்றியடைந்த நாடாக இலங்கை கருதப்படுகிறது

(கொழும்பு)

கண்ணிவெடிகளைத் தடை செய்வதற்கான உடன்படிக்கையின் **(Anti-personal Mine Ban Convention)** கண்ணிவெடி அகற்றலுக்கான ஆதரவுப் பிரிவு **(Implementation Support Unit)** மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கண்ணிவெடியால் பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவிகள் தொடர்பான உலகளாவிய மாநாடு ஜோர்தானிலுள்ள அம்மான் நகரில் அண்மையில் மூன்று நாட்கள் நடைபெற்றன.



இம் மாநாட்டின் நோக்கம் மிதிவெடியால் ஏற்படுகின்ற இறப்புக்கள் மற்றும் பாதிப்புக்களை குறைப்பதற்கான நடவடிக்கைகளை இனங்காணுவதும் பாதிக்கப்பட்டவர்களின் வலிகளைக் குறைப்பதும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதுமாகும்.

கண்ணிவெடி அகற்றும் திட்டத்தில் இலங்கை உலகளாவிய ரீதியில் வெற்றியை அடைந்த ஒரு நாடாகக் கருதப்படுகின்றது. அதாவது, 1,302 சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் காணப்பட்ட கண்ணிவெடிகளைக் கொண்ட அபாயகரமான பகுதியை குறுகிய காலத்தில் 18 சதுர கிலோ மீற்றர்களாக குறைத்துள்ள ஒரு நாடாக கருதப்படுவதுடன் 2020 ஆம் ஆண்டில் இலங்கையை மிதிவெடி இல்லாத நாடாக பிரகடனப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பிரதமரும் தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரம், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வளிப்பு, வடமாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க அண்மையில் நில கண்ணிவெடிகளை கண்ணிவெடியகற்றும் நிறுவனங்களூடாக அகற்றும் நடவடிக்கைகளுக்காக நோர்வே அரசிடமிருந்து நிதியைப் பெற்றுக்கொடுத்தார்.

பொதுமக்களின் இறப்பு மற்றும் காயங்களை கணிசமான அளவு குறைப்பதற்கு கண்ணிவெடி இடர் கல்வி **(Mine Risk Education)** முக்கிய பங்கு வகிக்கின்றது. இந்த தலையீட்டில் விசேடமாக யுனிசெப் **(UNICEF)** மற்றும் ஏனைய ஐக்கிய நாடுகளின் **(UN)**முகவர்கள் உயிர் ஆபத்துக்களை எதிர்நோக்குகின்ற குழுக்களான சிறுவர்கள், பெண்கள், உலோகம் மற்றும் விறகு சேகரிக்கின்ற ஆண்கள் போன்றோருக்கு இது தொடர்பாக போதிப்பதில் சிறப்பாக ஆதரவளித்தார்கள் என தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரம், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வளிப்பு, வடமாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

பிரதமர் சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரத்தின் அடிப்படையில், பாதிக்கப்பட்டவர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்காகவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்வதற்கான மூலோபாய செயற்றிட்டத்தை தயாரிப்பதற்கும் அமைச்சுகளுக்கிடையிலான குழுக்களை அமைக்க இந்த அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இச்சூழ்நிலையில், இவ்வுதவித் திட்டத்தின் பல்துறை இயல்புகளைக் கருத்திற்கொண்டு அதாவது, சமூகசேவைகள், சுகாதாரம், கல்வி, தொழில்நுட்பம், தொழிற்பயிற்சிகள் மற்றும் தொழிலாளர் வேலைவாய்ப்பு போன்ற துறைகளினூடாக இதனை நடைமுறைப்படுத்துவதற்கான செயற்றிட்டத்தை உருவாக்குவதற்கு ஒருங்கிணைந்த மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட அணுகுமுறையை உருவாக்க அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்த உதவித்திட்டத்தில் ஆறு முக்கிய விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

1. அவசர உதவி (முதலுதவி மற்றும் மருத்துவமனைக்கு முந்திய பராமரிப்பு)

2. அறுவைச் சிகிச்சை, ஊனமுற்றோர், இரத்தமாற்றுகை மற்றும் எலும்பு முறிவு மற்றும் ஏனைய மருத்துவச் சேவைகள் உள்ளடங்கிய மருத்துவமனை பராமரிப்புக்கள்.

3. செயற்கை அவயங்கள் வழங்குவது உள்ளடங்கிய சரீர சம்பந்தமான மறுவாழ்வு (சக்கர நாற்காலி, ஊன்றுகோல், நடைதாங்கி போன்றன செயற்கை உறுப்புக்களை இணைக்கும் உதவு சாதனங்கள்).

4. பாதிக்கப்பட்டவர்களுக்கும் குடும்பங்களுக்கும் புதிய சூழலை உருவாக்குதல் மற்றும் அதிர்ச்சியிலிருந்து மீள்வதற்கான ஆலோசனை போன்ற உளவியல் சார்ந்த ஆதரவுகள்.

5. பாதிக்கப்பட்டவர்களுக்கு மாதாந்த படி, வீடுகளை நிர்மாணித்தல், சுயதொழில் வாய்ப்பு, வாழ்வாதார உதவிகள் உள்ளிட்ட மருத்துவக் கொடுப்பனவு, தொழில் பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்தி உள்ளிட்ட சமூக மற்றும் பொருளாதார மறுசீரமைப்பு.

6. சட்டம்மற்றும்கொள்கை ரீதியிலான ஆதரவு, 3%துறை சார் வேலைவாய்ப்பு, கட்டங்களுக்கான அணுகல், பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு பொதுச்சேவைகளை முன்னுரிமை அடிப்படையில் பெறுவதற்கான விசேட அடையாள அட்டை, பாதிக்கப்பட்டவர்களுக்கான குடியியல், அரசியல், பொருளாதாரம் மற்றும் சமூக உரிமைகளை உறுதி செய்வதற்கான சட்டங்களை தயாரித்தல் என்பவை அடங்கும் என அமைச்சின் செயலாளர் வே. சிவஞானசோதி தெரிவித்தார்.

இந்த உலகளாவிய மாநாட்டில் கண்ணிவெடிகளை தடை செய்வதற்கான உடன்படிக்கைக்கான விசேட தூதுவர் இளவரசர் **His Royal Highness Prince Mired Ra'adZeid Al-Hussein,** கண்ணிவெடி அகற்றலுக்கான ஆதரவு பிரிவின் **(Implementation Support Unit)** இயக்குநர் **Juan Carlos Ruan,** ஐக்கிய நாடுகளுக்கான நோர்வேயின் நிரந்தர வதிவிட பிரதிநிதி **His Excellency Hans Brattskar,** ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகத்தின் அங்கவீனர்களுக்கான விசேட தூதுவர், ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழுவின் தலைவர் மற்றும் தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரம், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வளிப்பு, வடமாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சின் செயலாளரும் தேசிய கண்ணிவெடியகற்றல் நிகழ்ச்சித்திட்டத்தின் பணிப்பாளருமாகிய வே. சிவஞானசோதி ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-7)

## சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி, மட்டுவில் வடக்கு, சந்திரபுரம் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த நவராத்திரி விரத கால சிறப்புச் சொற்பொழிவு எதிர்வரும் 29.09.2019 ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் 06.10.2019 வரை தினமும் மாலை 6.30 மணியளவில் ஆலயப் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

29ஆம் திகதி சிவநெறிச் செம்மல் இளம்சைவப்புலவர் க.கைலவாசன் "கொலு வைத்தல்" ,30 ஆம் திகதி சிவநெறிச் செம்மல் சைவப்புலவர் ச.முகுந்தன் "முக்கண்ணியத் தொழுவார்க்கு ஒரு தீங்கில்லையே", முதலாம் திகதி சிவநெறிச் செம்மல் இளம்சைவப்புலவர் ச. நவநீதன் "சக்தி விரதங்களில் நவராத்திரி", 02ஆம் திகதி இளம்சைவப்புலவர் ஆன்மீகத் திலகம் க.கைலைநாதன் "வரம் தருவாள் அன்னை", 03ஆம் திகதி சிவநெறிச்செம்மல் இளம் சைவப்புலவர் த மனோஜ்குமார் "கேடுதீர்க்கும் அமுதம் எம் அன்னை", 04 ஆம் திகதி சிவநெறிச்செம்மல் சைவசின்மயர் நித்திபாபுதரன் "வல்லமை தாராயோ", 5ஆம் திகதி சிவநெறிச்செம்மல் சைவப்புலவர் பொன் சந்திரவேல் "எண்ணிய படி நீ அருளிட வருவாய்", 6ஆம் திகதி சிவநெறிச்செம்மல் சைவசின்மயர் க.ஈஸ்வரன் "நவராத்திரியும் ஆரோக்கிய வாழ்வு" என்னும் தலைப்புக்களில் சொற்பொழிவாற்றுவார்கள் என ஒழுங்கமைப்பாளர் சமய ஜோதி க.நிஜலிங்கம் அறிவித்தார்.

குறிப்பு:- சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பரிசு வழங்கப்படும். (இ-7)

# அடிக்கடி திறனாய்வுக்குள்ளாகும் 13 வது திருத்தம் - பகுதி I

## எது சரி எது பிழை - ஒரு தொகுப்பு

05

**கலாநிதி க.தவலிங்கம்**
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



மாகாண சபைகளுக்கான அதிகாரப்பகிர்வு மற்றும் தமிழர்களின் பிரச்சினைகளுக்கான தீர்வு தொடர்பாக சாதகமான நிலைப்பாடுகளைக் கொண்ட பௌத்த குருமார்கள் பரவலாக பெருந்தொகையாகவே உள்ளனர். அவ்வாறானவர்களை அணுகி, அவர்களின் ஆதரவுக் குரல்களை திரட்டுவது இங்குள்ள நிலைமையில் மிகவும் அவசியமாகும். தமிழ் மக்களிடம் வாக்குகளை அமோகமாகப் பெற்று பாராளுமன்றத்திலும் மாகாண சபைகளிலும் இருப்பவர்களே தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளை எவ்வாறாயினும் நிறைவேற்ற வேண்டும். தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் எவ்வளவு சங்கடங்கள் உள்ளன என்பதை வீதியில் வேலை வெட்டியில்லாமல் நிற்பவன் கூடக் கூறுவான். அதற்காகவல்ல இவர்கள் பாராளுமன்றத்துக்கும் மாகாண சபைகளுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறார்கள். தமிழர்கள் தங்களது பிரதிநிதிகளாக தமது வாக்குகளால் யாரைத் தெரிவு செய்திருக்கிறார்களோ அவர்களிடமே அரசியல் தீர்வையும் எப்படியாயினும் சாத்தியமாக்கும்படி கோர வேண்டும். ஆற்றிலே போட்டு விட்டு குளத்திலே தேடக் கூடாது.

ஒரு காலகட்டத்தில் இலங்கை அரசின் அமைச்சுக்களில் இருந்த சிறந்த நிர்வாகிகளில் தமிழர்களே பெருந்தொகையினராக இருந்தனர் என்பது மறுக்க முடியாத வரலாறு. இன்றைக்கும் சிங்கள அரச அதிகாரங்களின் கீழ் செயற்படும் தமிழ் அரசாங்க நிர்வாகிகள் மிகவும் திறமை வாய்ந்தவர்களாகவே உள்ளனர். எனவே, இது ஒட்டுமொத்த தமிழ்ச் சமுதாயத்தில் நிலவும் உள்ளார்ந்த ஆற்றல் பற்றிய கேள்வி அல்ல. மாறாக பெரும்பான்மையான தமிழர்களால் அங்கீகரிக்கப்படும் - தேர்ந்தெடுக்கப்படும் அரசியல் தலைமை பற்றியதே.

புதிய சிந்தனைகளோடு உண்மை மற்றும் நேர்மை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட மாற்றங்களை தமிழர்கள் ஆற்றினால் ஆற்றலுள்ள மாகாண சபையை அவர்கள் காணலாம். ஆனால் தமிழர்கள் மத்தியிலுள்ள பெரும்பாலான சமூகப் பிரமுகர்களும் புத்திஜீவிகளும் ஒரு மாகாண சபையைக். கூட மனச்சாட்சிக்கு உண்மையாகவும் நேர்மையாகவும் நிர்வகிக்க முடியாதவர்களை ஆதரிக்கும் வரை வடக்கு மாகாண சபையும் அனைத்து உள்ளூராட்சி அமைப்புகளும் தொடர்ந்தும் இப்படித்தான் ஆற்றலற்றவைகளாக ஊழல் நிறைந்தவைகளாகவே இருக்கும்.

> தமிழ் மக்களுக்கான தீர்வுகள் முன்வைக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் எல்லாம் தெற்கில் பலத்த எதிர்ப்பலைகள் தோன்றும் என்பது தெரிந்திருந்தும், தமிழ் மக்களின் அபிலாஷைகளின் நியாயத் தன்மைகள் குறித்து பெரும்பான்மை மக்களிடம் புரிதல்களை ஏற்படுத்தும் முயற்சிகளை தமிழ்த் தலைமைகள் ஏன் செய்யவில்லை? என்று முன்னாள் முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் பத்திரிகையில் கேட்டிருந்தார்.

தமிழ் மக்களுக்கான தீர்வுகள் முன்வைக்கப்பட்ட சந்தர்ப்பங்களிலெல்லாம் தெற்கில் பலத்த எதிர்ப்பலைகள் தோன்றும் என்பது தெரிந்திருந்தும், தமிழ் மக்களின் அபிலாஷைகளின் நியாயத் தன்மைகள் குறித்து பெரும்பான்மை மக்களிடம் புரிதல்களை ஏற்படுத்தும் முயற்சிகளை தமிழ்த் தல்லைமைகள் ஏன் செய்யவில்லை? தமிழ் மக்களின் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இணைந்த அரசியல் தீர்வு இப்போதைக்கு சாத்தியமில்லை எனும் நிலையில் சாத்தியமான தீர்வை ஏன் தமிழ்த் தலைவர்கள் ஆராயவில்லை? "இவ்வாறு வரதராஜப் பெருமாளின் பதில் தொடர்ந்தது.

இலங்கையின் வரலாற்றை உற்று நோக்கும்போது ஐரோப்பியர் காலத்திற்கு முன் இலங்கை தனித்தனி இராச்சியங்களாகப் பிரிந்து காணப்பட்டது. ஐரோப்பியர் ஆட்சிக் காலத்தில் மைய அரசும் பிராந்திய நிர்வாக அமைப்புகளும் காணப்பட்டன. மாகாண சபைகள் உருவாக்கப்பட்ட பின்னும் இவையே இன்றும் தொடர்கின்றன. நிர்வாக அதிகாரங்கள் பிராந்திய அமைப்புக்கள் ஊடாக மட்டுமே பரவலாக்கப்பட்டுள்ளது.

இந்த நிர்வாக அதிகாரப் பரவலாக்கல் முறை வடக்கு மற்றும் கிழக்கில் வாழும் பெரும்பான்மை சமூகமாகிய தமிழ்ச்சமூகத்திற்கு ஏற்புடையதாகவில்லை. தமிழ்ச சமூகம் கேட்பது நிர்வாகப் பரவலாக்கத்தை அல்ல அதிகாரப் பகிர்வையே. காலத்திற்குக் காலம் இலங்கை இனப் பிரச்சினைக்கு அதிகாரப்பகிர்வுடன் சில தீர்வு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு இருப்பினும் அவை முழுமை பெறாமையினால் தோல்வியையே சந்தித்தது.

> எந்த மாகாணங்களுக்கு மாகாண சபை முறை தீர்வுத் திட்டமாக முன்வைக்கப்பட்டதோ அவற்றை விட ஏனைய ஏழு மாகாணங்களிலுமே அம்முறை சிறப்பாக நடைபெற்று வருகின்றமையைக் காணக்கூடியதாக உள்ளது. வடக்கு, கிழக்கு மாகாண அதிகாரங்களில் அவ்வப்போது மத்திய அரசாங்கம் தலையீடு செய்து வருவதும், மக்களாணை பெற்ற முதலமைச்சருக்கு மேலே நியமிக்கப்படும் ஆளுநர் அதிகாரம் கொண்டவராக நீடிப்பதும் மாகாண சபை முறைமையை வடக்கு, கிழக்கில் கேலிக்கூத்தாக்கி விடுகின்றது.

இலங்கை பிரச்சினைக்கு முழுமையான அதிகாரப் பகிர்வுடன் கூடிய ஓர் தீர்வே சாத்தியம் என அனைத்து தரப்பினராலும் தெரிந்திருந்த போதிலும் அதனை வழங்குவதற்கு சிங்கள பொரும்பான்மையினம் விரும்பவில்லை. அதேநேரத்தில் தமக்குத் தேவையான தீர்வையன்றி வேறு எதனையும் ஏற்றுக்கொள்ளும் மனோபாவத்தில் தமிழர்களும் இல்லை. இத்தகைய காரணங்களினால் இலங்கைப் பிரச்சினை தற்பொழுதும் வலுப்பெற்றுக் காணப்படுகிறது.

தமிழ் மக்கனிள் பிரச்சினைகளை ஓரளவு நிவர்த்தி செய்யும் நோக்கோடு அரசில் அமைப்பில் 13 ஆம் திருத்தம் கொண்டுவரப்பட்டு மாகாண சபைகள் அமைக்கப்பட்டன. இலங்கையின் உயர் நீதிமன்றம் மாகாண சபை முறைமை ஒற்றையாட்சியை மீறவில்லை எனவும் எனவே 13 ஆவது திருத்தத்திற்கு மக்கள் சம்மதம் தேவையில்லை எனவும் தீர்மானித்தது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக முன்வைக்கப்பட்ட மாகாண சபை முறை, வடக்கு,கிழக்கிற்கு மட்டுமன்றி முழு இலங்கைக்குமான தீர்வாக மாறியது. எந்த மாகாணங்களுக்கு அம்முறை தீர்வுத் திட்டமாக முன்வைக்கப்பட்டதோ அவற்றைவிட ஏனைய ஏழு மாகாணங்களிலுமே அம்முறை சிறப்பாக நடைபெற்று வருகின்றமையைக் காணக்கூடியதாகவுள்ளது. வடக்கு,கிழக்கு மாகாண அதிகாரங்களில் அவ்வப்போது மத்திய அரசாங்கம் தலையீடு செய்து வருவதும் மக்களாணை பெற்ற முதலமைச்சருக்கு மேலே நியமிக்கப்படும் ஆளுநர் அதிகாரம் கொண்டவராக நீடிப்பதும் மாகாண சபை முறைமையை வடக்கு,கிழக்கில் கேலிக்கூத்தாக்கி விடுகின்றது.

### வடக்கு,கிழக்கு மாகாணம் பிரிப்பு

> இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு யாப்பின் 13 ஆம் திருத்தச் சட்டம் மற்றும் 1987 ஆம் வருட இல.42 மாகாண சபைகள் மசோதா மூலம் 1987 முதல் இலங்கையில் மாகாண சபைகள் அமைக்கப்பட்டன. 1988 செப்டெம்பர் 7 ஆம் திகதி அரசாங்க வர்த்தமானியின் ஊடாக இலங்கை ஜனாதிபதியினால் வடக்கு மாகாண மற்றும் கிழக்கு மாகாண இணைப்பு பிரகடனப்படுத்தப்பட்டது. 2006 ஆம் ஆண்டு வரையும் இவ்விரு மாகாணங்களும் ஒரே மாகாணமாகக் கருதப்பட்டது. எனினும் 2006 ஆம் ஆண்டின் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யபட்ட ஒரு மனுவுக்கமைய வடக்கு,கிழக்கு மாகாணம் மீண்டும் தனித்தனி மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டது.

வடக்கு,கிழக்கு இணைப்புத் தொடர்பான பொது வாக்கெடுப்பு எப்போதும் இடம்பெறவில்லை. ஒவ்வோர் ஆண்டும் அரசுத் தலைவர்களால் தற்காலிக இணைப்பாக நீடிக்கப்பட்டு வந்தது. இலங்கைத் தேசியவாதிகளால் இந்த இணைப்புக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டு வந்தது. 2006 ஜூலை 14 இல் மக்கள் விடுதலை முன்னணி கிழக்கு மாகாணத்துககெனத் தனியே மாகாணசபை நிறுவ வேண்டும் என இலங்கை உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தது.

இவ்வழக்கு விசாரணையை அடுத்து வடக்கு,கிழக்கு இணைப்பு சட்டவிரோதமானது எனக் கூறி அதனை செல்லுபடியற்றதாக்குவதாக 2006 ஒக்டோபர் 16 இல் உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. இதனையடுத்து 2007 ஜனவரி 1 இல் வடக்கு,கிழக்கு மாகாணசபை, வடக்கு மாகாணசபை மற்றும் கிழக்கு மாகாணசபை என இரண்டாகப் பிரிக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கு பிரிப்பிற்காக மன்னிப்புக் கேட்பது எப்போது?

வடக்கு, கிழக்கு பிரிப்பு சம்பந்தமாக வலம்புரி பத்திரிகையில் "வடக்கு, கிழக்கு பிரிப்பிற் காக மன்னிப்புக் கேட்பது எப்போது?" என்ற தலையங்கத்தில் எழுதப் பட்டிருந்ததை உங்க ளுடன் பகிர விரும்புகிறேன்.

> ஓய்வுபெற்ற பிரதம நீதியரசர் சரத் என் சில்வா Helping Hambantota ஊழல் குற்றச்சாட்டில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குறித்து தான் வழங்கிய தீர்ப்புத் தொடர்பில் கவலை வெளியிட்டு மக்களிடம் மன்னிப்புக் கேட்டார். அவ்வாறாயின் வடக்கு, கிழக்கு மாகாண சபை பிரிக்கப்படுவதற்கு தீர்ப்பு வழங்கிய ஓய்வுபெற்ற பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என்பது சர்வ நிச்சயம் என வலம்புரி பத்திரிகையில் எழுதப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

"இலங்கையின் நீதித்துறையில் பக்கச் சார்புகள் இருக்கின்றது என்பதை முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா ஆற்றிய உரை ஒன்று தெளிவுபடுத்தியுள்ளது. ஹெல்பிங் அம்பாந்தோட்டை (helping Hambantota) ஊழல் குற்றச்சாட்டில் மகிந்த ராஜபக்ஷ சிறையில் அடைக்கப்பட வேண்டியவராக இருந்தார். ஆனால் அவரை சிறையில் அடைக்காமல் நான் தடுத்தேன் என்று முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா கூறுவதில் இருந்து இலங்கையின் நீதித்துறையின் போக்கு எத்தகையதாக இருந்துள்ளது என்பது நிரூபணமாகின்றது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வாவுக்கும் இடையே முரண்பாட்டு நிலைமை வலுவடைந்து வருகின்றது. மூன்றாவது தடவையாகவும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தகைமை மகிந்த ராஜபக்ஷவுக்கு இல்லை என்று வெளிப்படையாகக் கூறி இருந்த ஓய்வுபெற்ற பிரதம நீதியரசர் சரத் என் சில்வா, இப்போது தான் வழங்கிய தீர்ப்பு ஒன்றைச் சுட்டிக்காட்டி, மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாதவாறு அவரை சிறையில் அடைக்கக் கூடியதான குற்றச்சாட்டு ஒன்று இருந்தது எனவும் என்னினும் தான் அதனைச் செய்யாமல் விட்டதனாலேயே அவர் ஜனாதிபதி ஆனார் என்றும் கூறியுள்ளார். அப்படியானால் சட்டம், நீதி என்பனவற்றுக்கு அப்பால், நீதிபதிகளின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களும் நீதி பரியாலனத்தில் ஆதிக்கம் செலுத்துகின்றதா? என்ற கேள்வி எழுகிறது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விடயத்தில் தான் தவறு விட்டதாகக் கூறும் ஓய்வுபெற்ற பிரதம நீதியரசர் இவ்வாறு கூறியதன் மூலம் இலங்கையின் நீதி பரிபாலனத்தின் செம்மைபற்றி சீர்தூக்கி ஆராய்வதற்கு வழிகோலியுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சிறையில் அடைக்கக் கூடிய நிலைமை இருந்த போதிலும் அதனைத் தான் செய்யாமல் தடுத்தமைக்காக நாட்டு மக்களிடம் மன்னிப்புக் கேட்பதாகக் குறிப்பிட்டுள்ள ஓய்வுபெற்ற பிரதம நீதியரசர் சரத் என் சில்வா, இணைந்திருந்த வடக்கு,கிழக்கு மாகாணங்களைப் பிரிப்பதற்கும் தீர்ப்பு வழங்கியவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இணைந்த வடக்குக் கிழக்கு மாகாண சபையை பிரிக்க வேண்டும் என உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்த போதிலும் அக்காலத்தில் இருந்த பிரதம நீதியசரர்கள் தீர்ப்பு எதனையும் வழங்காமல் வழக்கை ஒத்தி வைத்தே வந்தனர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்க்ளைப் பிரிப்பது என்பது இந்த நாட்டில் சிறுபான்மை இனத்திற்குச் செய்யும் அநீதியாகும் என்ற அடிப்படையில் அத்தகையதொரு முடிவை அவர்கள் எடுத்திருந்தனர். ஆனால் சரத் என் சில்வா இந்த நாட்டின் பிரதம நீதியரசராக இருந்த போது வடக்கு, கிழக்கு மாகாண சபையைப் பிரித்தாக வேண்டும் என்று தீர்ப்பு வழங்கினார்.

நீதித்துறை சார்ந்த விமர்சனங்கள் இலங்கையில் ஆகாது என்பதால் உண்மையை உணர்ந்த அரசியல் வாதிகளும் புத்திஜீவிகளும் மௌனமாகி இருந்தனர். எனினும் கால ஓட்டத்தில் ஓய்வுபெற்ற நிலையில் சரத் என் சில்வா ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குறித்த தீர்ப்பு தொடர்பில் கவலை வெளியிட்டு மக்களிடம் மன்னிப்புக் கேட்டுள்ளார்.

(தொடரும்)

## இலங்கையிலிருந்து படகில் கொண்டுசெல்லப்பட்ட

# 7 கிலோ கடத்தல் தங்கம் பறிமுதல்!

## இராமேஸ்வரத்தில் ஏழு பேரிடம் தீவிர விசாரணை

(இராமேஸ்வரம்)

இராமேஸ்வரம் அருகே இலங்கையிலிருந்து படகில் கொண்டு செல்லப்பட்ட 4 கோடி ரூபாய் பெறுமதியான 7 கிலோ கடத்தல் தங்கம் பறிமுதல் செய்யப்பட்டதோடு ஏழு பேரிடம் மத்திய வருவாய் புலனாய்வுத்துறை அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இலங்கையிலிருந்து வேதாளை கடற்கரைப்பகுதிக்கு தங்கம் கடத்திக் கொண்டு வரப்பட்டுள்ளதாக உளவுத்துறை அதிகாரிகளுக்கு இரகசியத்தகவல் கிடைத்தது. இதனையடுத்து மன்னார் வளைகுடா கடற் பகுதியில் சுங்கத்துறை, மத்திய வருவாய் புலனாய்வுத் துறை, மத்திய உளவுத்துறையினர் கியூ பிரிவு கடலோரக் காவல் படை உள்ளிட்ட பாதுகாப்பு அதிகாரிகள் தீவிர சோதனையில் ஈடுபட்டு வந்தனர்.


இந் நிலையில் மண்டபத்தையடுத்த வேதாளை கடற்கரைப் பகுதியில் இருந்து வேகமாக சென்ற வாகனத்தை சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகே மத்திய வருவாய் புலனாய்வுத் துறை அதிகாரிகள் மடக்கிப்பிடித்தனர். அப்போது சென்னை புதுப்பேட்டை, மதுரை கே.கே.நகர் மற்றும் வேதாளைப் பகுதியைச் சேர்ந்த ஏழு பேரைக் கைது செய்ததுடன் வாகனத்தைத் தீவிர சோதனை செய்தனர்.



அப்போது 7 கிலோ தங்கம் மறைத்து வைக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. விசாரணையில் இலங்கையிலிருந்து 7 கிலோ கடத்தல் தங்கம் இந்திய - இலங்கை சர்வதேச கடல் எல்லை வழியாக தமிழகத்திற்குள் கொண்டுவரப்பட்டது தெரிய வந்துள்ளது.

இதனையடுத்தது பறிமுதல் செய்யப்பட்ட தங்கம் மற்றும் கடத்தலில் ஈடுபட்ட ஏழு பேரையும் மத்திய வருவாய் புலனாய்வுத்துறை அதிகாரிகள் மதுரையிலுள்ள மத்திய வருவாய் புலனாய்வு அலுவலகத்திற்குக் கொண்டு சென்றனர்.

பறிமுதல் செய்யப்பட்ட தங்கத்தின் மதிப்பு 4 கோடி ரூபாய் என அதிகாரிகள் கூறினர். மன்னார் வளைகுடா மற்றும் பாக்ஜலசந்தி கடல் பிராந்தியத்தில் பாதுகாப்பு அதிகாரிகள் 24 மணி நேரம் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வரும் நிலையில் இலங்கையிலிருந்து தங்கம் கடத்தி வரப்பட்டு பறிமுதல் செய்யப்பட்டது. உள்ளூர் பாதுகாப்பு வட்டாரங்கள் மற்றும் இராமநாதபுரம் கடலோரப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (இ-7)



நாகர்கோவில் மகாவித்தியாலயத்தின் மீது இலங்கை வான்படையினர் மேற்கொண்ட குண்டு வீச்சில் படுகொலை செய்யப்பட்ட மாணவர்களின் 24 ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. (படங்கள்:- மகாலிங்கம்)

## துணுக்காய் கல்வி வலயத்தில் ஆசிரியர் விடுதிகள் அவசியம்

(அக்கராயன்)

முல்லைத்தீவு துணுக்காய் கல்வி வலயத்தில் பதினைந்து வரையான பாடசாலைகளில் ஆசிரிய விடுதிகள் இல்லாததால் தூர இடங்களில் இருந்து பாடசாலைகளுக்குப் பணிக்குச் செல்கின்ற ஆசிரியர்கள் கிராமங்களிலுள்ள வீடுகளில் தங்கி நின்று மாணவர்களுக்கு கல்வி கற்பிக்கின்ற நிலைமை காணப்படுகின்றது.

உதாரணமாக முல்லைத்தீவு ஒதியமலைப் பாடசாலையில் ஆசிரிய விடுதி இல்லாததன் காரணமாக ஆசிரியர்கள் நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளனர். இக்கிராமத்திற்கான பேருந்து சேவை கூட இடம்பெறுவதில்லை. இதன் காரணமாக ஆசிரியர்கள் தொடர்ந்து நின்று கல்வி கற்பிப்பதற்கு விடுதிகள் அவசியமானவை என பெற்றோர்களால் அதிகாரிகளிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. துணுக்காய் கல்வி வலயத்தில் இயங்குகின்ற அறுபது பாடசாலைகளில் பதினைந்து பாடசாலைகளில் ஆசிரிய விடுதிகள் இல்லாத நிலைமை காணப்படுகின்றது.

ஆசிரிய விடுதிகளை அமைப்பதன் மூலம் ஆசிரியர்களின் நெருக்கடி தீரக் கூடிய நிலைமை காணப்படுகின்றது. முல்லைத் தீவு மாவட்டத்திலே போக்குவரத்து நெருக்கடிகள், விடுதி வசதிகள் குறைந்த வலயமாக துணுக்காய் வலயம் காணப்படுகின்றது. போக்குவரத்து நெருக்கடிகளை எதிர்கொள்ளும் ஆசிரியர்களுக்கு ஆசிரிய விடுதிகள் அவசியமானவை என பொது அமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன. (9-350)



சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் இலவச மூக்குக்கண்ணாடி வழங்கும் நிகழ்வும் மருத்துவ முகாமும் அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் து.இளங்குமரன் தலைமையில் இடம்பெற்றது. அமரர் லயன் டாக்டர் வே.தம்பித்துரையின் ஞாபகார்த்தமாக அவரின் குடும்பத்தினரின் அனுசரணையுடன் பரிசோதனையின் போது கண்பார்வை குறைபாடுகள் இனங்காணப்பட்டவர்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடி வழங்கப்பட்டது.

(படங்கள்:-கொடிகாமம் செய்தியாளர்)

## தொலைபேசி உரையாடல் கசிவு

# தில்ருக்ஷி டயஸ் தொடர்பில் ஆணைக்குழு விசாரணை





(கொழும்பு)

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் தில்ருக்ஷி டயஸ் விக்கிரமசிங்கவுக்கும் அவன்ட் கார்ட் தனியார் பாதுகாப்பு நிறுவனத்தின்தலைவருக்கும்இடையே இடம்பெற்றதாக கூறப்படும்தொலைபேசி உரையாடல் கடந்த வார இறுதியில் வெளியே கசிந்து பரபரப்பான பேசு பொருளாக மாறியது. இந்தத் தொலைபேசி உரையாடல் தொடர்பாக சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா பொதுச் சேவை ஆணைக்குழுவுக்கு அறிவிப்பார் என்று தெரிய வருகிறது.

மேற்படி தொலைபேசி உரையாடல் தொடர்பாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் பேஸ்புக்கில் தனது விளக்கத்தைக் கூறி இவ்விடயம் தொடர்பான மௌனத்தை கலைத்திருப்பதையடுத்து சட்டமா அதிபர் இவ்வாறான நடவடிக்கையை எடுத்திருப்பதாக தெரிய வருகிறது.

அவன்ட் கார்ட் நிறுவனத்தின் தலைவர் நிஸங்க சேனாதிபதியின் செயலுக்குப் பதில் கேள்விகளை இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் அனுப்பியுள்ளார். இதுவே அவரது பேஸ்புக் விளக்கமாகவுள்ளது.

ஒரு அரச அதிகாரி என்ற ரீதியில் பொதுமக்க்ளுக்கோ அல்லது ஊடகங்களுக்கோ அறிக்கை விடுக்க எனக்கு அதிகாரம் இல்லை. இந்நிலையில் சர்ச்சைக்குள்ளாகியிருக்கும் தொலைபேசி உரையாடலை அவன்ட் கார்ட் தலைவர் நிஸங்க சேனாதிபதி முழுமையாக வெளியிட வேண்டும். அதனை செம்மையாக்கவோ மாற்றி அமைக்கவோ அல்லது உள்ளடக்கங்களை திரிபுபடுத்தவோ கூடாது. இரண்டாவதாக நீங்கள் பேசும் அந்த தொலைபேசி எந்த அமைச்சருக்கு சொந்தமானது என்பது பொதுமக்களுக்கு வெளிப்படுத்தப்பட வேண்டும். அத்துடன் சம்பந்தப்பட்ட அமைச்சர் ஏன் அவரது தொலைபேசி அழைப்பை எனக்கு மாற்றினார் என்பதற்கான காரணங்கள் வெளிப்படுத்தப்படவும் வேண்டும் என்று இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் தனது பேஸ்புக் பதிவில் கேள்வியெழுப்பியுள்ளார்.

இந்த தொலைபேசி உரையாடல் கசிந்தமை அரசியல் தரப்பிலும் பொதுமக்களிடையிலும் பலத்த அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியிருந்தது. இலஞ்ச ஊழல்ஆணைக்குழுவின்சம்பந்தப்பட்ட முன்னாள் பணிப்பாளர் நாயகம் நேர்மையும் தைரியமும் மிக்க அதிகாரி என்பதுடன் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் பணியாற்றிய பணிப்பாளர் நாயகங்களுக்கிடையே மிகவும் ஆற்றல் வாய்ந்தவர் என்று பெயரெடுத்திருந்த நிலையில் இவ்வாறான ஒரு தொலைபேசி உரையாடல் கசிந்தமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

தில்ருக்ஷி டயஸ் விக்கிரமசிங்க தற்போது இலங்கையின் சொலிசிற்றர் ஜெனரல் பதவியை வகிக்கிறார். அத்துடன் அத்திணைக்களத்தின் இரண்டாவது சிரேஷ்ட அதிகாரி அவராவார். அவ்வாறான தரத்தில் இருப்பதால் அவர் மீது ஒழுக்காற்று விசாரணை நடத்த சட்டமா அதிபருக்கு போதிய அதிகாரம் இல்லை என்று கூறப்படுகிறது. எனவே பொதுச்சேவைகள் ஆணைக்குழு ஆரம்ப விசாரணையொன்றை மேற்கொண்டு இதுபற்றி உடனடி நடவடிக்கை எடுப்பதற்கு உரிய ஒருவரை நியமிக்க வேண்டும் என்று சட்டமா அதிபர் திணைக்களத்தின் கூட்டிணைப்பு அதிகாரி கூறினார்.

இந்நிலையில் உச்சநீதிமன்றத்தின் நீதியரசர் ஒருவராக சொலிசிற்றர் ஜெனரலின் பெயரை பிரதமர் பிரஸ்தாபித்திருந்ததாகவும் அந்த யோசனையை தான் ஏற்கவில்லையென்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தற்போது சர்ச்சை எழுந்துள்ள நிலையில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் நீதித்துறையில் நியமனம் பெற ஒருபோதும் தகுதியில்லாதவர் என்று தொலைபேசி உரையாடல் கசிந்ததை நீதி அமைச்சர் தலதா கூறியிருந்தார். சம்பந்தப்பட்ட தொலைபேசி உரையாடல் கசிவு பற்றிய உண்மை நிலை தெரிய வந்த பின்னர் இது பற்றி சட்டமா அதிபரிடம் இருந்து விளக்கம் கோரப்படும் என்றும் நீதி அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## மாணவனுக்கு தங்கப்பதக்கம்



(கொழும்பு)

2019 ஆம் ஆண்டு நடைபெற்ற அகில இலங்கைத் தமிழ் மொழித் தினப்போட்டியில் "இலக்கிய விமர்சனம் - பிரிவு 05" இல் கொழும்பு றோயல் கல்லூரியைச் சேர்ந்த சு. அனந்தநாராயணன் சர்மா முதலாம் இடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தை வென்றார். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1839

### சாமந்தி

நீ ஒருவரின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்த அறிவோ, அழகோ, பணமோ தேவையில்லை. அக்கறை இருந்தால் போதும்



### ரகுராம்

கடந்து போனதை நினைத்து கவலைப்பட வேண்டாம்... கவலை வேண்டாம் என்பதற்காகத் தான் அது கடந்து போனது



### அஸ்வினி

இழந்தது எதுவாயினும் அதைவிடச் சிறந்ததை அடைந்தே தீருவேன் என்ற துணிவே தன்னம்பிக்கை



### ராஜ்

உன்னை நீயே வீண் என நினைத்தால் விடியலே கிடையாது. நீயே உலகிற்கு தூண் என நினைத்தால் உன் வாழ்வில் இருளே கிடையாது



### லிஜா

சிலரைச் சந்தோசப்படுத்த ரொம்ப சிரமப்படத் தேவையில்லை.. நம்ம கஷ்டத்தைச் சொன்னாலே போதும்



### பாபு

கிடைத்த வாழ்க்கையை நினைத்தபடி வாழ தயாராகிவிட்டால் நினைத்தது போல் வாழ்க்கை அமையவில்லை என்ற ஏக்கமே இல்லாமல் போய்விடும்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


## எனது அரசியல் எதிரிகளின்

# பொய்ப்பிரசாரங்களுக்கு ஏமாறாதீர்கள் வெற்றியில் பங்காளராகுங்கள்!

### முஸ்லிம்களுக்கு கோத்தா அழைப்பு

(சிலாபம்)

**அரசியல் எதிரிகள் என்னைப் பற்றிப் பொய்ப்பிரசாரம் மேற்கொண்டு வருகின்றனர். அதற்கு ஏமாறாமல் வெற்றியின் பங்காளராகுமாறு பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷ முஸ்லிம்களுக்கு அழைப்பு விடுத்தார். முஸ்லிம்கள் உள்ளிட்ட சகல இன மக்களின் பாதுகாப்பையும் தான் உறுதிப்படுத்துவதாகவும் அவர் தெரிவித்தார்.**



சிலாபம் கடையாமோட்டை ஜும்ஆ பள்ளிவாசலில் நேற்று முன்தினம் நடைபெற்ற மத அனுஷ்டானங்களில் பங்கேற்ற போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். முஸ்லிம்களிடையே என்னைப் பற்றித் தவறான கருத்துக்கள் பரப்படுகிறது. மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக முஸ்லிம்கள் வாக்களிப்பதற்கும் இவ்வாறான பொய் பிரசாரமே காரணமாக அமைந்தது. நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது. கடந்த 5 வருடத்தில் நாடு பின்னடைந்துள்ளது.

இந்த ஆட்சி நீடித்தால் நாட்டின் பொருளாதாரம் மேலும் நாசமடையும். நான் நாட்டை நேசிக்கும் சகல இன மதத்தினரையும் மதிக்கும் கட்சியினூடாக தான் போட்டியிடுகின்றேன். நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பின் பிரகாரம் நாம் பெரு வெற்றியீட்டுவோம்.

இந்த வெற்றியில் நீங்களும் பங்காளராகுங்கள். பொய்ப்பிரசாரங்களுக்கு ஏமாற வேண்டாம். நாட்டில் பாதுகாப்பற்ற நிலைமைகள் ஏற்பட்டமை அனைவருக்கும் தெரியும். சகல இன,மத மக்களினதும் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தேர்தல் முடிவடைந்த பின்னரே வீட்டுத்திட்டப் பணிகள் பூர்த்தி

### சுமந்திரன் தெரிவிப்பு; உதயசூரியன் மக்கள் அதிருப்தி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி -மகிழங்கேணிப் (உதயசூரியன்) பகுதியில் அமைக்கப்பட்ட மாதிரிக் கிராமத்தின் மீதிப் பணிகள் தேர்தல் முடிவடைந்த பின்னர் பூர்த்தி செய்யப்படும் என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.





மகிழங்கேணிப் பிரதேசத்தில் அமைக்கப்பட்ட 51 வீடுகளை உள்ளடக்கிய மாதிரிக் கிராமத்திற்காக கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டு வீடின்றி அல்லல் படும் மக்களை நேற்றுத் திங்கட்கிழமை காலை சந்தித்து உரையாடிய போதே சுமந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாதிரிக் கிராமங்களுக்கான கொடுப்பனவுகளை விடுவிக்குமாறு நாம் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளோம். இது தொடர்பாக அபிவிருத்தி சபைக் கூட்டத்திலும் பேசி நிதி முழுமையாகக் கிடைத்து வீட்டுத் திட்டம் முழுமைபெற நடவடிக்கை எடுக்கப்படும். தேர்தல் காலத்தில் அபிவிருத்தித் திட்டங்கள் சிலவற்றிற்கு தடை போடுவார்கள். தேர்தல் முடிந்த பின்னர் வீட்டுத்திட்டம் முழுமை பெற துரித நடவடிக்கை எடுப்போம். ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட திட்டம் என்பதனால் நிறைவேற்றுவதில் சிக்கல் எதுவும் இருக்காது என அவர் மேலும் தெரிவித்தார்.

சாவகச்சேரி மகிழங்கேணிப் பகுதி மக்கள் வீட்டுத் திட்டத்தை நம்பி இருந்த குடிசையையும் பிடுங்கி எறிந்த நிலையில் இன்று நடு வீதியில் அல்லல்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. பாராளுமன்ற உறுப்பினருடைய பேச்சு தமக்கு திருப்திகரமாக இல்லை எனவும் தாம் தமக்கான தீர்வை வழங்கக்கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட முடிவு செய்திருப்பதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

மகிழங்கேணிக் கிராம மக்கள் வீட்டுத்திட்டத்திற்கான நிதி வழங்கப்படும் என்ற நம்பிக்கையில் கடன் பெற்று சில பணிகளை மேற்கொண்டு தற்போது கடன் சுமையில் இருப்பது குறிப்பிடத்தக்கது. அதிகபட்சமாக இரண்டு இலட்சம் ரூபாய் நிதி மாத்திரமே அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# செய்தித்துளிகள்

## இராணுவச் சிப்பாய் நீரில் மூழ்கிப் பலி!

(ஹசலக)

ஹசலக, ரன்தெனிகல நீர்த்தேக்கத்தில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

குறித்த இராணுவச் சிப்பாய் காணாமல் போயுள்ளமை தொடர்பில் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் நீர்த்தேக்கத்தின் கீழ் அணையைச் சோதனையிட்டதில் சுமார் 20 அடி ஆழத்தில் இருந்து இவரது சடலம் நேற்றுக்காலை கண்டுபிடிக்கப்பட்டது.

23 வயதுடைய மாவனெல்லை, அலுத்நுவர பிரதேசத்தைச் சேர்ந்த இராணுவச் சிப்பாய் ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார். (இ-7)

## திறன் வகுப்பறைத் திறப்பு

(பொற்பதி)

ஆழியவளை சீ.சீ.த.க.பாடசாலையில் திறன் வகுப்பறைத் திறப்பு விழா இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் அதிபர் க.பாஸ்கரன் தலைமையில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் இ.தமிழ்மாறன், சிறப்பு விருந்தினராக மருதங்கேணி கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.திரவியராசா, முன்னாள் அதிபர் து.இராசரத்தினம் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5-64)

## போட்டிகளுக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை கலை கலாசார இலக்கிய மன்றத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நாடகம், சிறுகதை மற்றும் பாரம்பரிய குழு நடனம் உள்ளிட்ட கலை இலக்கிய போட்டிகள் இடம்பெறவுள்ளன.

இதற்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறும் மேலதிக தகவல்களுக்கு 077 282 6326, 077 820 1216 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. (இ-5)

## கஞ்சா சேனை சுற்றிவளைப்பு

(தனமல்வில)

தனமல்வில பொலிஸ் பிரிவிற்குட்ட பலஹருவ பிரதேசத்தில் பயிரிடப்பட்டிருந்த கஞ்சா சேனை ஒன்று மாவட்ட ஊழல் ஒழிப்புப் பிரிவின் அதிகாரிகளால் சுற்றிவளைக்கப்பட்டது. சுமார் 7 அடி உயரம் கொண்ட 3 ஆயிரத்திற்கும் அதிகமான கஞ்சாச் செடிகள் அங்கு பயிரிடப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. அவற்றின் பெறுமதி 25 இலட்சம் ரூபாவிற்கும் அதிகம் என பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 100 | 90 | 100 |
| உருளைக்கிழங்கு | 140 | 120 | 130 | 110 | 140 |
| பச்சைமிளகாய் | 140 | 120 | 180 | 140 | 200 |
| தக்காளி | 100 | 130 | 130 | 110 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 100 | 120 | 90 | 120 |
| கோவா | 120 | 100 | 120 | 60 | 120 |
| கரட் | 100 | 120 | 140 | 120 | 120 |
| பூசணி | 60 | 40 | 60 | 50 | 80 |
| புடோல் | 140 | 90 | 120 | 50 | 120 |
| வாழைக்காய் | 100 | 100 | 110 | 100 | 120 |
| சின்ன வெங்காயம் | 140 | 130 | 120 | 100 | 160 |
| பெரிய வெங்காயம் | 150 | 160 | 170 | 105 | 200 |
| பாகற்காய் | 100 | 220 | 240 | 210 | 320 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 80 | 70 | 120 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 130 | 60 | 120 |
| பயற்றங்காய் | 150 | 100 | 180 | 110 | 200 |
| லீக்ஸ் | 120 | 80 | 100 | 70 | 120 |
| பீற்றூட் | 50 | 60 | 90 | 60 | 100 |
| கறிமிளகாய் | 160 | 140 | 160 | 150 | 200 |
| முருங்கைக்காய் | 80 | 70 | 80 | 60 | 100 |
| போஞ்சி | 240 | 200 | 200 | 160 | 280 |
| கத்தரிதம்புள்ள | 50 | 60 | 120 | 60 | 80 |
| கீரை - 1பிடி | 40 | 50 | 40 | 30 | 40 |
| தேசிக்காய் | 350 | 400 | 320 | 300 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 35 | 40 | 30 | 20-40 |
| இராசவள்ளி | 200 | — | 400 | 150 | — |
| வெங்காயப்பூ | 100 | 140 | 240 | 100 | 200 |
| முள்ளங்கி | 80 | 80 | 80 | 40 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 40 | 30 | 30 |
| வல்லாரை | 15 | 50 | 15 | 20 | 20 |
| ஈரப்பலா | 50 | 80 | 60 | 110 | — |




# உயிர்களிடத்தில் அன்பு வேண்டும்!



கணபதி சிறுவனாக இருந்தபோது அவன் பார்த்த சில சம்பவங்கள் அவனை மிகவும் பாதித்து விட்டன. அவன் ஊர் எல்லையில் இருக்கும் ஆற்றில் கோடையில் நீர் இருக்காது. அப்போது மாலை வேளையில் அவன் நண்பர்களுடன் சேர்ந்து ஆற்று மணலில் விளையாடுவான். சில சமயம் மணலில் உட்கார்ந்து நண்பர்களுடன் அரட்டை அடிப்பான்.

ஆற்றின் ஓரத்தில் ஒரு குட்டை போல் நீர் தேங்கி இருக்கும். அந்தத் தண்ணீரில் தண்ணீர்ப் பாம்புகள் இருக்கும். சில சிறுவர்கள் அந்தப் பாம்புகளைப் பிடித்து அவற்றின் கழுத்தில் அழுத்தமாகக் கையை வைத்து மூச்சுத் திணறச் செய்து பிறகு அவற்றைச் சுழற்றி தூரத்தில் எறிவார்கள்.

இன்னும் சிலர் ஆற்றங்கரை ஓரத்தில் இருந்த ஆலமரத்தின் விழுதில் முடிச்சுப் போட்டு பாம்புகளின் கழுத்தை அந்த முடிச்சில் இறுக்கித் தூக்கில் போடுவார்கள். மற்ற சிறுவர்கள் இதைப் பார்த்துக் கைதட்டிச் சிரிப்பார்கள்.

கணபதியால் பாம்புகள் படும் அவஸ்தையைப் பொறுக்க முடியவில்லை. ஆற்றங்கரைக்குப்போவதை நிறுத்தி விட்டான். திடீரென்று ஒரு நாள் வீட்டில் செய்த அசைவ உணவை உண்ணவும் மறுத்து விட்டான். அவன் பெற்றோர் வற்புறுத்தியும் அவன் கேட்கவில்லை. "ஏண்டா நீ என்ன ஐயர் வீட்டுப் பிள்ளையா?" என்று அவன் அம்மா கேட்டதற்கு "பிற உயிர்களைக் கொல்வதை என்னால் ஒப்புக் கொள்ள முடியாது" என்றான்.

கணபதி வளர்ந்து பெரியவனாகி வேலையில் சேர்ந்ததும் வீட்டில் அவனுக்குப் பெண் பார்த்தார்கள். அவன் இயல்பை அறிந்து அசைவம் உண்ணாத குடும்பத்தில்தான் அவன் பெற்றோர் அவனுக்குப் பெண் பார்த்தார்கள். பெற்றோர்கள் தேர்ந்தெடுத்த ஒரு பெண்ணைப் பார்த்த பின் அவளிடம் தனியாகப் பேச விரும்பினான் கணபதி.

தனியாக இருந்த போது அவளிடம், "நம் வீட்டில், எலிப்பொறி, கொசு வத்தி, கரப்பான் கொல்லி போன்ற மற்ற உயிரினங்களைக் கொல்லும் பொருட்களைப் பயன்படுத்தக் கூடாது. இதற்கு நீ சம்மதித்தால்தான் நான் உன்னைக் கல்யாணம் செய்து கொள்ள முடியும்" என்றான்.

"கொசுக்கடியைத் தாங்கிக் கொண்டுதான் வாழ வேண்டுமா?" என்றாள் அந்தப் பெண்.

"வீட்டை சுத்தமாக வைத்துக்கொண்டால் கொசுத் தொல்லை குறைவாகத்தான் இருக்கும். கொசு வலையில் தூங்கலாம். நம் உடலில் கொசுக்கடியைத் தடுக்கும் ஒயின்ட்மென்ட்டைத் தடவிக் கொள்ளலாம். அப்படியும் கொசு நம்மைக் கடித்தால் கையால் அதை அடித்துக் கொல்வதைத் தவறு என்று சொல்ல மாட்டேன். ஆனால் உயிரினங்களை வேட்டையாடும் செயல் வேண்டாமே!" என்றான். அந்தப்பெண் "ஐ ஆம் சொறி" என்று சொல்லி அவனை நிராகரித்தாள்.

வேறு பல பெண்களும் அவன் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளவில்லை. ஒருமுறை அவன் இது பற்றி அந்தண குலத்தைச் சேர்ந்த அவன் நண்பனிடம் கூறியபோது, "என்னடா இப்படி இருக்கிறாய்? தன்னைக் கொல்ல வந்த பசுவையும் கொல்லலாம் என்று சாஸ்திரம் சொல்கிறது" என்றான். (எந்த சாஸ்திரம் என்று கேட்டிருந்தால் அவனிடம் பதில் இருந்திருக்காது. அவனிடம் மட்டும் இல்லை, அவனுக்கு இதை உபதேசித்த பெரியவர்களிடமும் தான்!) "நம்மைக் கொல்ல வந்த ஜீவனைத் தற்காப்புக்காகக் கொல்வது வேறு. நாமே வலுவில் போய்ப் பிற உயிர்களைக் கொல்வது வேறு" என்றான் கணபதி.

"ஐ.நாவில் சர்வதேசக் கொசு ஒழிப்புத் துறையில் ஒரு வேலை காலியாக இருக்கிறதாம். நீ அந்த வேலையில் சேர்ந்து ஐந்து வருடம் உலகெங்கும் சுற்றி உலகக் கொசுக்களின் எண்ணிக்கையைக் கொஞ்சம் குறைத்து விட்டு வா.

வேலையில் சேர்ந்த பிறகு கடமைக்காகவாவது கொசு ஒழிப்பில் ஈடுபட்டுத்தானே ஆக வேண்டும்! அப்போதுதான் நீ திருந்துவாய்!" என்றான் அந்தண நண்பன்.

கணபதியின் பெற்றோர்கள் சலிப்படைந்து அவனுக்குப் பெண் பார்ப்பதை நிறுத்தி விட்டார்கள். உங்களுக்குத் தெரிந்த, கணபதியின் நிபந்தனைகளுக்கு ஒத்துவரும் பெண் யாராவது இருந்தால் சொல்லுங்களேன்!

**குறள் 30:**

அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண் டொழுக லான்.

**பொருள்:**

எல்லா உயிர்களிடமும் கருணையோடு இருக்கும் அறவோர்தான் அந்தணர் என்று கருதப்படுவர்.

## விடுகதைகளும் விடைகளும்

- ஓடியாடி வேலை செய்தபின் மூலையில் ஒதுங்கிக்கிடப்பாள் அவள் யார்?
  **துடைப்பம்/தும்புத்தடி**
- ஏற்றி வைத்து அணைத்தால் எரியும் வரை மணக்கும் அது என்ன?
  **ஊதுவர்த்தி**
- மூன்றெழுத்துப் பெயராகும். முற்றும் வெள்ளை நிறமாகும் அது என்ன?
  **பஞ்சு**
- எவர் கையிலும் சிக்காத கல் எங்கும் விற்காத கல். அது என்ன?
  **விக்கல்**
- ஆயிரம் தச்சர் கூடி அழகான மண்டபம் கட்டி ஒருவன் கண்பட்டு உடைந்ததாம் மண்டபம் அது என்ன?
  **தேன்கூடு**
- பிறக்கும்போது வால் உண்டு. இறக்கும்போது வால் இல்லை அது என்ன?
  **தவளை**
- படுத்துத் தூங்கினால் கண்முன் ஆடும். அடுத்து விழித்தால் மறைந்தே ஓடும் அது என்ன?
  **கனவு**

## பொது அறிவுத்துணுக்குகள்

- மூக்கில் பல் இருக்கும் விலங்கு முதலை.
- வயிற்றில் பல் இருக்கும் உயிரினம் நண்டு.
- வயிறும் ஜீரண உறுப்பும் இல்லாத உயிர் ஈசல்.
- மைனா பறவையின் தாயகம் இந்தியா.

## பொன்மொழிகள்

- அறிவு ஒன்றுதான் அச்சத்தை முறிக்கும் அரிய மருந்து. அறிவை வளர்த்துக் கொண்டால் எல்லாவிதமான பயங்களும் அகன்றுவிடும்.
- தவறு நேர்ந்து விடுமோ என்று அஞ்சி அஞ்சி எந்த செயலையும் செய்யாமல் பின் வாங்குவது இழிவானது.
- நன்றாக பழகும் அனைவரும் நம் நண்பர்கள் இல்லையென்ற சிறு தெளிவு இருந்தால் போதும். சில துரோகங்களையும் பல ஏமாற்றங்களையும் தவிர்க்கலாம்!

> அஞ்சி நடுங்கிக் கொண்டிருப்பவனால்
> சிறிய குட்டையைக் கூட கடக்க முடியாது.
> – சாணக்கியன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# செம்மலையில் நடந்த பௌத்த பிக்குகளின் அட்டகாசம்

முல்லைத்தீவு செம்மலை நீராவியடியில் அத்துமீறி பௌத்த விகாரை அமைத்திருந்த மேதாலங்கார கீர்த்தி தேரர் கடந்த சில தினங்களுக்கு முன் மரணமாகியிருந்தார்.

அவரின் பூதவுடலை நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளாகத்தில் தகனம் செய்வதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டபோது; சைவ சமய மரபுகளுக்கு அச்செயல் பாதகமானது என சைவ மக்களால் எடுத்துரைக்கப்பட்டது.

எனினும் நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தை பௌத்த விகாரையாக்குவதற்கு சதித்திட்டம் தீட்டிய பௌத்த தேரர்களும் அவர்களால் தென்பகுதியில் இருந்து அழைத்து வரப்பட்ட அடியாட்களும் சேர்ந்து நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தின் வளாகத்தில் புத்த பிக்குவின் உடலைத் தகனம் செய்வது என அடம் பிடித்தனர்.

இந்நிலையில் ஆலய நிர்வாகம் நீதிமன்றத்தை நாடியபோது, முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றம் பிள்ளையார் ஆலய வளாகத்தில் புத்த பிக்குவின் உடலைத் தகனம் செய்வதற்கு தடை விதித்ததுடன் பொருத்தமான ஓர் இடத்தை அடையாளப்படுத்தி அந்த இடத்தில் தேரரைத் தகனம் செய்யுமாறு பணித்திருந்தது.

நீதிமன்றத்தின் உத்தரவு இதுவாக இருந்த போதிலும் நீதிமன்றத் தீர்ப்பை உதாசீனம் செய்த புத்த பிக்குகள், தேரரின் பூதவுடலை நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளாகத்திலுள்ள தீர்த்தத் தடாகத்துக்கு அருகில் வைத்து தீமூட்டி எரித்தனர்.

சைவ ஆகம மரபில் இஃது மிகப் பெரும் அவச் செயலும் தெய்வக்குற்றமுமாகும்.

மேற்போந்த செயல் பெரும்பான்மை இனத்துக்கும் பௌத்த தேரர்களுக்கும் பெருங் கேட்டை ஏற்படுத்தும் என்பது வேத விற்பன்னர்களின் கருத்து.

இறந்தவர்களின் உடலை சைவ ஆலயங்களின் முன்பாக எடுத்துச் செல்வதுகூட ஆசாரமற்றது என்ற நிலையில்,

பிள்ளையார் ஆலயத்தின் அருகில் வைத்து உடலை எரியூட்டுவதென்பது மிகப் பெரும் பாவச் செயலாகும்.

இவை ஒருபுறமிருக்க, நீதிமன்றம் விடுத்த உத்தரவை மீறி செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளாகத்தில் தேரரின் உடல் தகனம் செய்யப்பட்டிருக்கிறது எனில், இத்தகைய செயற்பாட்டை அரங்கேற்றுவதில் சிங்களப் பொலிஸார் துணை நின்றனர் எனில், தமிழ் மக்களுக்கான நீதி எவ்வாறு அமுலாக்கப்படுகிறது என்பதை சர்வதேச சமூகம் இனியாவது புரிந்து கொள்ள வேண்டும்.

நீதிமன்றத்தின் உத்தரவை மீறுகின்ற பௌத்த பிக்குகளும் தென்பகுதித் தரப்புகளும் சிங்களப் பொலிஸாரும் இருக்கையில், உள்ளக நீதிப் பொறிமுறையூடாக போர்க்குற்ற விசாரணை நடத்தப்படுமாக இருந்தால் அதன் முடிவு எவ்வாறாக அமையும் என்பதை தேரரின் தகனம் உணர்த்தி நிற்கிறது.

ஆக, நீதிமன்ற உத்தரவையும் மீறி முல்லைத்தீவு நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளாகத்தில் மேதாலங்கார கீர்த்தி தேரரின் பூதவுடல் எரியூட்டப்பட்டது என்பதற்குள் பௌத்த தேரர்களின் அக்கிரமம் எந்தளவுக்கு மேலோங்கியுள்ளது என்பது உணர்தற்குரியது.

# பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் மனிதவுரிமைகளுக்கு எதிரானது

## சமூக ஆர்வலர்கள் விமர்சனம்

(ஏறாவூர்)

இலங்கை அரசாங்கத்தால் வெகு விரைவில் கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் மனிதவுரிமைகளுக்கு எதிரான பயங்கரமான ஒரு சட்டமாகக் கருதப்படுவதாக சமூக ஆர்வலர்கள் விமர்சித்தனர்.

எனவே இது தொடர்பாக சமூகத்தின் சகல மட்டங்களிலும் ஒரு தெளிவுபடுத்தலை மேற்கொள்ள பொது அமைப்புக்கள் முன்வர வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

மட்டக்களப்பு மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியமான இணையக் காரியாலயத்தில் பயங்கரவாதத் தடைச்சட்டம், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் ஆகியவை தொடர்பாக ஆராயும் விசேட கலந்துரையாடலொன்று நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

சட்டத்தரணியும் மனித வுரிமைகள் செயற்பாட்டாளருமான ருக்கி பெர்னாண்டோ தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் இலங்கையில் தற்போது நடைமுறையில் இருக்கும் பயங்கரவாதத் தடைச்சட்டம் மற்றும் இலங்கை அரசால் கடந்த 17 ஆம் திகதி வரைபு நிறைவு செய்யப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தொடர்பாக ஆராயப்பட்டது.

இதன்போது கருத்து வெளியிட்ட சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் பயங்கரவாதத் தடைச்சட்டம் மற்றும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்திற்கு எதிரான கருத்துக்களை முன்வைத்தனர்.

குற்றச் செயல்களைத் தடுக்க இலங்கையில் 15 இற்கும் மேற்பட்ட சட்டங்கள் அமுலில் இருக்கும் போது இவற்றை முறையாக அமுல்படுத்தத் தவறும் அரசாங்கங்கள் மனிதவுரிமைகளை நசுக்கும் வகையிலான புதிய சட்டங்களைக் கொண்டு வருவதற்கு உத்தேசித்துள்ளதாக விமர்சித்தனர்.

இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள பயங்கரவாதத் தடைச்சட்டத்திற்கு எதிராக பல்வேறு தரப்பினரும் எதிர்ப்புத் தெரிவித்துள்ள நிலையில் புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தைக் கொண்டுவர அரசாங்கம் தீவிரம் காட்டுவதாகவும் அவர்கள் குற்றம் சாட்டினர்.

இந்தச் சட்டமானது பயங்கரவாதத்தைத் தடை செய்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்களைக் கேள்விக்கு உட்படுத்த முடியாத மிதமிஞ்சிய அதிகாரங்களைக் கொண்டுள்ளது என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

அத்தோடு நீதிமன்றத்திற்கும் பொறுப்புக் கூறும் வாய்ப்பைக் கூட மறுதலிக்க இதனூடாக இடமுள்ளதாகவும் இந்தச் சட்டத்தை மனிதவுரிமைகளுக்கு எதிரான ஒரு பயங்கரமான சட்டமாகவே பார்க்க வேண்டியுள்ளதாகவும் இந்தச் சட்டம் அமுலுக்கு வரும்பொழுது நாட்டில் மனிதவுரிமைகள் கேள்விக் குறியாகிவிடும் என்றும் அவர்கள் அச்சம் வெளியிட்டனர்.

எனவே இந்த விடயம் தொடர்பாக சமூகத்தின் சகல மட்டங்களிலும் தெளிவுபடுத்தலை மேற்கொள்ள சமூக ஆர்வலர்கள் முன்வர வேண்டுமென்றும் அவர்கள் அழைப்பு விடுத்தனர். (இ-7)

# கோத்தா விடுதலை!

(கொழும்பு)

அவன்கார்ட் வழக்கிலிருந்து முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உள்ளிட்ட 8 பேர் விடுதலை செய்யப்படுவதாக மேன்முறையீட்டு நீதிமன்றம் கடந்த 12 ஆம் திகதி தீர்ப்பு வழங்கியது.

எனினும் அது தொடர்பான ஆவணங்கள் கிடைக்கப்பெறவில்லை என்பதால் குறித்த வழக்கு நேற்றுத் திங்கட்கிழமை வரை ஒத்திவைக்கப்படுவதாக மேன்முறையீட்டு நீதிமன்றம் கடந்த வெள்ளிக்கிழமை அறிவித்திருந்தது.

இந்நிலையில் இது குறித்த வழக்கு நேற்று கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போதே மேன்முறையீட்டு நீதிமன்றின் உத்தரவிற்கு அமைய குறித்த வழக்கிலிருந்து கோத்தபாய ராஜபக்ஷ உள்ளிட்ட 8 பேர் விடுதலை செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# விவசாயிகளுக்கான கூட்டமும் உரமானியப் பதிவும் நாளை

(சாவகச்சேரி)

கல்வயல்கமக்கார அமைப்பிற்குட்பட்ட பெரும்போக நெற்செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கான காலபோகக் கூட்டமும், உரமானியப் பதிவும் நாளை புதன்கிழமை காலை 9 மணியளவில் கல்வயல் பொது நோக்கு மண்டபத்தில் இடம்பெறும் எனக் கமக்கார அமைப்பின் செயலாளர் அறிவித்தார்.

அங்கத்தவர்கள் குறித்த தினத்தில் உரமானியப் பதிவை மேற்கொள்ளத் தவறும் பட்சத்தில் உரமானியத்தைப் பெற்றுக்கொள்ள முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

பதிவுக்கு வரும் போது தேசிய அடையாள அட்டை, 2019ஆம் ஆண்டிற்கான அங்கத்துவப் பற்றுச் சீட்டு, 2019ஆம் ஆண்டிற்கான ஏக்கர்வரிப் பற்றுச்சீட்டு, காணி உறுதிப் பிரதி மற்றும் குடும்ப அட்டை ஆகியவற்றை தவறாது கொண்டு வருமாறும் தெரிவித்தார். (இ-30)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை கிளிநொச்சி பிரதேசத்தில் அன்புபுரம், இரணைமாதாநகர், முழங்காவில் கடற்படை முகாம் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் தலை மன்னார் கிராமம், படப்பாடி, தலைமன்னார் Palmyra house ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

# தாய் மற்றும் மகளை கடத்தியவர்கள் கைது

(களுத்துறை)

களுத்துறை பிரதேசத்தில் தாய் மற்றும் மகளைக் கடத்திச் சென்று பணம் பெற முயற்சித்ததாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் களுத்துறை, தொடங்கொட பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் சந்தேக நபர்கள் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்படும் போது சந்தேகநபர்களிடம் இருந்து பொலிஸ் சீருடைகள் சிலவும், துப்பாக்கி ஒன்றும் மற்றும் கூரிய ஆயுதங்கள் சிலவும் கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதன்படி, சந்தேக நபர்கள் களுத்துறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட பின்னர் 48 மணித்தியாலங்கள் தடுப்புக்காவல் உத்தரவின் பேரில் விசாரிக்கப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற வருடாந்த பரிசளிப்பு விழா ஒன்றில்குறித்த மாணவி சான்றிதழ்களும் மற்றும் பல பரிசுப்பொருட்களையும் பெற்றதால் ஏற்பட்ட வெறுப்பின் விளைவாக இந்த கடத்தல் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்தது.

இச்சம்பவம் தொடர்பில் தொடங்கொட பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- ❖ பூமியிடம் இருந்து பொறுமையைக் கற்று கொள்ளுங்கள். உங்கள் காலடியில் உலகமே பணிந்து நிற்கும்.
- ❖ எல்லா வகையிலும் விரிவடைய முயற்சி செய்யுங்கள். உயிர் இருப்பதன் ஒரே அறிகுறி வளர்ச்சியடைவது தான்.
- ❖ இடைவிடாமலும், பற்றில்லாமலும் பணியில் ஈடுபடுங்கள். நல்ல பணிகள் உங்களை அடையாளம் காட்டும்.
- ❖ வெறும் கோழையாகவும், கபடதாரியாகவும் இருக்க வேண்டாம். உண்மையின் பாதையில் கண்ணியத்துடன் சென்று கொண்டிருங்கள்.

# டயலொக் வெற்றிக்கிண்ண பெண்களுக்கான கரப்பந்தாட்டம் உரும்பிராய் பைங்கரன் அணி சம்பியன் பட்டத்தை வென்றது



டயலொக் வெற்றி கிண்ணத்திற்கான யாழ்.மாவட்ட அணிகளுக்கு இடையிலான பெண்களிற்கான கரப்பந்தாட்டப் போட்டியில் உரும்பிராய் பைன்கரன் அணி 23 வயதிற்குட்பட்ட மற்றும் திறந்த வயதுப் பிரிவினருக்கான போட்டிகளில் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளது.

இத்தொடர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை புத்தூர் கலைமதி மற்றும் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

23 வயதிற்குட்பட்ட பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் உரும்பிராய் பைன்கரன் அணியை எதிர்த்து காங்கேசன்துறை ஐக்கிய அணி மோதியது.

ஆட்டம் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய உரும்பிராய் பைன்கரன் அணி 25:13, 25:13 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுச் சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது.

திறந்த வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டத்திலும் உரும்பிராய் பைன்கரன் அணியை எதிர்த்து காங்கேசன்துறை ஐக்கிய அணி மோதியது.

முதலாவது செற்றில் உரும்பிராய் பைன்கரன் அணி 25:17 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஆனால் இரண்டாவது செற்றில் காங்கேசன்துறை ஐக்கிய அணி 25:13 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று பதிலடி கொடுத்தனர்.

வெற்றி,தோல்வியை தீர்மானிக்கும் மூன்றாம் செற்றில் இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் முகமாக விளையாடினர்.

இருப்பினும் க உரும்பிராய் பைன்கரன் அணி 25:22 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுச் சம்பியன் கிண்ணத்தைக்கைப் பற்றியது. (க)

## தேசிய மட்டச் சதுரங்கப் போட்டியில் கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அணி பங்கேற்பு



விளையாட்டுத்துறை அமைச்சினால் பதுளையில் அமைந்துள்ள ஊவா மாகாண பொது நூலக மண்டபத்தில் நடத்தப்பட்டுவரும் தேசிய மட்டச் சதுரங்கப் போட்டியில் வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட மாகாண மட்ட சதுரங்கப் போட்டியில் வெற்றி பெற்ற கிளிநொச்சி மாவட்ட பெண்கள் சதுரங்க அணி வடக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி விளையாடி வருகின்றது.

கிளிநொச்சி மாவட்டச் சதுரங்கச் சங்கத்தின் தொடர் செயற்பாடுகளின் பயனாக மாவட்ட சதுரங்க வரலாற்றில் முதல் முறையாக மாவட்ட சதுரங்க அணியானது தேசிய மட்டப் போட்டியில் பங்குபற்றி மாவட்டத்திற்குப் பெருமை சேர்த்துள்ளது.

கடந்த 20 ஆம் திகதி ஆரம்பமான இப்போட்டியானது இன்று வரை நடைபெறவுள்ளது. ஒன்பது மாகாணங்களினதும்மாகாண விளையாட்டுத் திணைக்களங்களினால் நடத்தப்பட்ட மாகாண மட்டப் போட்டிகளில் சம்பியனாக தெரிவு செய்யப்பட்ட ஒன்பது அணிகளும் பங்குபற்றும் இப்போட்டியானது "றவுண்ட றொபின்" முறையில் அனைத்து அணிகளும் மற்றைய அனைத்து அணிகளுடனும் விளையாடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க)

## துணுக்காய் வலய முன்பள்ளி விளையாட்டு

துணுக்காய் கல்வி வலயத்தின் கீழ் உள்ள முன்பள்ளி மழலைகளின் விளையாட்டு விழா துணுக்காய் கல்வி வலயத்தின் ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளரும் முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளருமான ஜே.ஜெயப்பிரகாஷ் தலைமையில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மாங்குளம் வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. மாலதி - முகுந்தன், சிறப்பு விருந்தினர்களாக ஒட்டுசுட்டான் கோட்டக் கல்விப் பணிப்பாளர் த.பங்கயற்செல்வன், பாண்டியன்குளம் மகாவித்தியாலயத்தின் அதிபர் ஆ.சுந்தரமூர்த்தி, துணுக்காய் பிரதேச செயலகப் பிரிவின் சிறுவர் முன்பராய அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெ.சுதாநாதன், சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் முல்லைத்தீவு மாவட்ட மேற்பார்வையாளர் கே.சிவனேசன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார்கள்.

இதன்போது துணுக்காய் கல்வி வலயத்தின்கீழ் உள்ள 84 முன்பள்ளிகளைச் சேர்ந்த மழலையர்கள் கலந்து கொண்டு பல்வேறு விளையாட்டு நிகழ்வுகளில் பங்கு பற்றவுள்ளனர். (க-15)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## "SLT Speedup Cycle Sawariya" காலிமுகத்திடலில் இன்று ஆரம்பம்

இலங்கையில் மிக நீளமான சைக்கிள் போட்டியான "SLT SpeedUp Cycle Sawariya" ஆண்களுக்கான போட்டி காலிமுகத்திடலில் செப்டெம்பர் 24, 2019 இன்று காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும். இது பாணந்துறை, இரத்தினபுரி, எம்பிலிப்பிட்டிய, வெல்லவாய, பண்டாரவளை, நுவரெலியா, கண்டி, குருநாகல், அநுராதபுரம், வவுனியா மற்றும் திருகோணமலை ஆகிய நகரங்கள் ஊடாக பயணித்து எதிர்வரும் செப்டெம்பர் 28 ஆம் திகதி தம்புள்ளையில் நிறைவடைகிறது. பெண்களுக்கான போட்டி இரண்டு நாட்கள் கொண்ட போட்டியாகும், இது செப்டெம்பர் 27 ஆம் திகதி கொழும்




பிலிருந்து ஆரம்பமாகி குருநாகல் வழியாகச் சென்று செப்டெம்பர் 28 ஆம் திகதி தம்புள்ளையில் முடிவடையும். சைக்கிள் பயணத்தில் மற்றொரு குறிப்பிடத்தக்க மைல்கல்லைக் குறிக்கும் வகையில் முதல் தடவையாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கனிஷ்ட மட்ட சைக்கிள் ஓட்டப் போட்டி நிகழ்வு (ஒரு நாள்) செப்டெம்பர் 28 ஆம் திகதி தம்புள்ளையில் ஆரம்பித்து கெக்கிராவ, ஹபரண வழியாக தம்புள்ளை வரை பயணிக்கும்.

ஆண்கள் போட்டியின் வெற்றியாளருக்கு ஒரு மில்லியன் ரூபாவும் சிறந்த அணிக்கு 100,000 ரூபாவும் பெண்கள் போட்டியின் வெற்றியாளருக்கு. 250,000 ரூபாவும் வழங்கப்படும். கனிஷ்டமட்ட போட்டிகளில் வெற்றி பெறுபவருக்கு ரூ. 100,000 பரிசாக வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(க)

## பொலிகண்டி பாலர் பாடசாலை விளையாட்டுக்கள்



கடந்த 22 ஆம் திகதி அன்று பொலிகண்டி பாரதி பாலர் பாடசாலை முன்பள்ளிமழலைகளின் வருடாந்த விளையாட்டு விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. நிகழ்வில் வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் சுகிர்தன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டிருந்தார். நிகழ்வின் இறுதியில் க.பொ.த. சாதாரண தரப்பரீட்சையில் சிறந்த பெறுபேறு பெற்ற மாணவர்களுக்கும் பல்கலைக் கழகம் அனுமதி கிடைத்தவர்களுக்கும் பணப் பரிசில்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டது. (க)

## வட மாகாண...

டத்தரணிகள் நீதிமன்றப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர்.

தேரரின் பூதவுடலை நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளாகத்தில் தகனம் செய்யக்கூடாது என முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றம் கட்டளை பிறப்பித்திருந்தது.

எனினும் நீதிமன்ற கட்டளையைப் புறந்தள்ளி ஞானசார தேரரின் தலைமையில் கூடிய பௌத்த பிக்குகளும் தென்பகுதியில் இருந்து அழைத்து வரபட்ட பெரும்பான்மை இனத்தவர்களும் சேர்ந்து பிள்ளையார் ஆலய வளாகத்தில் புத்த பிக்குவின் உடலைத் தகனம் செய்தனர்.

மேற்படி நடவடிக்கை நீதித்துறையின் செயற்பாட்டைக் கேள்விக்குறியாக்கியுள்ள நிலையில், நீதிமன்றக் கட்டளையை அவமதித்தவர்களையும் அதற்குத் துணை நின்ற பொலிஸாரையும் நீதிமன்றில் முற்படுத்த வேண்டுமெனக் கோரி வட மாகாண சட்டத்தரணிகள் இன்று நீதிமன்ற பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர். (ம-281)

## நீராவியடி ஆலய...

அமைதியின்மை ஏற்பட வாய்ப்புள்ளதால் பிக்குவின் உடலை பிரஸ்தாப இடத்தில் தகனம் செய்ய அனுமதிக்கக் கூடாது என முறைப்பாடு செய்தனர்.

குறித்த முறைப்பாட்டு மனுவை முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் பொலிஸார் நேற்றுமுன்தினம் தாக்கல் செய்தனர். முல்லைத்தீவு நீதிமன்ற பதில் நீதவான் நேற்று திங்கட்கிழமை வரை பிக்குவின் உடலை முல்லைத்தீவில் புதைக்கவோ, தகனம் செய்யவோ கூடாதென இடைக்காலத் தடை உத்தரவு வழங்கியிருந்தார்.

**நீதிமன்றத் தீர்ப்பு**

குறித்த வழக்கு முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்ற நீதிபதி லெனின்குமார் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இரு தரப்பிலும் சட்டத்தரணிகள் முன்னிலையாகி வாதப் பிரதிவாதங்களை முன்வைத்தனர். பிள்ளையார் ஆலய நிர்வாகத்தினர் சார்பில் சட்டத்தரணிகளான அன்ரன் புனிதநாயகம், மணிவண்ணன், சுகாஸ் உள்ளிட்ட 20 பேர் முன்னிலையாகியிருந்தனர்.

வாதப் பிரதிவாதங்களின் அடிப்படையில் இரு தரப்பினருக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் பிக்குவின் உடலை பிள்ளையார் ஆலய வளாகத்தினுள் இல்லாமல் செம்மலைக்கு அண்மையில் அமைந்துள்ள இராணுவ முகாமுக்கு அருகே உள்ள கடற்கரையில் தகனம் செய்ய அறிவுறுத்தியதுடன், பிக்குவின் சமாதி அமைப்பதற்கும் தடை விதித்து கட்டளையிடப்பட்டது.

**இறுதிச்சடங்கில் கலந்து கொள்ள அழைப்பு**

குறித்த தீர்ப்பின் பின்னர் எதிர்த்தரப்பு சட்டத்தரணிகள் ஆலய தரப்பு சார்பாக வாதாடிய சட்டத்தரணிகளை பிக்குவின் இறுதிச்சடங்கில் கலந்துகொள்ள அழைப்பு விடுத்தனர்.

அதன்படி பிக்குவிற்கு அஞ்சலி செலுத்துவதற்கும், உடலை தகனம் செய்வதற்கான இடத்தை அடையாளப்படுத்துவதற்கும் நீராவியடிப் பிள்ளையார் ஆலய பூசகர் மற்றும் சட்டத்தரணிகளான சுகாஸ், கணேஸ்வரன் ஆகிய மூவரும் சம்பவ இடத்துக்கு சென்றிருந்தனர்.

**ஆலய வளாகத்தில் உடலை எரிக்க பொலிஸார் பாதுகாப்பு**

ஆனால் நீதிமன்று அறிவுறுத்திய பகுதியில் உடலை தகனம் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்படாமல் பிள்ளையார் ஆலயத்தின் தீர்த்தக்கரைப் பகுதியில் தகனம் செய்வதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்றது.

இதை அவதானித்த பொதுமக்கள் மற்றும் சட்டத்தரணிகள் இணைந்து கடும் எதிர்ப்பினை வெளிப்படுத்தியதுடன் நீதிமன்ற கட்டளைப்படி செயற்படுமாறு பௌத்த பிக்குகளிடம் தெரிவிக்கும்படி பொலிஸாரிடம் கோரியிருந்தனர்.

ஆனால் தகனத்துக்கான ஏற்பாடுகள் தடையில்லாமல் நடைபெறுவதற்கு பொலிஸார் முழுமையான பாதுகாப்பை வழங்கியிருந்தனர்.

**பொதுமக்கள் மீது தாக்குதல்**

நீதிமன்ற தீர்ப்பு மீறப்படுவதனால் கொந்தளித்த மக்களை பொலிஸார் தள்ளி விழுத்தி தாக்கியதுடன் ஆலய வளாகத்துக்குள் உட்புகுவதற்கும் தடை விதித்தனர்.

இந்த நிலையில் நீதிமன்று அறிவுறுத்திய இடத்தை விடுத்து மன்றின் கட்டளையை மீறி, ஆலய வளாகத்தில் உள்ள புனிதமான தீர்த்தக்கரையில் இந்துக்களின் பாரம்பரிய மரபுகளை அவமதிக்கும் வகையில், மக்களின் எதிர்ப்புக் குரலுக்கு மத்தியில் கொட்டும் மழையிலும் பிக்குவின் உடல் தகனம் செய்யப்பட்டது. (ம-9,281)

# மோட்டார் சைக்கிள் சைலன்சரை உருமாற்றியவருக்கு 50 ஆயிரம் ரூபாய் தண்டம்

## யாழ். நீதிமன்றம் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவில் மதுபோதையில் வாகனம் செலுத்தியமை, மோட்டார் சைக்கிள் புகைபோக்கியை (Silencer) மாற்றியமைத்தமை உள்ளிட்ட 5 குற்றங்களைப் புரிந்த ஒருவருக்கு 84 ஆயிரத்து 500 ரூபாய் தண்டம் விதித்து யாழ்ப்பாணம் நீதிமன்ற மேலதிக நீதிவான் காயத்திரி சைலவன் உத்தரவிட்டார்.

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவில் போக்குவரத்து விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்ட நிலையில் அவருக்கு எதிராக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நேற்று குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கு யாழ்ப்பாணம் நீதிமன்ற மேலதிக நீதிவான் காயத்திரி சைலவன் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. குற்றஞ்சாட்டப்பட்டவர் மன்றில் முன்னிலையானார்.

மதுபோதையில் வாகனம் செலுத்தியமை, மோட்டார் சைக்கிள் சைலன்சரை உருமாற்றம் செய்தமை, வாகன வரிப்பத்திரம் இல்லாமல் வாகனம் செலுத்தியமை உள்ளிட்ட 5 குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. 5 குற்றச்சாட்டுக்களையும் எதிரி மன்றில் ஏற்றுக் கொண்டார்.

அதனடிப்படையில் குற்றவாளியாக அவரை அறிவித்த மன்று, மோட்டார் சைக்கிள் சைலன்சரை உருமாற்றம் செய்த குற்றத்துக்கு 50 ஆயிரம் ரூபாய் தண்டமும் மதுபோதையில் வாகனம் செலுத்தியமைக்கு 25 ஆயிரம் தண்டமும் ஏனைய 3 குற்றச்சாட்டுக்களுக்கும் 9 ஆயிரத்து 500 ரூபாய் தண்டமும் என மொத்தம் 84 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதித்து உத்தரவிட்டது.

குற்றவாளி தண்டப்பணத்தில் ஒரு பகுதியை நேற்றைய தினம் செலுத்த அனுமதித்த மன்று மீதியை அடுத்த தவணையின் போது செலுத்துமாறு திகதியிட்டு வழக்கை ஒத்திவைத்தது. (ம-3)

## இலங்கையில்...

டார் பௌத்த பிக்கு.

முல்லைத்தீவு செம்மலைநீராவியடி பிள்ளையார் ஆலய வளாகத்தில் அடாத்தாக தங்கியிருந்த பிக்குவின் உடல் நீதிமன்ற கட்டளையையும் மீறி நேற்று ஆலய வளாகத்தில் தகனம் செய்யப்பட்டது.

அதன் பின்னர் அங்கு வந்திருந்த பிக்குகளுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையே வாக்குவாதம் இடம் பெற்றது.

அப்போது சட்டத்தரணிகளை பார்த்து ஒரு பிக்கு, சடலத்தை என்ன செய்ய சொல்கிறீர்கள் என்று கேட்டார். அதற்கு சட்டத்தரணி சுகாஸ் பதிலளிக்கையில்,

நீதிமன்ற கட்டளை இருக்கிறது. ஆகவே நீங்கள் இங்கு உடலை தகனம் செய்ய முடியாது என தெரிவித்தார். அப்போது அந்த பிக்கு பதிலளிக்கையில் இலங்கையில் ஒரு ஆமதுறுவுக்கு முதல் இடம் கொடுக்க வேண்டும் என உங்களுக்கு தெரியாதா? இது கோட்ஸ் இல்லை. இது அரச பூமி என அதட்டும் தொனியில் பதிலளித்தார். (ம-9)

## குடும்பஸ்தர்...

காலை குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதில் அதே இடத்தைச் சேர்ந்த 55 வயதுடைய வல்லிபுரம் திருச்செல்வம் என்ற குடும்பஸ்தரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

பணி நிமித்தம் நேற்று முன்தினம் காலை சென்ற அந்த நபர் இரவு வரை வீடு திரும்பாததை அடுத்து மேற்கொண்ட விசாரணைகள் மற்றும் தேடுதல்களின் பின்னர் அவர் சடலமாக மீட்கப்பட்டார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-3)

## சட்டத்தரணி...

தாக்குதலில் காய மடைந்த மூவர் முல்லைத்தீவு பொது வைத் தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

தாம் பௌத்த பிக்குகளால் தாக்கப்பட்டோம் என குறிப்பிட்டு, சட்டத்தரணிகளான சுகாஷ், கணேஷ்வரன் மற்றும் ஆலய பூசகர் உள்ளிட்ட மூவர் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். (ம-3,10,281)

## முல்லைத்தீவு...

மாக உயரிழந்த பௌத்த பிக்குவின் உடலை முல்லைத்தீவில் தகனம் செய்ய அனுமதிக்கக்கூடாது என பொதுமக்களால் முன்வைக்கப்பட்ட முறைப்பாடு தொடர்பில் அந்த மாவட்ட நீதிமன்றில் விசாரணைகள் நேற்று இடம்பெற்ற நிலையில், பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் நீதிமன்றுக்கு வருகை தந்தார். (ம-3)

## வழமைபோல...

பௌத்த தேரரின சடலம் நேற்றையதினம் நீதிமன்ற தீர்ப்பையும் மீறி தகனம் செய்யப்பட்டது.

இதனை எதிர்த்து ஆலய நிர்வாகத்தினர், சட்டத்தரணிகள், பொதுமக்கள் எனப்பலர் தமது எதிர்ப்பை வெளியிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

எனினும் அவ் இடத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் எவரும் கலந்து கொள்ளவில்லை. வழமைபோலவே தமிழ் தேசியக் கூட்டமைப்பு இவ்வாறான போராட்டங்களில் கலந்து கொள்வதில்லை என அங்கு கூடிய பொதுமக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். (ம.3)

கொவிசெத
திகதி 2019.09.23
சீட்டிழுப்பு இலக்கம் 2249
Z 46 64 70 80

மஹஜன சம்பத
திகதி 2019/09/23
சீட்டிழுப்பு இலக்கம் 4012
D 9 1 8 1 8 8

சுபிரி வாசனா
திகதி 2019/09/23
சீட்டிழுப்பு இலக்கம் 1463
11 30 43 44 66 01 50

மெகா பவர்
திகதி 2019/09/23
சீட்டிழுப்பு இலக்கம் 0436
R 02 22 50 51 68

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1046
சீட்டிழுப்பு திகதி 23.09.2019 ஊதா
J 09 67 68 77
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 76,532,700/=

ராசி அதிர்ஷ்டம்
திகதி 23/09/2019 வெற்றி வாரம் 2626 வர்ணம் மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் மிதுனம் 40 47 52 60
செவ்வாய்க் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,408,812
2019/09/24ம் திகதி செவ்வாய்க் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுக்களாகும்

அத கோடிபதி
சீட்டிழுப்பு இல: 740 வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2019.09.23
விசேட இலக்கம் 9196
வெற்றி இலக்கங்கள் 02 61 62 63 ஆங்கில எழுத்து A
தொலைபேசி: 0112 333 546-47

சனிதா
SATURDAY FORTUNE
சீட்டிழுப்பு இல: 3239 வர்ணம் : நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2019.09.23
அடுத்த புதன்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 61,838,785/-
வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து போனஸ் இலக்கம்
14 42 43 67 I 35
தொலைபேசி: 0112 333 546-47

# செம்மலையில் பிக்குகள் அட்டகாசம்

## தமிழ் மக்கள் பேரவை வன்மையான கண்டனம்

(யாழ்ப்பாணம்)

தமிழினத்தின் மீதான திட்டமிட்ட அடக்கு முறையின் வெளிப்பாடாகவே, நீதிமன்ற உத்தரவை மீறி பொலிஸாரின் துணையுடன் செம்மலையில் பௌத்த பிக்குவின் உடலை தகனம் செய்த சம்பவம் அமைந்துள்ளது என தமிழ் மக்கள் பேரவை தனது கண்டனத்தை வெளியிட்டுள்ளது. பேரவையால் அனுப்பி வைத்த ஊடக அறிக்கையிலேயே மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நீதிமன்ற உத்தரவை நடைமுறைப்படுத்த வேண்டிய பொலிஸார் அவ் உத்தரவை மீறி அடாவடித்தனமாக நடந்துகொண்டவர்களுக்கு பாதுகாப்பாகவும் பக்கபலமாகவும் இருந்துள்ளதுடன் நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் நியாயத்தை கேட்ட தமிழ் சட்டத்தரணிகள், ஆலய பூசகர் மற்றும் அப்பாவித் தமிழ் மக்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதை வேடிக்கைபார்த்து நின்றமையானது, தமிழர்கள் மீதான அடக்குமுறையின் உச்சமாகும். இத்தாக்குதல் சம்பவத்தினையும் அத்துமீறலையும் தமிழ் மக்கள் பேரவை வன்மையாகக் கண்டிக்கின்றது.

முல்லைத்தீவு பழைய செம்மலை, நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளாகத்தில் அத்துமீறி அமைக்கப்பட்டிருக்கும் பௌத்த விகாரையில் தங்கியிருந்த, புற்றுநோய் காரணமாக உயிரிழந்த கொலம்பகே மேதாலங்கார கீர்த்தி என்ற பௌத்த பிக்குவின் இறுதிக் கிரியைகளை ஆலய வளாகத்தில் நடத்தவோ அவரது உடலை தகனம் செய்யவோ, சமாதி கட்டவோ, முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றம் தடையுத்தரவு பிறப்பித்திருந்த நிலையில், அங்கிருக்கும் இராணுவ முகாமிற்கு அருகேயுள்ள கடற்கரையில் உடலை தகனம் செய்யுமாறு நேற்று தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தது.

எனினும் அத்தீர்ப்பையும் மீறி தமிழர்களின் மரபுரிமை பிரதேசமாகவும் வழிபாட்டிடமாகவும் திகழ்ந்து வரும் நீராவியடிப் பிள்ளையார் ஆலய தீர்த்தக்கேணிக்கு அருகாமையில் பௌத்த பிக்குவின் உடலை தகனம் செய்துள்ளமை, இன வன்முறையை தூண்டும் நோக்கில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டதாகவே அமைந்துள்ளது.

பொறுப்புடன் செயற்படவேண்டிய பௌத்த துறவிகளும் சட்டம்-ஒழுங்கை பேணிப்பாதுகாக்க வேண்டிய பொலிஸாரும் தமிழர்களுக்கு எதிரான இச்செயற்பாட்டில் மிகத்தீவிரமாக ஈடுபட்டுள்ளமையானது மீண்டும் ஒரு இருண்ட யுகத்திற்கு இலங்கைத் தீவை கொண்டு செல்வதற்கான முன்னேற்பாடாகவே அமைந்துள்ளது. அவ் வகையில் அனர்த்தம் ஏதும் ஏற்படுவதற்கு முன்னதாக இவ்விடயத்தில் உரிய நீதியை நிலைநாட்ட சம்பந்தப்பட்ட தரப்பினர் உடன் கவனமெடுக்க வேண்டுமென தமிழ் மக்கள் பேரவை கேட்டுக்கொள்கின்றது என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)


### வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் 73, றக்கா வீதியில் சென். ஜோன் பொஸ்கோ பாடசாலைக்கு மிக அருகில் அமைந்துள்ள 3 அறைகள் மற்றும் அடிப்படை வசதிகளுடன் வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு - 071 822 9630 (387)

3 மாத கால அலுவலக பயிற்சிகள்
2019 இல் A/L எடுத்தவர்கள் மாத்திரம்
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
வாது கிளைகள்: கிளிநொச்சி, சாவகச்சேரி, நெல்லியடி, திருகோணமலை, கொடிகாமம், புதுக்குடியிருப்பு, சுன்னாகம், மானிப்பாய், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, மருதங்கேணி
எமது அனைத்து கிளைகளிலும் 3 மாத கால வேலை வாய்ப்பு பயிற்சிகள் உண்டு.
பயிற்சிக்கால ஊக்கத்தொகை -10'000/-
A/L பெறுபேறுகள் கிடைக்கும் வரையிலான காலப்பகுதியில் மட்டும்.
16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 0768226243 v2vacancies@gmail.com

### விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு

UK - 550 /=Kg
கனடா - 950 /=Kg
ஜேர்மனி - 650 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg
இத்தாலி - 700 /=Kg

DELIVERY IN 3-5 DAYS
யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● கொடிகாமம் ● வல்வெட்டித்துறை ● பருத்தித்துறை ● மானிப்பாய் ● திருகோணமலை ● சாவகச்சேரி ● சுன்னாகம் ● மருதங்கேணி
0768226240 V2 TRAVELS

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

### றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
தொடர்பு: றாஜ் - 077 679 6623 (9946)

### SPOKEN ENGLISH

கள பயிற்சியுடன் கூடிய 3 மாதக்கற்கைநெறி
இம்முறை A/L எழுதிய மாணவர்கள், பல்கலை புகுமுக மாணவர்கள் மற்றும் இளைஞர் யுவதிகளுக்கான புதியபிரிவுகள் ஆரம்பம்
3 மாத சனி, ஞாயிறு பிரிவு - பதிவுகள் 28.09.2019 வரை
1.காலை 08-10 2.காலை 10-12 3. மதியம் 01-03 4.மாலை 03-05
அனுமதி, புத்தகங்கள் மற்றும் சான்றிதழ் இலவசம்
ஒவ்வொருபிரிவிலும் 16 பேர் மட்டும் - ஆகக்குறைந்த வயதெல்லை 16
தொலைபேசியூடாகவும் பெயர்களைப்பதிவு செய்யமுடியும். (C-7685)
SAAMSON இங்கிலிஸ் வேர்க் சொப்
403, வெலிங்டன் சந்தி, பெருமாள் கோவிலடி, யாழ்நகர்.
077 621 4567 021 222 4282


### முல்லைத்தீவுப் பகுதியில்

# மோ.சைக்கிள் கடத்தி தீவைப்பு சந்தேகத்தில் இருவர் கைது

(தருமபுரம்)

கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக் கிளொன்று கடத்தப்பட்டு முல்லைத்தீவு நெட்டானா பகுதியில் வைத்து தீயிட்டு கொளுத்தப்பட்டமை தொடர்பில் இரண்டு சந்தேக நபர்களை தருமபுரம் பொலிஸார் நேற்று கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களிடமிருந்து இரு வாள்கள் மற்றும் இடியன் துப்பாக்கி ஒன்று என்பன மீட்கப்பட்டுள்ளது. இவர்கள் இருவரையும் இன்றைய தினம் நீதிமன்றில் ஆஜர்ப் படுத்த பொலிஸாரால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஞா-316)



# மரண அறிவித்தல்

## திருமதி செல்வநாதன் ரெங்கநாயகி அம்மாள்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வநாதன் ரெங்கநாயகி அம்மாள் நேற்று (23.09.2019) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் யாழ். C.S.K.பொன்னம்மா மில் ஸ்தாபகரும், யாழ். றோட்டறிகழக முன்னாள் தலைவரும் (1960/61), கொட்டடி நமசிவாய வித்தியாசாலை ஸ்தாபகருமாகிய அமரர்கள் C.S.A.நமசிவாயம் செட்டியார் - நாகரட்ணம் தம்பதிகளின் அருமை மகளும் அமரர்களான ஜெனகா நகுலராஜா செட்டியார், பாஸ்கரன் கந்தையா செட்டியார் ஆகியோரின் அன்புச் சகோதரியும் P.P.S பரமசாமி செட்டியார் - ஐயனை அம்மாள் (மட்டக்களப்பு குபேரன் மில் ஸ்தாபகர்) தம்பதிகளின் மருமகளும், பரமசாமி செட்டி செல்வநாதன் (யாழ் R.S அச்சகம், மேக்கூரி அச்சகம் உரிமையாளர், யாழ். றோட்டரிக் கழக முன்னாள் தலைவர் 1989/90, 1993/94) அவர்களின் அன்பு மனைவியும், யசோக்குமார் (சங்கன் லங்கா லிமிடட் கொழும்பு) Dr.லலித்குமார் (நவலோகா வைத்தியசாலை, கொழும்பு) தினேஷ்குமார் (நேசன் லங்கா பினான்ஸ், கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற நகுலராஜா செந்தூரனின் சிறிய தாயாரும், ஹரி சரண்யா (சங்கன் ஓவர்சீஸ், கொழும்பு), திருசாந்தி, சௌமிதா, றேமா, சீமா, ஆகியோரின் அன்பு மாமியாரும், சனாயெசி, மகிஷா, ஆயுர்ஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று (24.09.2019) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (398)

இல.160, கோவில் வீதி, யாழ்ப்பாணம். 077 971 6191 / 021 221 6130 தகவல் - குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.09.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.